# ஒரு படைப்பாளியின் வாழ்வும் நினைவுகளும்





அமரர் எம். நாமதேவன்

## நினைவு மலர்

11.10.2008

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு படைப்பாளியின்
# வாழ்வும்
# நினைவுகளும்

தொகுப்பாசிரியர்

கண்டி - இரா.அ. இராமன்

அமரர் எம். நாமதேவன்

*நினைவு மலர்*

11-10-2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கம் வழிக்காட்டி


உங்களோடு ஒரு நிமிடம் (இரா.அ. இராமன்) 05

அமரர் திரு. நாமதேவன் அவர்களை நினைவுகூருமுகமாக
(பேராசிரியர் க. அருணாசலம்) 06

கண்டி கல்விப் பணிமனையின் சார்பில்.....(திருமதி. இ. சிவரட்ணம்) 07

சமூகத்தைப் பற்றி சிந்தித்த ஒரு படைப்பாளி (ஆர். மகேஸ்வரன்) 09

என்றும் வாழும் நாமதேவன் எனும் நாமம் (சே. தமிழ்ச் செல்வன்) 10

ஒரு சிறந்த படைப்பாளியை இழந்து விட்டோம்
(கண்டி இரா.அ. இராமன்) 12

தியாக பூமியிலே...! 15

ஒரு புதிய போராட்டம் 22

துளிர் விடும் நம்பிக்கை 32

மலரத் துடிக்கும் குறிஞ்சி மலர்கள் 41

மலையக சமூகத்தின் உயர்வுக்காகப் போராடிய ஒரு ஆத்மா
மௌனித்தது (முத்து சம்பந்தர்) 46

என்னவரைப் பற்றிய என் எண்ணங்கள்.....
(திருமதி. சரோஜா நாமதேவன்) 48

சேவை மனப்பான்மையும் அர்ப்பணிப்பும் கொண்ட
அமரர் நாமதேவன் (திரு. பி. பெரியசாமி.) 51

ஐயாவைப் பற்றிய எனது நினைவலைகள்
(திரு. என். கிருஷ்ணகுமார்.) 54

நீங்காத நினைவு.... (திரு. டி.ஜே. பாக்கியநாதன்) 57

கடமை உணர்வு கொண்ட கல்விப் பணிப்பாளரே!
(க. பிரபாகரன்(ஆசிரியர்)) 59

சக உதவி கல்விப் பணிப்பாரே உங்களைப் பற்றிய
என் நினைவுகள்..... 61

Loving Son (Manoj) 62

You Inspire us! (Rev Daniel, Koilpillai) 63


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Guy T.Peter J.P. 65

Tribute (Sadhana) 66

Unforgettable Brother (Mrs. C.K.M.R. Joyce) 67

The Noble Soul (N. Arunkaanth) 68

அமரர் நாமதேவனுக்கு ஒரு நமஸ்காரம் 73

அண்ணனைப் பற்றிய நினைவுத் துளிகள்..... 77

மலையக மணிச்சுடரே..... (செல்வநிதி - பேரேரா) 79

நேர்த்தியான கொள்கை (திரு. எஸ். யோகராஜ்) 81

அன்பு மைத்துனா...... (ஜெயா அக்கா) 82

என் பார்வையில் அண்ணன் (திருமதி. ரதி தேவசுந்தரம்) 83

தோழியின் துணைவருக்கு (திருமதி பவானி தேவதாஸ்) 87

என்று நினைவில் S. துரைராஜ் 89

மலையக சமுதாயத்துக்கான அமரர் நாமதேவனின் கனவுகள்
திரு. M.E. சாமுவேல் 90

திருவாளர். மாரிமுத்து நாமதேவன் அவர்கள்.....
(சரோஜாவின் சகோதர சகோதரிகள்) 91

வாடாமலர்..... (திரு. எம். எஸ். பிரபாகர்(அதிபர்)) 92

மறைந்த என் ஆசானுக்கு (மாணவி லோசினி கணகவிஜயன்) 93

நாமம் பெற்ற தேவனுக்கு - ஓர் நன்றி மறவா
நினைவஞ்சலி அதிபர், ஆசிரியர்கள் 94

இன்றும் என்றும் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் (எஸ். பிரியங்கா) 95

வந்தனை செய்திடோம் 98

புதிய வழியமைக்க புறப்படு 99

தொடர்கின்ற துயரங்கள் 101

ஓடி வாராய் கண்ணே! 102

வீர மைந்தராய் புறப்படு 103

இவரது விருந்தோம்பல் வியக்கத்தக்கது 105

நன்றி நவிலல் 107


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மலையக மேம்பாட்டிற்கும்
மக்களின் எழுச்சிக்கும்
நாவல், சிறுகதைகளை
படைத்து
அமரர்களான அனைத்து
மலையக
படைப்பாளிகளுக்கும்.

இந்நூல் இவர்களுக்கு கௌரவத்துடன் சமர்ப்பணம் செய்யப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு ஒரு நிமிடம்

மலையக படைப்பாளிகளில்
ஒருவராக,
கல்வியாளராக,
இனிமையும்,
அமைதியும்
கொண்டவராக
விவசாய ஆசிரியராக, துணை அதிபராக,
அதிபராக, உதவிக்கல்விப்பணிப்பாளராக
மலையக மண்ணில் வலம்வந்த
எம். நாமதேவன்
அமரராகி நாற்பது நாட்கள்
சமுகத்தை, இச்சமுக
மக்களை தமிழ் இலக்கியத்தை
மலையக மாணவர்களின்
கல்வி மேம்பாட்டை
சிந்தித்த ஒருவராக,
தனது குடும்பத்தை
நேசித்தவராக
சிறுகதைகளையும்
கவிதைகளையும்
கட்டுரைகளையும்
எழுதி குவித்தவராக
வாழ்ந்து
எம்மைவிட்டு மறைந்தாலும்
இன்றும் எம்மோடு
வாழும் இவரின்
சமுக, கல்வி இலக்கியப்
பணிகளை நினைவுக்கூரும்
முகமாக அன்னாரது குடும்பத்தவர்களின்
அனுசரணையோடு
ஒரு படைப்பாளியின்
வாழ்வும் நினைவுகளும்
எனும் இந்நினைவு மலரை
தமிழ்த்தாயின்
காலடியில் சமர்ப்பிக்கின்றோம்

கண்டி இரா.அ. இராமன்
தொகுப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. நாமதேவன் அவர்களை நினைவுகூருமுகமாக

பேராசிரியர் க. அருணாசலம்
தமிழ்த் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை.

---

திரு. நாமதேவன் அவர்களது நினைவு மலருக்கு என்னை எழுதித் தரும்படி எனது துணைவியார் (ஆசிரியை கண்டி விவேகாந்தா தமிழ் மகா வித்தியாலயம்) கேட்டுக் கொண்டார். திரு. நாமதேவன் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டாத போதிலும், அவர் கல்வி உலகத்தில் பெருமையாகப் பேசப்படும் ஒருவர் என்பதனை நான் அறிவேன். அதனால் ஒருசில வார்த்தைகளைக் கூறலாம் என நினைக்கிறேன். அவர் தனது சேவைக் காலத்தில் ஆசிரியராக, அதிபராக, உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வுகள் பெற்றுப் பல சேவைகளை ஆற்றிச் சிறந்ததொரு எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்குவதற்கு அரிய பல பணிகளைச் செய்தமை போற்றற்குரியது.

அவர் அதிபராக இறுதியாக கடமைபுரிந்த பாடசாலை கண்டி கிரஸ்துநாதர் ஆலய(C.C) தமிழ் வித்தியாலயம். அப்பாடசாலை தற்போது கண்டி விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம் என அழைக்கப்படுகிறது. எனவே தற்போதைய கண்டி விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் வளர்ச்சிப் படிகளில் அவருக்கும் சிறந்ததோர் பங்குண்டு என்பதனை எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ஏதோ பிறக்கிறார்கள் அமரத்துவம் அடைகிறார்கள் என்றில்லது. அன்னார் ஒழுக்கமுள்ள மாணவ சமுதாயத்தை உருவாக்கியதுடன் மட்டுமல்லாது நேரம் தவறாமை, கடமை, கண்ணியம். கூட்டுப்பாடு போன்றவற்றிற்கு எடுத்துக் காட்டாகவும் முன்மாதிரியாகவும், ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் விளங்கினார்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன், அவரது குடும்பத்தினருக்கு இறைவன் அருள் புரிவாராக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி கல்விப் பணிமனையின் சார்பில்.....

திருமதி. இ. சிவரட்ணம்
கண்டி வலய மேலதிக கல்விப் பணிப்பாளர்

---

எம் மத்தியில் ஒரு பண்புள்ளவராகவும், நல்லவராகவும் வாழ்ந்து அமரத்துவம் அடைந்த அமரர் திருவாளர் எம். நாமதேவன் அவர்கள் மலையகத்தில், ஆசிரியராகவும், அதிபராகவும் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றிய பெருமையைப் பெற்றவர்.

இளம் பருவத்திலே தனது கல்விப்பணியை ஆரம்பித்த அமரர் நாமதேவன், 1976ம் ஆண்டு கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலைக்கு ஆசிரியராக இடமாற்றம் பெற்று வந்தார். அக்காலத்தில் கற்பித்தலுடன் மட்டும் தனது கடமையை முடித்துவிடாது. தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகள், தமிழ் மொழித்தினப் போட்டிகள் ஆசிரியர் வதிவிடக் கருத்தரங்குகள், பரீட்சைகள் போன்ற செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டார்.

1988ம் ஆண்டு அதிபராகப் பதவி உயர்வு பெற்று விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகப் பதவி ஏற்றார். அக்கால கட்டத்தில் அக்கல்லூரியின் தரத்தை உயர்த்துவதற்காக அரும் பாடுபட்டார். அதில் வெற்றியும் கண்டார். அவர் அதிபராக பணிபுரிந்த காலத்தில் கண்டி வலய அதிபர் சங்கத்தின் முக்கிய உறுப்பினராக செயற்பட்டு வந்தார். அதிபர்களின் நலனுக்காகவும் பாடுபட்டுழைத்தார்.

1997ம் ஆண்டு கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்று, அட்டன் கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுக் சென்றார். அட்டன் வலயத்தில் பின்தங்கிய நிலையிலிருந்த பாடசாலைகளில், அவரின் மேற்பார்வைக்கு உட்பட்ட பாடசாலைகள் அனைத்தும் அவரால் சிறந்த முறையில் கண்காணிக்கப்பட்டன.

2003ம் ஆண்டில் மீண்டும் தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்குப் பொறுப்பான கோட்டக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டார். அக்காலகட்டத்தில் தான் அவருடன் பணியாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. ''மலையகத் தமிழ் மாணவர்களின் உயர்வே தனது குறிக்கோள்'' என செயற்பட்டு வந்தார். கண்டி வலயத்தில் கலஹா, தெல்தோட்டை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச பாடசாலைகளின் அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தினார். சிறப்பாக சேவையாற்றி 2005ம் ஆண்டு தனது அறுபதாவது அகவையில் சேவையிலிருந்து இளைப்பாறினார்.

நிமிர்ந்த நடை; நேரான பார்வை; அமைதியான அடக்கமான பேச்சு; சீரான உடை; நேரம் தவறாமை; சேவை மனப்பான்மை; அடக்குமுறைகளைக் கண்டு கோதிக்கும் தன்மை என்பன அவருக்கே உரித்தான சிறப்பம்சங்களாகும்.

சாடிக்கேற்ற மூடிபோல அவருக்கு தர்மபத்தினியாக வாய்த்தவர் திருமதி சரோஜா நாமதேவன் அவர்கள். அவர்களுடைய வாழ்க்கை மிகவும் எளிமையானது; அடக்கமானது; ஆடம்பரமற்றது; ஆனால் உயர்வானது. நாமதேவன் தம்பதியினரின் கல்விப்பணி மகத்தானது. இல்லறமாகிய நல்லறம் பூண்டு இருவரும் சமூகத் தொண்டாற்றி வந்தனர். அவர்கள் வாழ்வில் இன்பமே மலர்ந்தது. அதனால் இருவரும் நலமுடன் நல்லறங்கள் புரிந்து வந்தனர். ஆனால் இன்று..., தனது அன்பு மனைவியையும், தான் பாராட்டி, சீராட்டி வளர்த்த மகனையும் மட்டுமல்ல உற்ற நண்பர்களையும், உறவினர்களையும், ஆசிரிய மாணவ சமுதாயத்தையும் தவிக்க விட்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தைப் பற்றி சிந்தித்த ஒரு படைப்பாளி

ஆர். மகேஸ்வரன்
சிரேஷ்டதுணை நூலகர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கை மணித்திருநாட்டில், மலையகத்தில் எழில்மிகு கண்டி நகரில் நான்கு பக்கமும் மலைகளால் சூழ்ந்த ஒகஸ்டாவத்த தோட்ட சூழலில் வாழ்ந்து பேராதனை தமிழ் வித்தியாலயத்தில் கல்விகற்றவர்.

மரபு வழிக் கல்வியையும், முறைசாராக் கல்வியையும் வளர்த்து மக்களின் நன்மதிப்பினை பெற்றவர். மாணவர்கள் மீது அன்பும், உயர்ந்த மதிப்பும் மேன்மையும் கொண்டவர். ஒரு சிந்தனையாளர், தர்க்கவியலாளர், வேற்று மொழியிலும் குறிப்பாக ஆளும் வர்க்க மொழியிலும் தேர்ச்சி பெற்றவர். யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் கற்றகாலங்களில் எனது தகப்பனாரின் ஊரில், எமது வீட்டில் தங்கியிருந்த காலங்கள், ஊரவர்களுடன் நற்புடன் பழகிய காலங்கள், மலையகம் பற்றிய உயர்ந்த கருத்துக்களை மற்றவர்கள் அறிய செய்தமையெல்லாம் நான் அறிவேன். தமிழ்த்தின போட்டிகளின் போது ஏற்படும் பிரச்சினைகளை அவர் கையாண்ட முறைகள், வழங்கிய தீர்ப்புகள் அவரது குண இயல்புகளை பறைசாற்றியவை. அமைதியான சுபாவமும் எளிமையான தோற்றமும் கொண்டவர். இலக்கியத்துறையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். கண்டியில் ஆசிரியர்களால் நடத்தப்பட்ட நாடகங்களில் நடித்து மலையக கல்விக்கு விழிப்புணர்ச்சியை நாடகங்கள் மூலம் ஏற்படுத்த முயற்சித்தவர். கண்டிப்பான ஒரு ஆசிரியராக, அதிபராக மாணவர்களை வழிநடத்தியவர். சமூகம் மீது நல்ல ஆர்வமிக்கவர். சமூகத்தைப் பற்றி சிந்திப்பவர்.

கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலை, கண்டி விவேகானந்தா பாடசாலை ஆகியவற்றின் வளர்ச்சியில் அவர் ஆற்றிய சேவை அளப்பரியது. அவரது அரசியல் ஆர்வம் பற்றியும் நாம் அறிவோம். எப்போதும் சமதர்ம நிலையில் சிந்தித்தவர். மலையகத் தமிழ் இனத்தின் இலக்கியத் திறனுக்கும் ஓர் எடுத்துகாட்டாக திகழ்ந்தமை, அவரது சிறுகதை கருப்பொருள் மூலம் அனைவரும் அறியக்கூடியது. பொது வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் சிறந்த ஒழுக்க நெறிகளை பின்பற்றி வாழ்ந்து மறைந்த அவரைப்பற்றிய எண்ணங்கள் அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்ல அவருடன் பழகிய எல்லோரது நினைவிலும் நிலைத்து நிற்கும். அவரது ஆன்ம ஈடேற்றத்திற்கு எனது பிராத்தனைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் வாழும்
# நாமதேவன் எனும் நாமம்

செ. தமிழ்ச் செல்வன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
கண்டிவலயம்

நடையிலே ஒரு கம்பீரம், உடையிலே ஒரு தூய்மை, பேச்சிலே கனிவு, பார்வையிலே தெளிவு, பழகுவதில் தனித்திறமை, இதனை ஒருங்கே அமையப் பெற்றவர் தான் மதிப்பிற்குரிய நாமதேவன் ஐயா அவர்கள்.

ஓர் ஆசிரியராய் தன் கடமையை ஆரம்பித்து சிறந்த அதிபராய் புகழ்பெற்று ஆளுமைமிக்க கல்விப்பணிப்பாளராய் ஓய்வு பெற்றவர். கண்டி மாநகரில் ஆசிரியராய், அதிபராய் இருக்கும் காலத்தில் மலையக கல்வி வளர்ச்சிக்கு அத்திவாரம் இடுவதில் இவரது பங்கு அளப்பரியதாய் காணப்பட்டது. அதன் பலன் இன்று அதிபராய், ஆசிரியர்களாய் திகழும் பலர் இவரின் வழிகாட்டலில் வந்தவர்களாவர்.

தமிழ் மொழிமூல பாடசாலைகளை ஒன்றிணைத்து பல செயற்றிட்டங்களை முன்னெடுத்த கண்டிவட்டார பாடசாலை அதிபர்களில் முதன்மையாக திகழ்ந்தவர். அட்டன் பிரதேசத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளராய் இருந்து கண்டி கோட்டத்திற்கு மாற்றலாகிவந்த பின் இவரின் சேவை மேலும் விரிவடைந்தது. கஷ்டப்பிரதேச பாடசாலைகள் நிறைந்து காணப்பட்ட பாத்தஹேவாஹெட்ட கோட்டத்தின் பாடசாலைகளின் வள அபிவிருத்திக்கும், கல்வி அபிவிருத்திக்கும் பல திட்டங்களை முன்வைத்து செயற்பட்டார்.

தமிழ்மொழி மூல பாடசாலைகளை ஒன்றிணைத்து மலைமகள் மத்திய கல்லூரியில் பிரமாண்டமான விளையாட்டுப் போட்டியை நடாத்திக் காட்டினார். அதன் பிறகு இன்று வரை அவ்வாறான போட்டியை ஒழுங்கு செய்யமுடியாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தன் மனதில் பட்ட கருத்தை எவ்விடத்திலும் தயக்கமின்றி கூறும் தன்மைபெற்றவர். பாடசாலைகளுக்கு செல்லும் இவர், பாடசாலை காரியாலயத்தில் மாத்திரம் தன் கடமையை வரையறுத்துக் கொள்ளாமல் வகுப்பறைகளுக்குச் சென்று மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாக மேற்பார்வை செய்து வழிகாட்டுவார். பாராட்டவேண்டிய தருணத்தில் அவ்விடத்திலேயே பாராட்டி ஆசிரியர்களை கௌரவிக்கும் இவரின் பண்பு போற்றத்தக்கது.

இதயநோய் ஏற்பட்டு ஓய்விலிருந்து மீண்டும். கடமைக்கு வந்தவர். தான் ஒரு நோயாளி என்பதினை மறைசாற்றாது முழுமையாக கடமைகளில் ஈடுபட்டு இருந்ததினை காணமுடிந்தது.

அதிபர்கள் நிர்வாக ரீதியில் இடர்படும்போது தேவையான ஆலோசனைகளை முறையாக வழங்குவதில் கைதேர்ந்தவராய் திகழ்ந்தார்.

ஒரு சமயம் சக பணிப்பாளர் ஒருவர் தமிழ்மொழி மூல பாடசாலை அதிபர்களுக்கான கூட்டத்திற்கு அழைப்பு அனுப்பி இருந்தார். அவ்விபரத்தை இவருக்கு அறிவிக்கவில்லை. குறிப்பிட்ட தினத்திற்கு முதல் நாள் குறிப்பிட்ட பணிப்பாளரை சந்தித்த இவர் எனது கோட்டத்தில் உள்ள எனது அதிபர்களுக்கு எனது அனுமதி இல்லாமல் எவ்வாறு கூட்டத்திற்கு அழைப்பு அனுப்ப முடியும் என வாதிட்டு அக்கூட்டத்தை ரத்துசெய்தார். இந்நிகழ்வானது இவரின் தைரியத்தையும் நேர்மையை வாதிட்டு கூறும் இயல்பையும் காட்டியது.

கல்வியாளராக மாத்திரமன்றி இவர் ஒரு சிறந்த இலக்கிய வாதியாகவும் திகழ்ந்தார். இவரின் பல சிறுகதைகள் தேசிய பத்திரிகைகளில் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சிறந்த பேச்சாளராகவும், விமர்ச்சகராகவும் திகழ்ந்தார் என்பது இவருடன் நெருங்கி பழகியவரக்ளுக்கு நன்கு தெரியும்.

பொதுவாக உயர்தர வகுப்புகளுக்கு செல்லும் இவர் மாணவர்களிடம் ''மலையக எழுத்தாளர்களின் பெயர்களை கூறுங்கள்'' என கேட்பது வழக்கம். அப்போது மாணவர்களின் பதிலை அறிந்து பலமுறை என்னிடம் குறைபட்டுள்ளார். ''மலையக மண்ணில் பிறந்த மாணவர்கள் மலையக இலக்கிய வாதிகளை அறியாமல் உள்ளனர். இதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என அடிக்கடி என்னிடம் கூறுவார்.

சமய ரீதியில் தான் ஒரு சமயம், மனைவி ஒரு சமயம் என்று இருந்த போதிலும் பிறசமயத்தை மதித்து வாழும் பண்பு இவரிடம் நிறைந்தே காணப்பட்டது. சமயவாதியாக, இலக்கிய வாதியாக, கல்வியாளனாக வாழ்ந்தவர். பண்புமிக்க மனிதனாய் மண்ணைவிட்டு மறைந்தார். இவரின் பூதவுடல் மறைந்தாலும் புகழுடம்பு மலையக மண்ணில் வாழும் என்பது உண்மை.

ஒரு பணிப்பாளரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சிறந்த படைப்பாளியை இழந்து விட்டோம்

கண்டி இரா.அ. இராமன்
தலைவர்,
மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்

---

மலையகம் பல இலக்கியப்படைப்பாளிகளை இழந்துள்ளது. இவர்கள் மலையக மக்களின் துன்பதுயரங்களை, அவர்களது வாழ்வின் மேடுபள்ளங்களை தோட்ட நிர்வாகத்தால் இவர்கள்பட்ட கோடுமைகளை தோட்டத் தொழிலாளர்கள் எவ்வாறு தங்களது உரிமைகளை போராடி பெறுவது மற்றும் இவர்களது வீட்டுப் பிரச்சினைகளை கருவாகக் கோண்டு சிறுகதைகளாக, நாவல்களாக படைத்து இம்மக்களின் சோகத்தை உலகறியச் செய்தவர்கள்.

வடபுலத்தைச் சேர்ந்த டாக்டர் நந்தி டாக்டர் தி ஞானசேகரன், புலோயூர் க. சதாசிவம், யோ. பெனடிற் பாலன், கே. ஆர். டேவிட் போன்றர் நாவல் சிறுகதைகளை படைத்து இம்மக்களின் பிரச்சினைகளை வெளிச்சத்திற்கு கோண்டுச் சென்றவர்கள்.

இவர்கள் மலையகத்திற்கு தோழில் நிமித்தமாக வருகைத்தந்து இம்மக்களோடு வாழ்ந்து பழகி, இவர்களின் துன்ப துயரங்களை நேரில் பார்த்து இலக்கியப்படைத்த இலக்கியப் போராளிகள்.

அதைப்போலவே மலையக மண்ணை பிறப்பிடமாகக் கோண்ட எழுத்தாளர்கள், படைப்பாளிகள் இம்மக்களை பற்றிய யதார்த்தமான படைப்புகளை எழுதியுள்ளார்கள். இன்றும் எழுதி கோண்டுள்ளார்கள்.

இவர்களுள் டாக்டர் பெனடிக்பாலன், என்.எஸ். இராமையா, புலோயூர் சாதசிவம், குறிஞ்சித் தென்னவன், கவிஞர் மலைத்தம்பி, க.ப.லிங்கதாசன், பூண்டுலோயா தர்மு போன்றோர் மறைந்தும் இன்றும் எம்மோடு வாழ்ந்துகோண்டிருப்பவர்கள். இவர்கள் படைத்த படைப்புகள் என்றும் நிலைத்து நிற்கும் காவியங்களாகும்.

இவர்களின் வருசையில் சமுக உணர்வும், படைப்பாற்றலும் கோண்ட எழுத்தாளர் அமரர் எம். நாமதேவனும் நிறைய சிறுகதைகளையும், கவிதைகளையும் எழுதியுள்ளார். தேசிய பத்திரிகைகளிலும் மலையக அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த கட்டுரைகளையும், மலையக பாடசாலை அதிபர்கள், ஆசிரியர் சார்ந்த கட்டுரைகளையும். பாடசாலை அபிவிருத்தி சம்பந்தமான கட்டுரைகளையும் நிறையவே எழுதியுள்ளார்.

ரங்கல பேர்னனாட் தோட்டத்தில் பிறந்த இவர் பேர்ன்னாட் தோட்டப்பாடசாலை, பேராதனை தமிழ் வித்தியாலயம், பிட்லட்ன கல்லூரி, வவுனியா அரசினர் விவசாயப் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றுள்ளார்.

ஆசிரியராக, துணை அதிபராக, அதிபராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியுள்ள இவர் ஒரு விவசாய ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது. (வவுனியா அரசின் விவசாய கல்லூரியில் ஒரு வருடம் பயிற்சி எடுத்துள்ளார்) கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் தொழிற் கல்வியை கற்றுள்ளார்.

மலையக கல்வியும் மலையக மாணவர்களின் கல்வி மேம்பாடும் சிறப்பாக திகழ வேண்டும் என்பது இவர் கண்ட கனவாகும். அதற்காக தீவிரமாக உழைத்தவர்.

அத்துடன் இலக்கிய வளர்ச்சியில் மிகுந்த நாட்டம் கொண்ட இவர் சிறுகதை, கவிதை, கட்டுரை என்று பத்திரிகைகளிலும். சஞ்சிகைகளிலும் நிறைய எழுதியுள்ளார். இவரது படைப்புகள் வீரகேசரி, சிந்தாமணி, தினக்குரல் கொந்தளிப்பு, குன்றின் குரல், கண்டி இலக்கியச் செய்திமடல் ஆகியவற்றிலும் பிரசுரமாகியுள்ளது.

இவரது இந்நினைவு மலரில் அவரது நான்கு சிறுகதைகளும், கவிதைகளும் இடம்பெறச் செய்துள்ளேன் இச்சிறுகதைகள் இவரது சிறுகதை ஆளுமையை வெளிப்படுத்துவதை காணலாம்.

ஒரு நல்ல இலக்கியப் படைப்பாளியையும், கல்வியாளரையும் இழந்து தவிக்கும் அனைவருக்கும் எமது மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் தனது கவலையை தெரிவித்துக் கொள்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# எம். நாமதேவனின்
# சிறுகதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக பூமியிலே...!

''நேரமாச்சு பெட்டிய தூக்குங்கப்பா'' முத்தையா கங்காணி அவசரப்படுத்தினார்.

''ஐயோ........ என் மவராசன் போறீங்களே....... இனி எப்ப ஒங்க மொகத்த பாக்கப்போறோம்'' இரண்டு நாட்களாக நித்திரை விழித்து அழுது துவண்டுபோன மருதாயி பாட்டி கடைசி ஒப்பாரி வைத்தாள்.

''அப்பா எங்கள விட்டுட்டுப் போறீங்களே.....! இது மகள்மார் புலம்பல். ''தாத்தா..... ஐயோ தாத்தா....'' பேரக் குழந்தைகள் கத்தினார்கள்.

ஊ....ஊ....ஊ... சங்கொலி எழுந்தது. ''சேகண்டிய அடிங்கடா.... ஏய் தப்புக்காரன் முன்னால் போ.... நெருப்புச்சட்டி இங்கிட்டு வாப்பா....'' கங்காணி ஓடி ஓடி கட்டளையிட்டுக் கொண்டிருந்தார்.

''நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க..............''

திருவாசகம் ஓதிக்கொண்டு இளவட்டங்கள் இரண்டு முன்னே செல்ல பின்னால் பிரேதப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஆறுபேர் நடந்தார்கள். அதைத்தொடர்ந்து முப்பத்தைந்து பேர்வரை ஊர்வலமாகச் சென்றார்கள். அதிலே சில கிராமத்துச் சிங்களவர்களும் இருந்தார்கள்.

மேட்டு லயத்திலிருந்து ஆரம்பித்த ஊர்வலம் சிறிய ஒற்றையடிப்பாதையில் இறங்கியது. அந்த முந்நூறு ஏக்கர் தேயிலைத் தோட்டத்தை அரசாங்கம் பொறுப்பேற்றதோடு பிரித்துக்கொடுத்த காணியில் புதிதாக பல வீடுகள் முளைத்துவிட்டன. அதனால் பெரிதாக இருந்த அந்த ரோடு இன்று இருவர் மட்டும் விலகிக்கொள்ளும் சிறிய பாதையாகிவிட்டது.

வளைந்து வளைந்து இறங்கிய பாதையில் ஊர்வலம் மிகவும் அவதானமாகச் சென்று கொண்டிருந்தது. ''பத்தரமாக போங்கப்பா....'' முத்தையா கங்காணி சத்தம் போட்டுக் கொண்டார்.

லயத்திலிருந்து முந்நூறுயார் தூரத்தில் இருந்த முச்சந்தி வந்ததும் பெட்டியை மூன்றுதரம் சுற்றி தலைப்பாகம் மயானத்தை நோக்கி நிறுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளிமுட்டி உடைக்கப்பட்டதும் ஊர்வலம் நகர்ந்தது.

இன்னும் முந்நூறு யார் தூரம் சென்றால்தான் புதிதாக வெட்டப்பட்ட பெரிய பாதையை அடையலாம். அங்கிருந்து இன்னும் அரைமைல் தூரத்தில் தான் மையம் புதைக்க புதிதாக ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

"எல்லாருக்கும் பெரிய மனுஷனா இருந்தவரும் போயிட்டாரு......" கூட்டமாகச் சென்றவர்களில் ஒருவர் இப்படிச் சொல்லிக் கொண்டார். ஆமாம் பெட்டிக்குள் இருந்த பிரேதம்.......?

மருதைவீரன் தாத்தா தனது ஐந்தாவது பரம்பரையையும் கண்டவர். அந்த காட்டு பங்களா தோட்டத்துக்கு அவர்வந்து எண்பத்தைந்து வருடங்களாகி விட்டன. வேட்டையாடுவதற்காக வெள்ளைக்காரன் காட்டுக்குள் கட்டியிருந்த பங்களாதான் காட்டுபங்களா. காலப்போக்கில் அந்தக் காட்டுப்பகுதியும் துப்பரவு செய்யப்பட்டு தேயிலைத் தோட்டமாகியவுடன் அதற்கு காட்டுபங்களா என்ற பெயரையே வைத்து விட்டார்கள்.

காடுவெட்டி கொட்டை போட்டு கன்றுநாட்டு முள்ளுக்குத்தி கவ்வாத்து வெட்டி காணுவெட்டி கட்டடம் போட்டு...... அப்பப்பா....... மலைவேலை ஸ்டோருவேலை என்று இன்னும் எத்தனையோ வேலைகள். அவர் கைபடாத வேலையும் இல்லை. அந்தத் தோட்டத்தில் அவர் கால்படாத இடங்களும் இல்லை. அவ்வளவு வேலையும் அவருக்குக் கை வந்த கலை.

வெள்ளைக்காரன் காலத்தில் அவர்தான் அந்தத்தோட்டத்து பயில்வான் என்றும் சொல்வார்கள். மாடாய் உழைத்து ஓடாயத் தேய்ந்து போனவர்.

அந்தத்தோட்டத்து சூப்பிரண்டனாக இருந்தவர்கள் மருதைவீரன் தாத்தாவிடம் தான் வேலை கற்றுக்கொண்டார்கள் என்றால் பிறகு சொல்லத் தேவையில்லை.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் பென்சனாகி விட்டார். அதோடு அவர் வேலை போதுமென்று விட்டார்கள் போலும். அதன் பின் முடிந்தளவு வேலைகளைச் செய்து வீட்டுக்கு ஏதாவது வருமானத்தைத் தேடினார். இருபது வருடங்களுக்கு முன் தோட்டங்களெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுடமையாக்கப்பட்ட போது அந்தக் காட்டுபங்களாதோட்டமும் எடுக்கப்பட்டது.

கிராம விஸ்தரிப்புக் கொள்கையில் தோட்டம் துண்டு துண்டாக்கப்பட்டது. பலகோடி ரூபா வருமானத்தைக் கொடுத்த நிலங்கள் பாழாக்கப்பட்டன.

கிராமத்தவர் தோட்டத்துக்குள் குடியேற்றப்பட்டார்கள். மருதைவீரன் தாத்தா வேதனை பட்டார்.

அவர்கள் கைபட்டு பொன்கொழித்த பூமியைப் பார்த்து கண் கலங்கினார். அவர் போல் எத்தனை பேர் அந்த மண்ணில் வியர்வையைக் கொட்டியிருப்பார்கள். எத்தனை பேர் கண்ணீரைச் சிந்தியிருப்பார்கள் எத்தனை பேர் உயிரையே கொடுத்திருப்பார்கள்.

அத்தனை பேரையும் அவர் உள்ளம் உயர்வோடு எண்ணியது. ஒரு தேயிலைக் கன்று பட்டு மடிந்தாலும் தன் வீட்டு கோழிக்குஞ்சு செத்தது போல் நினைத்தவர் அவர். இன்று...... அவர் நெஞ்சு வெடித்து விடும்போலிருந்த. "ஐயோ........ நாசமாப்போக. அந்தத் தேயில மரத்த துண்டு துண்டா வெட்டி அடுக்கினானுகளே பாவிக.........

காணி பெற்றுக்கொண்டு கிராமத்தவர்கள் வீடுகட்ட தேயிலைச் செடிகளைவெட்டிக் கொத்துவதைக் கண்ட அவர் மனம் பொறுக்க முடியாமல்......... "ஏ ஐயா...... அந்தக் கன்னுகள எங்கப்புள்ள குட்டிகளப் போல பார்த்தோம் இப்பிடி வெட்டி வேர்வேரா புடுங்குறீங்களளே..... ஒங்கள இதுக என்னாய்யா பண்ணிச்சி அதுக்கு எங்கள கொல்லுங்கய்யா" என்று கிராமத்துச் சிங்களவன் ஒருவனிடம் சண்டைக்கே போய் விட்டார் தாத்தா.

அப்படி இந்த மலையகத்தின் மண்ணோடு மலைகளோடு பயிர்களோடு தன் உடல் உயிர் அத்தனையையும் உறவாகவே பிணைத்துக் கொண்டவர் மருதைவீரன் தாத்தா. தோட்டத்திலேயே வயதில் மூத்தவர் அவர். இன்று...... அவர் உடல் தான் ஊர்வலத்தில் போய்க் கொண்டிருக்கிறது.

"கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய் வல்லசுராகி முனிவராய்த் தேவராய்......"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகத்தின் வரிகள் நேரந்செல்லச் செல்ல சத்தமாகக் கேட்டன. ஊர்வலம் இப்போது பெரிய பாதையில் சென்று கொண்டிருந்தது. "குழிவெட்டி முடிச்சிருப்பாங்களா?" செத்தவீட்டு வெத்திலையை வாய் நிறைய குதப்பிக் கொண்டே சின்னத்தம்பி அண்ணன் கேட்டார். அவருக்கு வயது அறுபது. தோட்டத்தில் பல பேருக்கு புதைகுழி வெட்டிப் பழக்கப்பட்டவர். "இப்ப போதகுழிக்கு ஒதுக்கியிருக்கிறாங்களே...... அந்த எடத்துல தான் என் கொந்தரப்பு இருந்திச்சி. ஒரு புல்லு விட மாட்டேன். பொத பொதன்னு மண்ணு. இப்ப காடாக்கெடக்கிறதப்பாத்து வயித்தெரிச்சலா இருக்கு...." என்று பக்கத்தில் வந்து கொண்டிருந்த அந்தோனிமுத்துவிடம் சொன்னார். மருதைவீரன் தாத்தா மீது வைத்த அன்புக்காக இப்போது நடக்க முடியாமல் நடந்து வந்தார் அவர்.

அந்தோனிமுத்தண்ணே அந்தத் தோட்டத்தில் முன்பு சலவைத் தொழிலாளி. செத்தவீடு, கலியாண வீடு, சடங்கு வீடுகளுக்கு முன்பு அவர் தான் மாத்து" கொப்பது வழக்கம். "அந்தோனிமுத்தண்ணே ஸ்திரிகை போட்டாத்தான் ஷேர்ட்மடிப்பு ஸ்டைலா இருக்கும்." அன்றைய இளவட்டங்கள் இப்படிச் சொல்வார்கள். இப்போ அந்தோனி முத்தண்ணே மாத்து கொடுக்க வழியில்லை. கேத வீட்டுக்காரங்களே தேடிக்கொள்ள வேண்டியது தான். செத்தவீட்டு மற்றைய வேலைகளைச் செய்ய பரியாரி டவுன்ல இருந்து தான் வரணும்.

"ஏம்பா...... மையம் பொதைக்கிற எடம் இப்போ கோலனிக்காரங்களுக்கு போல பிட்டனிக்கு ஒதுக்கியிருக்காமே.......... குழிவெட்டவுடுவாங்களா.........?" சின்னத்தம்பியண்ணன் தான் கேட்டார்.

மழைக்கருக்கலாக இருந்ததால் ஊர்வலம் சற்று விரைவாக நடந்தது. "ஆமாணணே அப்படித் தான் கதையா இருக்கு" பக்கத்தில் வந்த ராமு சொன்னான். "ஆராச்சிகிட்ட காயிதம் வாங்கியிருந்தா நல்லது....... இல்லாட்டி கரைச்சல் தான்" அனுபவப்பட்ட சின்னத்தம்பி அண்ணே சொன்னார்.

"செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ் பல்லோரும் ஏத்தப்பணிந்து" திருவாசகத்தின் கடைசி வரியும் முடியபிரேத ஊர்வலம் புதைகுழியை நெருங்கிக் கொண்டிருந்தது.

"குழிய மூணுதரம் சுத்தி வைங்கடா தம்பிகளா........" முத்தையா கங்காணி சொன்னார். அவ்வாறே மெதுவாக பெட்டி இறக்கப்பட்டு குழியின் அருகில் வைக்கப்பட்டது. கங்காணி சொன்னார். "எங்கப்பா ஆராச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறேன்னு சொன்னாரே இன்னம் காணலியே இந்த மனுஷன் வராட்டி என்னா செய்யிறது'' அவருக்குமனம் நிம்மதியில்லை. அப்போது எங்கிருந்தோ சில காடையர்கள் திமுதிமுவென அங்கே ஓடி வந்தார்கள். கையில் சில பொல்லுகள். அங்கே நின்றவர்கள் பயந்து செய்வதறியாது திகைத்தார்கள்.

''ஏய் உம்பலா மொனவத கரன்னே...? மெத்தன வளலண்ட பே.... பலயல்லா மெத்தனின்'' அந்தக் காடையர்களில் தடியனாக இருந்த ஒருவன் அடித்தொண்டையில் கத்தினான்.

''ஐயா செத்தபொணத்த குழியில வச்சிகிட்டு நிக்கிறோம். இந்தநேரம் வந்து கொழப்பம் பணறீங்களே இது நாயமா'' மனதில் பயம் கவ்வினாலும் முத்தையா கங்காணி தான் சற்று தைரியமாகக் கேட்டார். செத்த வீட்டு காரியத்தை முடித்து வைக்க வேண்டிய பொறுப்பு அவர் தலையிலே இருந்ததனால் கேட்க வேண்டிய நிலையும் கூட. ''உம்ப கவுத யக்கோ...? கட்ட வாப்பங்...'' அதே தடியன் கங்காணி அருகில் வந்து சட்டையைப் பிடித்து உலுக்கினான். கூடி நின்ற மற்றவர்கள் ''ஐயா... ஐயா... அவர ஒன்னும் செஞ்சுப் புடாதீங்கய்யா... விட்டுடுங்க...'' என்று கெஞ்சினார்கள். ஊர்வலத்தில் வந்த சிங்களவர்களுள் ஒருவர் சமாதான நோக்கோடு கூறினார் ''மல்லி.... கருணாகரலா மே மினிசுண்ட உதவ் கரண்ண.... அபே கிராம சேவக மாத்தயாட்ட கியலயி தியென்னே....'' தமுச சமுசகே வெட பலனவா ஓய்.....'' காடையர் கூட்டத்தில் நின்ற இன்னொரு முரடன் அந்த கிராமத்துச் சிங்களவரை முறைத்துப் பார்த்தவாறு ஏசினான். அவ் வேளை ஆராச்சி அவசர அவசரமாக அங்கே ஓடிவந்தார். அவரைக் கண்டதும் தான் முத்தையா கங்காணிக்கு மூச்சு விடவந்தது. மற்றவர்களுக்கும் தைரியம் வந்தது போலிருந்தது.

''மொக்கத மெத்தன கலபல..... என்னா கங்காணி சங்கதி....? எனக்கு ஒரு வேல இருந்தது.... அதுதங் கொஞ்சங் பிந்தி போனங்...'' ஓடியோடி வந்த களைப்பில் மூச்சிரைக்க தனக்குத் தெரிந்த தமிழில் ஆராச்சி பேசினார்.

''ஐயா... ஒங்ககிட்ட கடதாசி வாங்கித்தானே நாங்க இங்க பொணத்த பொதைக்க கொண்ணந்தோம்.... இவங்க எல்லாரும் வந்து இங்கன கரைச்சல் பண்றாங்க நீங்க தான் இவுங்களுக்கு சொல்லனும்.....'' என்று அழாக்குறையாக முத்தையா கங்காணி கூறினார். காரியத்தை முடித்துவிடுவதில் அவர் காட்டிய அக்கறை தெரிந்தது. ஆராச்சிக்கு விளங்கிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மே மெத்தன கிசி கலபல ஓனநே... மமதமாய் அவசர துன்னே'' அவர் அங்கு நின்ற காடையர்களிடம் தன்னுடைய மொழியிலேயே பேசினார். ''ஆராச்சி மாத்தயா! ''மே இடம் வென்கரல்லா தியன்னே அபே கொலனி மினிசுண்ட. போல பிட்டனியட்ட'' காடையர்களில் இன்னொருவன் கூறினான்.

ஆராச்சிக்கு கோபம் வந்து விட்டது.

''மம தமய் மே பெத்தட்ட கிராம சேவக... மட்ட ஒக்கொம தன்னவா.... மட்ட தமுசே கியலா தெண்ட ஓன நே.....'' என்று சத்தமாகக் கூறினார். பிணத்தை வைத்துக் கொண்டு இதென்னடா பெரிய சங்கடமாய் விட்டதே என்று கங்காணி தலையில் அடித்துக் கொண்டார். கூட்டத்தில் நின்றவர்கள் என்ன நடக்கப்போகுதோ என பயந்து போய் நின்றார்கள். ''மே.... கங்காணி, நீங்க இத சுருக்கா பொதச்சி போடுங்க.... நாங் இங்கண நிக்கிறது... இவங்க என்னா செய்யுறது பாப்பம்.'' என்று கூறவும் முத்தையா கங்காணி அவசரப் படுத்தினார்.

''எங்கப்பா..... பரியாரி இங்கிட்டு வா.....'' என்றதும் அவன் நின்றவர்களை விலத்திக்கொண்டு முன்னால் வந்தான். ''வாய்க்கரிசி போடுங்களேன்..... என்று இழுத்தான். பெரியவருக்கு அதையாவது செய்து விடுவோம் என்று யோசித்த கங்காணி ''சரி.. சரி.... சுருக்கா காரியத்த முடிப்பா.... இங்க நின்னா வேற என்னமாவது கலவரமாயிரும்.'' என்று மளமளவென காரியங்களை முடிக்கச் செய்தார்.

வேற சாத்திர சம்பிரதாயங்களை மருதை தாத்தாவுக்கு செய்து கொண்டிருக்க நேரம் இல்லை. ஒருவாறு பிரேதப்பெட்டி குழிக்குள் இறக்கப்பட்டது. ''மேக்க அப்பே கம....... அப்பே இடம்...... பலமு...... அப்பிகொரண்ணங் வெட........ வரன்பங் அபியமு.......'' அந்த தடியன் ஆத்திரத்தோடு சொல்லித்திரும்பிச் செல்ல மற்றவர்களும் முறைத்த வண்ணம் அவனைப் பின் தொடர்ந்தனர்.

அவசர அவசரமாக குழியை மூடிவிட்டு அனைவரும் திரும்ப அதுவரை பொறுத்திருந்த வானம் 'சோ' வெனப் பொழியத் தொடங்கியது.

மறுநாள், மருதைவீரன் தாத்தாவை புதைத்த இடத்தில் 'மூணாங்குழி' மூடிபால் ஊத்த முத்தையா கங்காணி, தாத்தாவின் மகன்மார் மற்றும் சிலரோடு புதைகுழி நோக்கி நடந்து கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கங்காணியாரே..... நேத்து இந்தப்பயலுக என்னா இப்படி செஞ்சிபுட்டானுங்களே.... ஏதாவது கொழப்பம் கிழப்பம்.....'' என்று இழுத்தார் தாத்தாவின் மூத்த மகன் முடிந்துபோன இனக்கலவரத்தின் போது பக்கத்து தோட்டத்தில் அவர் இருந்த லயத்தை சிங்களக் காடையர்கள் நெருப்புவைத்துக் கொளுத்தி விட்டார்கள். அந்தப்பயம் அவரை பயம் கொள்ளச் செய்தது.

''ஆராச்சி மாத்தையா நம்ம கூட இருந்து சமாளிச்சிட்டாரு.... அதனால பயப்பட வேண்டியதில்லை..... எதுக்கும் அரச்சத்தம் கொறச்சட்டம் கேட்டா கொஞ்சம் கவனமாகத்தான் இருக்கனும்.....'' என்றார் கங்காணியார் பதிலுக்கு.

''தாத்தா புண்ணியஞ்செஞ்சவரு..... பொணத்த புதைக்கிறவரைக்கும் மழையே இல்லியே. ஆனால் ராத்திரி பேஞ்ச மழையில குழி எறங்கிப் போயிருக்கும்.'' தாத்தாவின் மீது மரியாதை வைத்துள்ள அந்தோனிமுத்து கூறினார். எல்லாரும் கையில் சாமான்களோடு நடந்தார்கள். காக்காய்க்கு காட்டுச்சோறு, இளநீர், பால், பூஜைப் பொருட்கள், தாத்தா விரும்பும் கறுப்பு சுருட்டு இன்னும் சில.

அனைவரும் குழியை நெருங்கினார்கள் அங்கே, குழி தோண்டப்பட்டுக் கிடந்தது. பிரேதப்பெட்டி உடைத்து எறியப்பட்டிருந்தது.

அனைவரும் வாயடைத்துப் போய் ஓடிச்சென்று குழியை எட்டிப்பார்த்தனர். ஆண்டாண்டு காலமாக தனது உதிரத்தை வியர்வையாக்கி உழைத்த அந்தத் தியாக பூமிக்கு உள்ளே..... மருதை வீரன் தாத்தா அனாதையாகக்கிடந்தார்.

நன்றி

குன்றின் குரல்
செப்டம்பர் – 92



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு புதிய போராட்டம்

அது ஒரு பெருந்தோட்டத்துறைப் பாடசாலை வழமைக்கு மாறாக அங்கே பாடசாலைக் கடமை நேரத்தில் பெற்றோர்கள் நிரம்பியிருந்தார்கள். நேரமோ காலை மணிஎட்டு, எட்டரையையும் தாண்டிவிட்டது.

இரண்டரை கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் தோட்டத்தினூடாகச் செல்லும் அரசாங்கப் பாதையில் காலை எட்டு மணிக்கு வழமையாகச் செல்லும் பஸ்ஸூம் போய்விட்டது. ராமசாமி இரைக்க இரைக்க வேகமாக வந்தான்.

"தலைவரய்யா அந்த பஸ்ஸையும் பாத்துட்டுத் தாங்க நான் வாறேன். யாருமே வரலீங்க...." ஆத்திரத்தோடு பேசியதால் அவனுக்கு மூச்சு வாங்கியது. தலைவர் கருப்பண்ணனுக்கோ இன்னும் கொதிப்பாகியது. அங்கிருந்த எல்லாரையும் நோக்கினார்.



மாணவர்களுக்கோ ஒரே மகிழ்ச்சி வகுப்பில் ஆசிரியர்கள் யாரும் இல்லை. எனவே சத்தம் போட்டு சிரித்து கதைத்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஐந்தாம் வகுப்பு மட்டுமே உள்ள அந்தப் பாடசாலையில் இருநூற்றைம்பது மாணவர்கள் இருந்தார்கள்.

தோட்டத்துக்கே உரிய லட்சணத்தில் அப்பாடசாலை மாட்டுக்கொட்டிலாக பதினைந்து வருடங்களுக்கு முன்புவரை இயங்கியது. ஒரே ஆசிரியர் எழுபத்தைந்து மாணவர்கள். அந்தக் காலத்தில் வரவு இடாப்பில் இருந்தாலும் தினவரவு மட்டும் என்னவோ கண்டிப்பாக நாற்பதைக் கூடத்தாண்டுவது மிகவும் கடினம்.

இலவச பாடப்புத்தகம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டபோது பெற்றோர் சுமை கொஞ்சம் இறங்கியது போலிருந்தது. மாணவர் வரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று அதிகரித்தது. ஆனால் புத்தகப்பராமரிப்பு என்பது என்னவோ தங்களுக்கு சொந்தமில்லாத விடயம் என்பதுபோல உறை போடாமலும் முன் பின் அட்டைகளைக்கிழித்தும் சந்தோஷப்பட்டனர்.

பாடங்களின் இடையில் உள்ள தாள்களும் சில வேளை கப்பலும் பறவைகளும் செய்து விளையாடப்பட்டன. அறிவுக்கு அங்கே அதிகமாக வேலை இருக்கவில்லை. ஆசிரியர் அநேகமாக பிள்ளை பராமரிப்பவர் போல்தான் இருந்தார்.

தொடர்ந்து வந்த அரசாங்கத்தால் இலவச மதிய உணவும் இலவச சீருடையும் கிடைத்த போது மண்டபம் நிறைந்ததாக மாணவர் தொகை அதிகரிக்கவே இடநெருக்கடி ஏற்படத்தொடங்கியது. ஆனால் ஆசிரியர் எண்ணிக்கை மட்டும் அதிகரிக்கவேயில்லை. படிப்படியாக பெற்றார் பாடசாலைமீது அக்கறை காட்டத் தொடங்கினார்கள். ஆசிரியர் பெற்றாருடன் பாடசாலையின் நிலைபற்றி இப்போது கட்டாயமாகக் கலந்துரையாட வேண்டியேற்பட்டது.

அதன் பயனாக ஆசிரியர் பற்றாக்குறை பற்றியும் மற்றும் தேவைகள் பற்றியும் உரியவர்களுடன் தொடர்புகொண்டு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டதையடுத்து பெருந்தோட்டப்பாடசாலை கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய கட்டிடம் அதிபர் விடுதி தளபாடங்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் என்பன கிடைத்தன. பெருந்தோட்ட ஆசிரியர் நியமனத்தின் கீழ் ஐந்து பேர் புதிதாக படிப்படியாக வந்து சேர்ந்தனர்.

சகலதும் கிடைத்ததில் பெற்றோர்களுக்கோ ஒரே மகிழ்ச்சி. தங்கள் குழந்தைகளின் கல்விபற்றிய எதிர்காலக்கனவுகள் அவர்களின் நெஞ்சங்களை நிறைத்தன. ஆனால் அவர்களின் எதிர்பார்ப்புக்களில் மண்விழுவதுபோலவே பாடசாலையின் அபிவிருத்திக் கருமங்கள் நடந்து கொண்டிருந்தன.

"செல்லத்தாயி ஒன்னோட ஸ்கூல் கொப்பிகல இங்கே கொண்டா" அப்பா செலம்பரம் லயத்துக் காம்பறா தோப்பில இருந்துகொண்டு கேட்டார். பகலெல்லாம் மலையேறி வேலைசெய்து களைத்துப்போய் வந்ததும் ஒரு கோப்பை சாயத்தண்ணியை சீனியை கையில் நக்கிச்சுவைத்துக் கொண்டே உறிஞ்சினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளின் பெயர் மஞ்சுளாதேவி என்றாலும் செல்லமாக அழைப்பது அப்படித்தான். நான்காம் தரத்தில் படிக்கும் மஞ்சுளா பாடக்கொப்பிகளோடு வந்தாள்.

செலம்பரம் ஒன்றை எடுத்துப்பார்த்தார். அது சுற்றாடல் கொப்பி. "என்னம்மா வருஷம் தொடங்கி மாசமும் மூணாச்சி கொப்பியில ஒன்னுமே எழுதலியா....?" அவருக்குத்தன் பிள்ளையின்மீது ஆத்திரமாக வந்தது. அதட்டலாகக் கேட்டார். மஞ்சுளா பயந்து போனாள். "அப்பா எங்க சேர் புஸ்தகத்த வாசிச்சிக்கிட்டே தான் போவாரு ஒன்னும் எழுதக்குடுக்கமாட்டாரு." தந்தையின் திடீர் மிரட்டால் அதிர்ந்துபோய் பதில் சொன்னாள்.

அடுத்த பாடக்கொப்பிகளையும் செலம்பரம் ஒவ்வொன்றாகப் பார்த்தார். எழுதிய சில கொப்பிகள் திருத்தப்படாமல் இருந்தன. செலம்பரத்துக்கோ பொறுக்க முடியாத கோபம்.

"இந்த மாஸ்டருமாரெல்லம் எதுக்கு ஸ்கூலுக்கு வாறாங்க புள்ளக அதோகதிதான் போ! இருக்கட்டும் வாறகெலம நான் வந்து பேசிக்கிறேன்." எரிச்சலோடும் புகைச்சலோடும் லயத்துப் பீலிக்கு முகம் கழுவச் சென்றார்.

அங்கே ராமசாமி தண்ணீர் குடத்துடன் நின்றான். மனைவி ராக்கம்மா கொழுந்து நிறுத்து முடித்து வர நேரமாகுமென்பதால் தண்ணீர் எடுக்க வந்திருந்தான்.

"செலம்பரண்ணே கேட்டீங்களா சேதிய? நம்ப தோட்டத்து ஸ்கூல்ல நல்ல தமாஸெல்லாம் நடக்குது. ரெண்டு மாஸ்டர்மாரு அடிச்சிக்கிட்டு பொரண்டாங்களாம். வெசாரிச்சுப் பாத்தேன். யாரோ ஒரு மாஸ்டர்மார் பக்கத்து ஸ்கூல் டீச்சரோட இதாம். ஸ்கூலுக்கு வராம சுத்துராராம் மத்த மாஸ்டர் வெசயத்த அவுட்டாக்கிட்டாரு அதான் ஒரே கொளப்பம் இவங்கள நம்பி புள்ளகல அனுப்புனா நல்லா படிச்சிக்குடுப்பாங்க போல சே! கேவல மாயிருக்கண்ணே...."

தான் கேள்விப்பட்ட கதையைச் சொன்னான். அவனுடைய மூத்த மகன் மூன்றாம் வகுப்பிலும் இரண்டாமவன் ஒன்றாம் தரத்திலும் படிக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலம்பரத்துக்கு புரிந்தது. "ராமசாமி இத இப்பிடியே விட்டா ஸ்கூலு நாசமாப்போய் விடும். நம்ப தலைவரைக் கண்டு பேசுவோம். வாறியா?" என்று யோசனை கூறினார்.

தண்ணீர் குடத்தை வீட்டில் வைத்துவிட்டு இருவரும் மேட்டுலயத்தின் அருகிலுள்ள கருப்பண்ணன் தலைவர் வீடுநோக்கி நடந்தார்கள். இடையில் நடேசன் கங்காணி வந்துகொண்டிருந்தார்.

"பாருப்பா ராமு புள்ளய பத்தியும் படிப்பபத்தியும் விசாரிப்போமுன்னு ஸ்கூலுக்குப்போனா அந்த மாஸ்டர் வரல இந்த டீச்சர் வரலைன்றுதான் சொல்லிக்கிட்டிருக்காங்க. எப்பத்தான் ஸ்கூல்ல இருப்பாங்கன்னு கடவுளுக்குத்தான் தெரியும்" வயிற்றெரிச்சலைக் கொட்டித்தீர்த்தார் நடேசன் கங்காணி. ஐந்தாம் வகுப்பில் படிக்கும் தன்மகன் படிப்பைப்பற்றி விசாரிக்க அவர் பலமுறை முயற்சித்தும் தோல்வி கண்டதையடுத்து அவருக்கு நெஞ்சு கொதித்தது....

"ஆமாங்க கங்காணி ஐயா! நாங்களும் அத பத்தித்தான் இப்பபேசிக்கிட்டு வாறோம். தலைவர கண்டு பேசினா தேவலை...." செலம்பரம் சொன்னார்.

பாடசாலைக்கு ஆசிரியர்கள் நேரத்துக்கு வருவதில்லை என்றும் பாடசாலை நேரம் முடிய முன்பே சென்றுவிடுவதாகவும் பிள்ளைகள் பல முறை சொல்லியிருக்கிறார்கள். சில ஆசிரியர்கள் அடிக்கடி பாடசாலைக்கு லீவு போடுவதாகவும் அதனால் படிப்பு நடைபெறுவதில்லையென்றும் கூறப்பட்டது.

அதிபரும் இளவயதுக்காரரானபடியால் அவராலும் இதைக்கட்டுப்படுத்த முடியாத நிலையில் கல்விக் காரியாலயத்துக்கும் அறிவித்திருந்தார். திடீரென ஒருநாள் கல்வியதிகாரிகள் பாடசாலைக்கு வந்தபோது அதிபரைத்தவிர வேறுயாரும் உரிய நேரத்துக்கு வரவில்லை. காலை ஒன்பதரை மணிக்குப்பிறகே மூவர் வந்தார்கள். மற்ற இருவரும் வரவேயில்லை தங்கள் கடமை முடிந்து கல்வியதிகாரிகள் சென்றபின் இவர்கள் எங்களை என்ன செய்ய முடியும் என்று ஆசிரியர்கள் பின்னர் பேசிக்கொண்டதாகவும் தகவல்.

இது பற்றியெல்லாம் அதிபருடன் ஏற்கனவே தலைவர் கருப்பண்ணன் பேசியுமிருந்தார். ஆனால் நாய்வாலை நிமிர்த்தும் கதையாகவே அது இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மாணவருக்கு 'டை' வாங்கவும் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார் செய்யவும் என பணம் அறவிட்டு அவை ஒன்றும் நடைபெறவில்லையென்றும் ஒருபுறம் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இதையெல்லாம் கருப்பண்ணன் தலைவர் தனது மாவட்ட தொழிற்சங்கத் தலைவர் மற்றும் பிரதிநிதியின் கவனத்துக்கும் கொண்டு வந்திருந்தார்.

செலம்பரமும், ராமசாமியும், நடேசன் கங்காணியும் நடந்துபோன இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பேசிக்கொண்டே தலைவர் வீட்டை நோக்கிச் சென்றார்கள்.

அப்போதுதான் முகம் கழுவிவிட்டு சுவாமிதரிசனம் செய்தபின் தலைவர் கருப்பண்ணன் தனது 'குவாட்டர்ஸ்' முன்னறைக்கு வந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தார். பெரிய கங்காணியாகவும் இருந்ததால் அவருக்கு தோட்ட நிருவாகம் தனிவிடுதி கொடுத்திருந்தது. மூவரும் வருவதைக் கண்ட தலைவர் அவர்களை வரவேற்று ஆசனங்கள் கொடுத்தபின் மனைவியிடம் தேநீருக்கும் சொல்லிவைத்தார்.

''என்னாய்யா நடேசு...... என்னா மூணுபேரும் சேர்ந்து வாறீங்க.... ஏதாவது புதுக்கதையா....?'' கருப்பண்ணன் கேட்டார்.

''ஆமாங்க....!'' என்றவர் எங்கே தொடங்குவது என யோசித்துக் கொண்டே'' எல்லாம் நம்பதோட்டத்து ஸ்கூல பத்தித்தான்....'' என்று நிறுத்தினார்.

''நம்ம எவ்வளவுதான் பொறுக்கிறது.... வெள்ளம் தலைக்கு மேலே போகப்போகுதுங்க...! தொடர்ந்து அவர்தான் கூறினார்.

''ஐயா! அந்த நாளைல்ல நாம பெரிய படிப்பு படிக்காட்டியும் பேப்பர் படிக்கவாவது நாலு எழுத்து தெரிஞ்சிக்கிட்டமுங்க.... நாலும் இரண்டு சொல்லுக்குறுதின்னு ஸ்கூல் கூரை வாழ்க்கை மரத்தில் எழுதியிருந்ததுகூட இன்னமும் எனக்கு நல்லா ஞாபகமுங்க.... இப்ப அந்த நாலு என்னா இரண்டு என்னான்னு கூட நல்லா ஞாபகமுங்க.. நம்ப புள்ளைகளுக்கு தெரியலீங்க..'' செலம்பரம் மிகுந்த ஆதங்கத்தோடு சொன்னார்.

தோட்டத்துப்பிள்ளைகள் நன்றாகக் கல்விகற்று இந்த தோட்டத்தொழிலாளி வேலைகளை மறந்து உயர்படிப்பு படித்து முன்னேற வேண்டும் என்பது செலம்பரத்தின் மிகப்பெரிய ஆசை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய சகதொழிலாளர் குடும்பங்களிடம் அவர்களைச் சந்திக்கும் போதெல்லாம் இதுபற்றிக் கூறுவது வழக்கம். அதுமட்டுமல்லாமல் அந்த தோட்டத்தில் பாதியில் படிப்பைவிட்டு தோட்டத்து வேலையே 'கதி' என்றிருக்கும் இளைஞர் யுவதிகளிடமும் அக்கறையுடனும் ஆவேசமுடனும் பேசுவார்.

இதனால் அந்த இளைஞர் கூட்டம் தாம் விட்ட தவறை தமது அடுத்த பரம்பரையும் விடக் கூடாது என்ற புதிய போராட்ட உணர்வோடு செவிமடுத்தன. எனவே அந்தத் தோட்டத்தில மக்களிடம் ஒரு விழிப்புணர்வும் ஏற்பட ஆரம்பித்தது. எனவே இவர்கள் பாடசாலையைப் பற்றி அக்கறையுடன் இருந்தார்கள். பாடசாலையை பற்றிய குறைபாடுகள் அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டிய வழிமுறைகள் பாடசாலைக்குச் செய்ய வேண்டிய உதவிகள் பற்றியெல்லாம் கலந்து பேசினார்கள்.

'தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்' என்பது அவருக்குத்தெரியும். கல்விக் காரியாலயங்களுக்கு அறிவித்து நடவடிக்கை மேற்கொள்வதென்றால் சட்டம், ஒழுங்கு என்று எதையாவது கூறுவதோடு முடிந்துவிடும். ஆனால் அதற்கு இடம் வைக்காமல் மாற்றுவழி செய்ய வேண்டும். நேர்வழியை அவர் மறந்தார்.

தலைவரின் மனைவி அனைவருக்கும் தேநீர் தந்தார்.

கருப்பண்ணன் தலைவர் மீண்டும் சற்றுநேரம் யோசித்துவிட்டு மூவரையும் அருகில் வருமாறு கூறி மற்றவர்களுக்குக் கேட்காத வண்ணம் ஏதோ கூறிக்கொண்டிருந்தார். எல்லாரும் தலையை ஆட்டி சம்மதித்தார்கள்.

"அடுத்த வெள்ளிக்கிழமை எல்லாரும் நேரத்துக்கு வரணும்... எல்லாரையும் வரச்சொல்லணும்.... சொன்னதெல்லாம் கரெக்டா செய்து முடிக்கனும்.... இந்தத் தடவையோட முடிவுக்குக் கொண்டு வரணும்..." தலைவர் கருப்பண்ணன் தனது திட்டத்தைக்கூறி முடித்தார். நேரம் இரவு ஒன்பது மணியாகியது. எல்லோரும் கலைந்தனர்.

வெள்ளிக்கிழமையும் வந்தது.

தலைவர் கருப்பண்ணன் பாடசாலை முற்றத்தில் நின்று வெறுப்போடு கைக்கடிகாரத்தைப் பார்த்தார். இப்போது மணி பத்து. அன்று திகதி இருபது. பாடசாலையில் சம்பள நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தே ஒரு உருவம் தெரிந்தது. உற்று நோக்கியபோது அது பாடசாலை அதிபர் என கண்டு கொண்டார். கிட்டத்தில் வரும்வரை அமைதியாக நின்றார். முற்றத்தில் நின்ற பெற்றோரும் மற்றும் இளைஞர் கூட்டமும் ஆவேசமுடன் அதிபரை நெருங்கினர்.

தலைவர் விரைந்து தடுத்து அனைவரையும் பேசாமல் இருக்குமாறு பணித்தார். கூட்டம் ஒதுங்கியது.

எதிர்பாராமல் நின்ற கூட்டத்தைப் பார்த்த அதிபருக்கு அடிவயிற்றைக் கலக்கியது. என்ன விடயம் என்று தெரிய முடியாமலும் என்ன நடக்குமோ என்று பயந்துகொண்டே பாடசாலைக் காரியாலயத்தைத் திறந்தார். அவருடன் உள்ளே சென்ற கருபபண்ணன்.

"யோவ்...! இதென்னா ஸ்கூலா.... உங்கொப்பன் வீடா... எத்தனை மணிக்கய்யா ஸ்கூல் தொடங்கிறது... இப்ப மணி என்னா பாத்தியா..?" பீறிட்டு வந்த ஆத்திரத்தோடு பெரிதாகக் கத்தினார்.

நடுங்கிப்போன அதிபருக்கு பேச வரவில்லை. மெல்லமாக "கோபிக்.... காதிங்க தலை.... வரய்யா...!" சற்று நிறுத்திவிட்டு.

"நான் பேங்குல போய் சம்பளம் எடுத்துக் கிட்டுவாறேன்... அதான் நேரமாச்சி...." என்றார்.

"அது சரிய்யா... அப்ப மத்த மாஸ்டர்மார், டீச்சர்மாரெல்லாம் எங்க காணோம்.... ஸ்கூல் சாவிய அவுங்ககிட்ட குடுத்திருக்காமில்ல..." தன்னுடைய சரியான ஆலோசனையைக் கூறினார் கருப்பண்ணன் தலைவர்.

பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள் கிட்டத்தட்ட அதிபரின் வயதையொத்தவர்களாகவே இருந்ததால் அதிபரின் கட்டளைகளை ஏற்க மறுத்திருந்தனர்.

தாங்கள் நினைத்தபடியே செயற்பட்டனர். ஒழுங்காக கற்பிப்பதில்லை. அடிக்கடி லீவு எடுத்தனர். வருடத்தில் தமக்குரித்தான லீவுகளைவிட அதிகமாக எடுத்து இரு ஆசிரியர்கள் சம்பளமற்ற லீவான நிலையிலும் இருந்தனர். அரசாங்க சுற்று நிருபங்களை முறையாக செயற்படுத்துவதற்கு அதிபருக்கு ஒத்துழைப்பு கொடுப்பதில்லை. இதனால் அதிபர் யாரையும் நம்பி எந்தப் பொறுப்புக்களையும் கையளிக்க முடியாத நிலையில் இருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பண்ணன் தலைவரின் கேள்விக்கு மறுமொழி சொல்ல வேண்டும்! அதிபர் சற்று யோசித்துவிட்டு.

"ஐயா இங்கே ஆசிரியர்களுக்கு பாடசாலையைப் பற்றிய அக்கறையோ கிடையாது. உங்களோட கூட இதுபத்தி கதைச்சிருக்கிறேன்... அதனால இவுங்கள நம்பி சாவிய கொடுக்க முடியல... ஓங்ககிட்ட சொல்றதுக்கு என்னா... என்னைய இங்கேயிருந்து நீங்க மாத்தினாலும் நான் சந்தோஷப்படுவேன்....!" அழாக்குறையாகக் கூறி முடித்தார்.

தலைவருக்கு மனம் சங்கடப்பட்டது. நிலைமையை அவர் ஒருவாறு ஊகித்துக் கொண்டார். மற்றைய ஆசிரியர்களைப்பற்றி அவர் அறிந்தவற்றை நினைத்துக் கொண்டார். அப்போது வெளியே...!

ஒரே ஆரவாரமாக இருந்தது. மற்றைய ஆசிரியர்கள் அப்போதுதான் பாடசாலையை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அதைப்பார்த்த பெற்றோர் கூட்டமே பெரிதாக சத்தமிட்டனர். தலைவர் வெளியே வந்து பார்த்தார். உடனே கையை அசைத்த சமிக்ஞை காட்டினார்.

அங்கு நின்ற இளைஞர்கள் ஏற்கனவே தமது கையில் தயாராக வைத்திருந்த போஸ்டர்களை உயரே தூக்கிப்பிடித்தனர். அவற்றிலே

"ஆசிரியருக்கு சம்பளம்–மாணவருக்குக் கல்வி இல்லை"

"பெயருக்குப் பாடசாலை–அக்கறையில்லா ஆசிரியர்கள்"

"தொழிலாளர் வாழ்வை நாசமாக்காதே!" "ஆசிரியர் தொழில் கொள்ளையடிக்கவா? தொழிலாளி குழந்தைகள் பலியாகும் ஆடுகளா?"

"தொழிலாளர் பிள்ளைக் கல்வி உரிமையை பாதுகாப்போம்! உபதேசிகளா–உதவாக்கரைகளா?" இப்படிப் பல ஆத்திரமான காத்திரமான வாசகங்கள் அவற்றிலே காணப்பட்டன. அவற்றைக்கோஷித்த வண்ணம் வந்த ஆசிரியர்களை நோக்கிச் சென்றனர்.

நிலைமை மோசமடைவதைக்கண்ட தலைவர்யாரும் கைநீட்டாதபடி பார்த்துக் கொண்டார். வந்த ஆசிரியர்கள் அப்படியே அசையாமல் நின்றுவிட்டனர். இப்படியொரு நிகழ்வை அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லையாதலால் அப்படியே அதிர்ந்துபோய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயடைத்திருந்தனர். முகங்களில் பயத்தின் ரேகைகள் படர்ந்திருந்தன.

தலைவர் கருப்பண்ணன் அவர்களை நோக்கிச் சென்று,

''ஏம்பா...! நீங்கதான் ஆசிரியர்களா...? தோட்டத் தொழிலாளிக நாங்க காலமெல்லாம் கஷ்டப்படுறோம்... எங்களோட வாழ்க்கைதான் இப்படி யாச்சின்னா எங்க புள்ளைகளையாவது படிக்க வச்சி மனுஷராக்குவோமுன்னுதான் ஸ்கூலுக்கு அனுப்பறோம்.... தொழிலாளி புள்ளைகளுக்குத் தான் ஆசிரியர் வேலை குடுக்கணுமுன்னு எங்க தலைவர்மாரைதொல்லைப்படுத்தி கேட்டோம்....

ஆனா அரசாங்கத்த ஏமாத்தி நீங்கள்ளாம் வந்துட்டீங்க... எங்க கொழந்தைகளோட படிப்பக்கெடுத்து அவங்கள குழியில தள்ளாதீங்க.... இந்த சமூகத்த கைதூக்கி விடு வீங்கன்னுதான் நெனச்சோம். ஆசிரியர் வேலை புனிதமானதுன்னு சொல்லு வாங்க.... ஆனா அத கெடுக்கவே நீங்க வந்திருக்கிறீங்க...'' என்று ஆத்திரம் தீரக்கத்தி பேசினார். கூடிநின்ற பெற்றோர் கண்களில் கண்ணீர் கசிந்தது.

''தலைவரய்யா...! இனிமே இவங்க யாருமே இந்த பள்ளிக்கூடத்துக்கு வரக்கூடாது. இதுவே கடைசி நாளா இருக்கட்டும்...'' கூட்டத்தில் இருந்த ஒரு இளைஞன் பெரிதாக சத்தமிட்டான்....

''இவங்களுக்கு சம்பளம் கொடுக்கவிடக்கூடாது.... பிரின்ஸிப்பலையும் கூட்டிக்கிட்டுப் போய் கல்விக் கந்தோர்ல அத திருப்பிக் கொடுப்போம்...'' என்று ஒரு யுவதி அந்த ஆசிரியர்களைப் பார்த்து கையை நீட்டி துணிவுடன் பேசினாள்.

பாடசாலைக்குள் செல்ல முடியாமலும் வெளியில் இந்த அவமானங்களைத் தாங்க முடியாமலும் தவித்துப்போய் நின்ற ஆசிரியர்கள் தலை குனிந்து வெட்கித்துப்போய் நின்றனர். 'தெய்வம் நின்று கொல்லும் என்ற மணியான வார்த்தைகளின் உண்மை அன்றுதான் அவர்களுக்கு புரிந்தது. அவர்களால் வாய்திறந்து பேச சக்தியில்லை.

தலைவர் கருப்பண்ணன் தனது தலைமைத்தவத்தை பக்குவப்படுத்தினார்.

''பெற்றோர்களே....! நம்ப கோரிக்கைகளையும் முயற்சிகளையும் நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவமா போறுப்பேத்துக்கிறேன்... நீங்க எல்லாரும் தந்த ஒத்துழைப்புக்கும் உதவிக்கும் என்னோட நன்றி. இப்போ நீங்க எல்லாரும் வீட்டுக்குப்போங்க... நல்ல முடிவோட உங்கள சந்திக்கிறேன்...'' என்று முடித்தார்.

நடேசன் கங்காணி விடவில்லை.

''தலைவரே நம்மளோட இந்த புதுப்போராட்டம் மலைநாடெல்லாம் கேக்கணும். இது ஒரு பாடமாகவும் இருக்கட்டும்...'' என்று அர்த்தமுடனும் ஆவேசமுடனும் சத்தமிட்டுக் கூறி அங்கு நின்ற மக்களை ஒழுங்குபடுத்தி அவர்களுக்கு தலைமைதாங்கி அந்தத் தோட்டத்தின் பாதைகளில் சுலோகங்களை கோஷமிடச்செய்து ஊர்வலமாக அழைத்துச் சென்றார்.

மாணவர்களும் அவர்களுடன் சேர்ந்து சந்தோஷமாக வெளியேறினர்.

தலைவர் கருப்பண்ணன் ராமசாமியையும் செலம்பரத்தையும் அழைத்துக்கொண்டு அதிபருடன் கல்விக்காரியாலயம் நோக்கி நடந்தார். வெல வெலத்துப் போய் நின்ற ஆசிரியர்கள் செய்வதறியாது வெட்கித்தலை குனிந்த வண்ணம் அவர்களை பின்தொடர்ந்தனர். அது... ஒரு புதிய போராட்டத்தின் ஆரம்பமானது...!

நன்றி

வீரசேரி வார இதழ்
21-05-2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளீர் விடும் நம்பிக்கை

ரவீந்திரனுக்கு அதனை நம்ப முடியவில்லை. கையில் இருப்பது கடிதமா? இல்லை கடவுள் அனுப்பிய ஓலையா? மூன்ற முறை படித்தாயிற்று. யாரும் நண்பர்களிடம் காட்டி நல்ல செய்தியாக அதை உறுதிப்படுத்திக்



கொண்டால் தான முழுதாக நம்பலாம். இந்த நேரத்தில் யாரைத்தேடி எப்படிப் போவது?

அந்தத் தோட்டத்து தபால்கார சின்னையா கடிதங்களைக் கொண்டுவரவே பிற்பகல் மூன்று மணியாகி விடுகிறது. அதற்கு அந்த மனுஷன் பொறுப்பல்ல. காலையில் ஆபீஸுக்குப் போய் சீல் வைத்த தபால் பையை எடுத்துக் கொண்டு மலையிறங்கி நாலைந்து மைல் நடந்து டவுனிலுள்ள தபாற் கந்தோரில் அன்று வந்துள்ள கடிதங்களை எடுத்துக் கொண்டு தோட்டத்துரை முதல் கணக்கப்பிள்ளைவரை எல்லாருக்கும் தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டு மீண்டும் அதேயளவு தூரத்தை நடந்துவர வேண்டுமென்றால் பொழுது போய்விடாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன?

அப்படி வரும் கடிதங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கு வருபவை தவறுதலாகத்தான் அன்று மாலைகிடைக்கும். இல்லாவிடில் அடுத்தடுத்த நாள் மாலையேதான் வந்து சேரும். தோட்டக்காரியாலயத்தில் உள்ளவர்களுக்கு அவ்வளவு அக்கறையும் மனிதாபிமானமும்.

அன்றும் அப்படியான ஒரு மாலைப் பொழுதில்தான ரவியின் அம்மா மடுவத்தில் கொழுந்து நிறுத்திவிட்டு மடியில் பத்திரமாக ஒரு கடிதத்தோடு வந்து சேர்ந்தாள்.

ரவியின் வீட்டில் அவனுடன் அம்மாவும், தங்கையும் வயதான ஒரு பாட்டியும்தான் இருக்கிறார்கள். தங்கை பிறந்தவுடனேயே தந்தை மாயழகு காலமாகிவிட்டார். தோட்டத்துப் பள்ளிக்கூடம் ரவீந்திரனுக்கும் அவன் தங்கைக்கும் அபயமளித்தது. படிப்பில் கெட்டிக்காரனாகவும் நல்லவனாகவும் வளர்ந்தான் ரவீந்திரன். தங்கை சாந்திக்கு கல்வி கசந்ததால் ஐந்தாம் வகுப்போடு படிப்பை நிறுத்திவிட்டாள்.

சின்னப் பையனான ரவி காலையில் தபால்கார சின்னையாவுடன் போய் பிற்பகலிலும் அவருடனேயே வந்து சேருவான். சில வருடங்களில் அவனுடன் வேறு சில மாணவர்களும் நகரப் பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்ததனால் அது அவனுக்குத் துணையாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. நாட்கள் நகர்ந்தன. ரவீந்திரன் சாதாரண தர பரீட்சையில் நல்ல பெறுபேறுகளுடன் உயர்தர வகுப்புக்குச் சேர்ந்தான். பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவில் அவனுக்கு அதிக நாட்டம் இருந்ததால் பரீட்சையிலும் சித்தியடைந்தான். ஆனால் அந்தப் பிரிவில் தேவையான புள்ளிகள் சிலவற்றைப் பெறத் தவறியதால் பல்கலைக்கழக வாய்ப்பு அவனை ஏமாற்றிவிட்டது. மனமொடிந்து போனான். வருடமொன்றும் கடந்தது.

ஒரு நாள் கடையிலிருந்து வாங்கி வந்த பொருட்களை விரித்தபோது அந்தப் பேப்பரின் உள்ளே பொதுச் சுகாதார அதிகாரி நியமனப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம் என ஒரு பகுதி பிரசுரமாகியிருந்தது. மனதில் ஆவல் ததும்ப கண்களை ஓடவிட்டான். பெருந்தோட்டப் பகுதிகளில் பொதுச்சுகாதார நடவடிக்கைகளுக்காக அதிகாரிகள் நியமனம் சம்பந்தமாக அது இருந்தது. அகல விரித்த கண்களுடன் சகல விடயங்களையும் வாசித்தபோது அவனுக்குள் மகிழ்ச்சி. ஆம் அதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கப்பட்டிருந்த சகல தகுதிகளும் அவனிடம் இருந்தன. விண்ணப்பம் அனுப்பியவன் பரீட்சைக்காகக் காத்திருந்தான். பரீட்சையும் முடிந்தது. முடிவுகள் எதுவும் தெரியவில்லை. மனம் நொந்து போய்விட்டான். நாட்கள் நகர்ந்தன. ரவி இப்போது அநேகமாக அதனை மறந்தேபோய்விட்டான்.

இதோ இன்று.

அவன் கையில் தவழ்ந்த அந்தக்கடிதம் ஆச்சரியத்திலும் ஆச்சரியம். நினையாதது நடந்துவிட்டது மாதிரி ஒரு உணர்வு. சொல்விசகாமல் வசனம் வழுகாமல் நன்றாக வாசித்தான்.

மாலைநேரம் எப்போதோ வெளியே இருள் கவ்வியிருந்தது. அக்கம் பக்கத்துக் காம்பிறாக்களிலும் படிப்படியாக சத்தங்களும் குறைந்திருந்தன. அங்கொன்றும் இங்கொன்றுமாக இடைக்கிடை லயத்து நாய்கள் வெகு அக்கறையாக குரைத்துக் கொண்டிருந்தன. இரவுப் பூச்சிகளின் பல்வேறு ரீங்கார ஓசை எங்கும் வியாபித்து ஒலித்தன.

லயத்துக் காம்பிறா ஸ்தோப்பில் படுத்திருந்த ரவி வெகுநேரம் தூங்கவில்லை. அன்றைய விடயங்களை மீண்டும் இரைமீட்டிக் கொண்டிருந்தான் நடு இரவும் தாண்டியது. மெதுவாகக் கண்ணயர்ந்துவிட்டான்.

அது ஒரு இருநூறு சதுர அடிகள் கொண்ட அறை. அறையின் சுவர்களில் ஒரு புறம் பொதுச் சுகாதாரப் படங்கள் வர்ணங்களில் தென்பட்டன. பத்திரிகை மற்றும் அரசாங்கத்தகவல்கள் சுகாதார செயற்திட்டங்கள். பிரதேச சனத்தொகை புள்ளிவிபரங்கள், சமீப ஆண்டுகளில் நோய்கள், நோயாளர் பற்றிய விகிதாசார வரைபு அட்டவணை, மாதாந்த வேலை ஒழுங்கு அட்டவணை, காரியாலய வெளிக்கள வேலைத்தினங்கள் பற்றிய விபரங்கள் அனைத்தும் ஏனைய சுவர்களில் நேர்த்தியான முறையில் எழுதி தொங்கவிடப்பட்டிருந்தன.

ஒரு சிறிய மேசையுடன் கதிரையும் அங்கே போடப்பட்டிருந்தது. மேசையில் தகவல் விபரக்கோவைகள் ஒரு புறம். ரவீந்திரன் கதிரையில் அமர்ந்து வெகு சுறுசுறுப்பாக கருமமாற்றிக் கொண்டிருந்தான். தொழிலாளர் சிலர் வெளியே நின்றிருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண்ணிடம் ''இந்தாங்கம்மா... தண்ணிய நல்லா சுடவச்சு ஆறவச்சு குடிங்க... வீட்டில் எல்லாருக்கும் அதத்தான் குடுக்கனும்... எவ்வளவுதான் சொன்னாலும் நம்ம ஜனங்க செய்யமாட்டேங்கிறாங்களே...'' சலித்துக் கொண்டே கூறினான்.

''இந்தக் கடிதத்த கொண்டு போய் அடுத்த தோட்டத்து டாக்டரய்யா கிட்ட குடுத்து புள்ளைக்கி மருந்தெடுங்க..!'' தன் குழந்தை வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட விடயத்தை தெரிவித்து விடுவதற்காக வந்திருந்த மங்களம் என்ற அந்தப் பெண்ணிடம் கூறினான் ரவி, அந்தத் தகவலால் அந்த நோய்த்தடுப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அடுத்த வேலை காத்திருந்தது.

''வாங்க ராமையா அண்ணே... என்னா விஷயம்...?'' அடுத்ததாக ஒருவரை அழைத்தான் ரவி, அதே தோட்டத்தில் நீண்ட நாட்களாக தெரிந்தவரை நெருக்கமான உறவோடு கூப்பிட்டான்.

''இல்லீங்க தம்பி... எங்க மேட்டு லயத்து ஆளுகளுக்கு சொல்லிச் சொல்லி எனக்கு பைத்தியம் புடிச்சிரும் போலருக்கு...'' என்று சற்று நிறுத்தினார் ராமையா என்ற மனிதர்.

''கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க...'' இடைமறித்தான் ரவி.

ராமையா தொடர்ந்தார். ''நம்ப பக்கத்து குரூப் டாக்டரய்யா போனமாசம் லயத்துப்பக்கம் வந்தாருங்க... கரத்த ரோட்லேருந்து லயத்துக்கு வாற பாதையில கால் வச்சு வரமுடியாதுங்க... சொல்லவே வாய்கொமட்டுது... டாக்டரய்யா மூக்க புடிச்சிகிட்டு ஒரே ஓட்டமா ஓடியாந்தாருங்க...'''' என்று நிறுத்தினார். ரவிக்கு விளங்கியது. ''அவ்வளவு நரகலுங்க தம்பி... 'டொய்லட் கட்டிப் போட்டிருக்கு. அங்க போகமாட்டாம இந்த அநியாயங்க.... சின்ன புள்ளைகல ரோட்டு நெடுக வக்கிறாங்க... கொஞ்சம் பெரிசுகளும் இருட்டோட போய்... சொல்ல முடியலைங்க.

தம்பி... டாக்டரய்யாவுக்கு ஒரே கோவம் 'இந்த பயலுகள் இப்பத்தாங்.... சுத்தங் இல்லே.... நாங்தொரக்கி கொம்ளேன். பண்றது' அப்படீன்னு நாய்கள பேசுறமாதிரி பேசிப்புட்டு போனாருங்க... என்று சற்று நிறுத்திவிட்டு வெளியே போய் மற்றவர்களுக்கும் கேட்டுவிட்டதோவென்று எட்டிப்பார்த்த கையோடு வாயிலிருந்த மிகுதி வெற்றிலைச்சக்கை முழுவதையும் பத்திரமாக ஒரு இடத்தில் துப்பிவிட்டு வந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தம்பி யாரும் விருந்தாடி கிருந்தாடி வந்தாலும் ரொம்ப சங்கடமா இருக்குங்க.... இந்த தோட்டத்து லயத்து ஆளுங்கல கூப்பிட்டு கண்டிப்பா சொல்லிப்புடுங்க... இந்த நாகரீக காலத்திலேயும் இப்படி முடியுங்களா...'' என்று தனது நீண்ட புகாரைக் கூறிமுடித்தார் மேட்டு லயத்து ராமையா.

ரவீந்திரனுக்கு உள்ளூர ஒரே மகிழ்ச்சி, காலத்துக்கேற்ப மக்களில் சிலர் வாழ எப்படித் துடிக்கிறார்கள் என்பதை ராமையா அண்ணன் மூலம் உணர்ந்தான். தோட்டத்துச் சுகாதாரம் ஒரு வித்தியாசமானதென்பதையும் அங்கு வாழும் மக்களில் பெரும்பான்மையோர் இன்னும் மூன்றாம் உலகத்து மனிதர்களாகவே இருப்பதையும் அவன் அறிவான். எனவே அடுத்த கருமமாக லயத்துச் சுற்றாடல் பொதுச்சுகாதாரம் அவன் கண்முன்னே பெரிதாகத் தோன்றியது. ''சரிங்க ராமையா அண்ணே... இதுக்கு ஒரு திட்டம் ஏற்பாடு செய்றேன்... நீங்க எல்லாரும் ஒத்துழைக்கணும்...'' என்றான் ரவி.

''கண்டிப்பா ஒங்க பின்னால நிப்போம் தம்பி... நம்ப சனங்கல திருத்தனும்... அப்ப நான் வாறேங்க...'' என்று விடை பெற்றுக் கொண்டுதான் ஒரு பெரிய விடயத்தை சாதித்துவிட்ட சந்தோஷத்தில் வெளியே நடந்தார் ராமையா.

''யாருங்கையா வெளியே? உள்ளே வாங்க'' அழைத்தான் ரவி. நடுத்தர வயதுள்ள ஒருவர் உள்ளே நுழைந்து பத்திரமாகக் கைளைக் கட்டிக் கொண்டு நின்றார். தோற்றம் உடை எல்லாம் நன்றாக இருந்தது.

''என்னையா நீங்க எந்தத் தோட்டம்?'' என்று கேள்வியோடு நிறுத்தினான் ரவி.

''எம்பேரு நடேசனுங்க... மேமலை டிவிஷனுங்க.... பீலிக்கரை லயத்து தொங்கல் காம்பிறா எங்களுக்கு... லயங்களுக்கு வெள்ளையடிச்சி மூணு வருஷமாச்சி... காம்பிறாவெல்லாம் ஒரே கரியா கெடக்கு... என் காம்பிறாவ என் செலவுல கொஞ்சம் சுண்ணாம்படிச்சி வச்சிருக்கேங்க... நான் சங்கத் தலைவராகவும் இருக்கேன்'' சொல்லிக் கொண்டு போனவரை ''நீங்க தொரைக்கிட்ட கேக்கலியா'' அவுங்கதானே பாக்கனும்'' என்றான் ரவி.

''நாங்க பல தடவை கேட்டோங்க... கம்பெனிக்கு நஷ்டம் நஷ்டமுன்னு சொல்லிக்கிட்டே இருக்காங்க... அதான் இந்தத்தடவை உங்ககிட்ட சொல்லி முயற்சி பண்ணுவோமுன்னு எங்கதோட்ட கமிட்டியில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைச்சமுங்க... அதுவும் சரிவராட்டி வேலைக்குப் போகாம 'ஸ்டிரைக்' செய்றதா முடிவெடுத்திருக்கிறோங்க'' சொல்லி தன கைக்கடிக்காரத்தில் நேரத்தையும் பார்த்துக் கொண்டார் நடேசன்.

தோற்றத்தில் துப்புரவான இந்த மனிதர் சிந்தனையும் தூய்மையாக இருந்ததைக் கண்ட ரவி அவரிடம் ''நீங்க என்னா தொழில் செய்றீங்க'' என்று அவர் குடும்ப விவரத்தை அறிய முற்பட்டான்.

''நான் கங்காணி வேலைங்க... டெயிலர் வேலையும் தெரியுமுங்க... என்கு மூணு புள்ளைகளுங்க... ரெண்டாவது மகள் அது பத்தனை கல்விக் கல்லூரியில் படிக்குதுங்க... மூணாவது பையன். அவன் எங்க தோட்டத்து ஸ்கூல்ல அஞ்சாம் வகுப்பு படிக்கிறான்.... சம்சாரம் வீட்டாளுங்க. அதனால எல்லாருக்கும் வீடு அழகாதுப்புரவா இருந்தாத்தான் சந்தோஷம்... நாங்க மட்டும் இப்பிடியிருந்தா போதுங்களா...?'' எனக் கேள்விக் குறியோடு நிறுத்தினார் நடேசன் கங்காணி.

ரவீந்திரன் மனத்திற்குள் அந்த மனிதரை வாழ்த்தினான். அவர் செல்லும் செயலும் சமூகத்தின் வளர்ச்சியை நோக்கிச் செல்வதை அறிந்தவுடன் தன் பங்குக்கு செய்ய வேண்டியதைச் சொன்னான்.

''ஐயா இன்னும் ரெண்டுமாசம் பொறுங்க... நான் நேரடியா பெரியதுரை கிட்டேயும் டாக்கடராய்கிட்டேயும் கதைச்சி நல்ல முடிவா சொல்றேன்.. வேலை நிறுத்தம் செய்தா அதையே ஒரு சாட்டா வச்சி மறுப்பாங்க.. நீங்க சொன்ன தகவல் ரொம்ப சந்தோஷமானது.. போயிட்டு வாங்க'' என்றான். நடேசன் நன்றி கூறிவிட்டு மெதுவாக வெளியேறினார்.

மேசையில் இருந்த தண்ணீரை ஒரு கிளாஸ் ஊற்றிக் குடித்தபின் கொஞ்சம் காலை நீட்டி கதிரையில் சாய்ந்தான் ரவி. இனிமேல் யாரும் இல்லை போலிருக்கிறது என்று நினைத்த போது இருமல் சத்தம் ஒன்று. வெளியே வந்து பாரத்தான். ஒரு வயதான அம்மா எதைப்பற்றியும் யோசியாமல் வாயில் வெற்றிலையை மென்று சப்பி துப்பிக் கொண்டிருந்தார். அவனைக் கண்டதும் சரேலென எழுந்து ''சலாங்க ஐயா...'' என்றார். அவர் இருந்த இடத்திற்கு சற்றுத் தள்ளி சிவப்பு நிறத்தில் வெற்றிலைச்சாறு பரவிக்கிடந்தது. மனதுக்குள் மிகுந்த சங்கடத்தோடு அதைப்பார்த்த ரவீந்திரன் அதைப் பற்றி எதுவும் கூறவில்லை. ஆனால் தன்னைக் கண்டவுடன் அந்த அம்மா தன்னைப் நோக்கி விழித்துக் கூறிய வார்த்தைகள் அவனுக்கு வேதனையாக இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்சட்டை போட்டவர்களைக் கண்டவுடன் தோட்டத்தில் வாழும் மக்கள் பலர் இவ்வாறுதான் மரியாதை செலுத்துகிறார்கள் என்பதும் அவன் கண்டு கொள்ள வைத்தான். இந்த நிலைமையினால் இம்மக்களை சிலர் கேவலமாகவும் தரத்தில் தாழ்ந்தவர்களாகவும் மதிப்பீடு செய்து கொள்வதை நினைக்க அவனுக்கு கவலையாகவும் இருந்தது.

''அம்மா நீங்க என்னை தம்பின்னு கூப்பிட்டா எனக்கு சந்தோஷமா இருக்கும்...'' என்று சொன்னவன் ''இந்த இடங்களுக்கெல்லாம் வந்தா இப்படி வெற்றிலை எச்சில் எல்லாம் கண்டபடி துப்பக்கூடாது... அசிங்கமாயிருக்கும்... அதனால் மற்றவரகளும் பேசுவாங்க... ஏன் வெற்றிலை போடாம வந்தா நல்லாயிருக்குமே...'' என்று பக்குவமாகப் பேசினான்.

மகிழ்ந்து போன அம்மா ''தம்பி நீங்க நல்லாயிருக்கனும்.. ஒங்க மாதிரி படிச்சவுங்க எங்ககிட்ட இப்பிடிபேசுறதே மனசுக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கு... தோட்டத்தில எங்கள யாருங்க மதிக்கிறாங்க... பழக்கதோஷத்தில கூப்பிட்டுட்டேங்க...'' என்றவர் தன்னை மதித்த முறையில் கண்களில் துளிர்விட்ட கண்ணீரை சேலைத் தலைப்பால் மெதுவாகத் துடைத்துக் கொண்டார்.

ரவிக்கு இதயமெல்லாம் நெகிழ்ந்துவிட்டது.

''உங்களோட பிரச்சினை என்னம்மா?'' என்று அவன் கேட்ட போது ''நான் தொங்கமலை தோட்டத்திலேந்து வாறேனுங்க... எங்க லயத்து கோடிப்பக்கத்து காம்பிறா ஆளில்லாம மூடியே கெடக்கு... அடுத்தது எங்க காம்பிறா... ரெண்டு நாளைக்கு மொதல்லேருந்து மேலெல்லாம் செல்லு ஊருதுங்க'' என்று சற்று நிறுத்திவிட்டு கையில் ஏதோ ஊறிச் செல்வது போல் இருக்கவே அதைத்தட்டிவிட்டார். ஒரு சிறிய எறும்பு கீழே விழுந்து மெதுவாக ஓடியது.

''ஏம்ம..! அந்த வீட்ட தொறந்து பார்த்திருக்கலாமே...'' ரவிதான் கூறினான்.

''இல்லைங்க தம்பி... தொரை சொல்லித்தான் பூட்டி வச்சிருக்காங்க... நம்ப தொறந்தா வம்புங்க... இன்னக்கி நாலு காம்பிறாவுக்கு பரவிரிச்சி.. ஆபிஸ்ல போய் சொன்னேங்க... அங்கே வந்து ஒங்ககிட்ட சொல்லச் சொன்னாங்க... ஓட்டமும் நடையுமா வந்தேங்க....'' என்று தான் வந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தைக் கூறி முடித்தார் வந்திருந்த அந்த அம்மா.

ரவீந்திரன் அதைக் குறிப்பாக எடுத்துக் கொண்டு இந்த அம்மாவை அனுப்பி வைத்தான். இது போலவே அசுத்தமான தண்ணீர், கொசுத் தொல்லை, கால்நடைகளின் அசுத்தமான கழிவுநீர் நீரோடைகளுக்குள் விடப்படல், கழிவு நீர் வடிகால்கள் உடைப்பெடுத்து நடைபாதைகள் அசுத்தமாதல், மலசலகூடங்ககளின் அவசியம் போன்ற பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தமாக அங்கே தொடர்ந்தும் வந்து கொண்டிருந்த பக்கத்துத் தோட்டங்களின் லயத்துவாழ் மக்களிடமிருந்து அவனுக்கு எடுத்துரைக்கப்பட்டன.

அனைத்தையும் பிரச்சினைகளுக்கான கோவையில் வைத்துக் கொண்டதுடன் அவற்றுக்கு உரிய தோட்டங்களின் முகாமையாளர்களுடனும் மற்றும் உரிய அரசாங்கப் பகுதியினருடனும் தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறி அனைவரையும் அனுப்பி வைத்தான் அவன்.

பைல்களை மூடி மேசையில் ஒரு புறம் வைத்தபின் கதிரையில் தலையை பின் புறமாக தொங்கவிட்டுக் கொண்டிருந்த ரவீந்திரன் மனதில் எண்ண அலைகள் மோதின. அந்தத் தோட்டத்தில் பிறந்து வளர்ந்து அறிவு தெளிந்த நாள் முதலாக அவன் கண்டவை, கேள்விப்பட்டவை, சந்தித்தவை, அனுபவித்தவை...

சிறுவனாக அந்த லயக்காம்பிறா வாழ்க்கை அரைக்காற் சட்டையும் பொத்தல் விழுந்து கிழிந்து போன சேர்ட்டுடனும் பக்கத்துக் காம்பிறாக்களின் குமார், ராமு, சங்கருடன் விளையாடித் திரிந்து சண்டை பிடித்து சிரித்துப் பேசி குறும்புகள் செய்த அந்த நாட்கள் தோட்டப் பாடசாலையில் மற்றைய சிறுவர்களுடன் சேர்ந்து படித்து ஆசிரியர்களிடம் அடிவாங்கித் திரிந்த அந்தக் காலம்.

தோட்டக் காம்பிறாக்களின் அமைப்பு, கரிபிடித்துப் போயிருக்கும் லயங்களின் தோற்றம், புல்லுமண்டிப் போயும் உடைந்து போயும் கிடக்கும். லயத்து வடிகால்கள், அதிலே லயத்து மக்கள் கொட்டும் அழுக்கு நீர், அதனால் எழுகின்ற துர்நாற்றம், மொய்த்துப் போயிருக்கும் ஈக்களின் கூட்டம், காடுமண்டிக் கிடக்கும் சுற்றுப்புறச் சூழல், அழுக்குக் சட்டையும் மூக்குச்சளியும் வரண்ட தலைமயிருமாய்த்திரியும் லயத்துக் குழந்தைகள், லயங்களில் அருகிலேயே மீனாப்புல் கூரையுடன் நாற்றமடிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டுப்பட்டிகள்... சிறுவர்களின் அசிங்கங்களால் நிறைந்து கிடக்கும் லயத்துப் பாதைகள், அடிக்கடி நோய்வாய்ப்படும் மக்கள். லயத்து மக்களை கண்டபடி பேசும் தோட்டத்து டாக்டர், திருந்துவதற்கே நினைக்காத தோட்டத்து மனிதர்கள்.

இந்தத் தோட்டத்து மக்களைப் பற்றி எவ்வளவு இழிவாகப் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். எங்கள் மக்களுக்குச் சுத்தம் தெரிய வேண்டும் சுகாதாரமாக வாழப்பழக வேண்டும். சொல்லித் தெரிய வேண்டுமா சுத்தமான வாழ்க்கை. அப்படித்தான் நினைக்கிறார்கள் தோட்டத்துச் சனங்கள். இப்படியே எத்தனை காலத்துக்கு வாழ்வது? கூடாது. இது தொடரக் கூடாது. என்கடமையை நான் விரைவாகத் தொடங்க வேண்டும். என்னைப் போலவே இன்னும் பல இளைஞர்கள் இந்த நரக வாழ்க்கையைப் போக்க வேண்டும். எம்தோட்டத்து மக்கள் விழிக்க வேண்டும். "நான் புறப்படுகிறேன்...! நான் புறப்படுகிறேன்... என்று கிளர்ந்து அவனது மன ஆதங்கம் சுற்றுமுற்றும் ஒரே இருள் படர்ந்திருந்தது. அதிகாலை சேவல் கூவும் சத்தம் மயக்கத்தில் கேட்பது போலிருந்தது.

"டேய் தம்பி ரவி என்னாடா... என்னா ஔறிக்கிட்டிருக்கே...?" என்று அவன் அம்மா லாம்பை எடுத்துக் கொண்டு பதறிக்கொண்டே காம்பிறாவுக்குள்ளேயிருந்து ஓடி வந்தாள். அவளுக்கு மனம் பதறியது. "எங்கேடா... இந்த நேரத்திலே போகப் போறே?" தொடர்ந்தும் அம்மாதான் கேட்டாள்.

ரவீந்திரனுக்கு சுயநினைவு மெது மெதுவாகத் திரும்பியது. சுற்றுமுற்றும் பார்த்தவனுக்கு நிலைமை புரிந்ததும் ஒரே வெட்கமாய்ப் போய்விட்டது. தான் இவ்வளவு நேரமும் கண்டதும் பேசியதும் கனவில்தான் என்பது விளங்கியது. முதல்நாள் மாலை வந்த கடிதத்தை நினைத்துக் கொண்டே நித்திரையில் கிடந்தவனுக்கு கற்பனையில் அதன் மாயத்தோற்றம். அது பலித்துவிட்டால்...? அந்தக் கடித்தில் இருந்த செய்தி:-

குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் எதிர்வரும் சனிக்கிழமை காலை பத்து மணிக்கு கொழும்பு தலைமைக்காரியலாயத்தில் நடைபெறும் பெருந்தோட்டத்துறை பொதுச் சுகாதார அதிகாரி பதவிக்கான நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

அவன் மனத்தில் நம்பிக்கையொளி பிரகாசமாய் ஜொலித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரத் துடிக்கும் குறிஞ்சி மலர்கள்

ரமேஷ் அந்தத் தோட்டத்து அரசாங்கப் பாடசாலைக்கு முதன் நியமனம் பெற்று ஆசிரியராக வந்து ஆறு மாதங்கள் ஓடிவிட்டன. கடந்த ஒரு வருடமாக ஆசிரியரின்றி மூடப்பட்டுக் கிடந்த அப்பாடசாலையை மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் கிடைத்த உத்தியோகத்துடன் அவன் தான மீண்டும் ஆரம்பிக்க வேண்டியிருந்தது.

மலையகத்து மன உணர்வுகளுடன் ஒன்றித்திருந்த ரமேஷுக்கு அது புதிய இடமே தவிர ஏனைய வாழ்க்கை முறைகளெல்லாம் பழக்கப்பட்டவை தான் கிளிஞ்சலும் அழுக்குமான உடைகள், எண்ணெய்ப்பசையின்றி தவித்த செம்பட்டைத் தலைமயிர்கள், துலக்காத பற்கள், ஒழுகிய மூக்குகள், அரையும் குறையுமாகக் கழுவிய முகங்களும் கால்களும், லயத்து வாழ்க்கைச் சேற்றில் தங்களை முற்று முழுதாக மூழ்கடித்துக் கொண்ட தோட்டத்துப் பிள்ளைகள் அன்றைய முதல் தினம் மீண்டும் பாடசாலைக்கு வந்த போது இப்படித்தான் காட்சியளித்தார்கள்.

ரமேஷின் மனம் கொதித்தது தங்கள் வியர்வைத் துளிகளால், நைந்து தோய்ந்து போன வாழ்க்கையால் இந்த நாட்டையே வாழவைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு சமுதாயத்தின் வாரிசுகள் இருந்த அவலத்தைப் பார்க்க அவனால் சகிக்க முடியவில்லை அவன் உறுதி பூண்டான்.

நாட்கள் நகர்ந்தன.

ரமேஷ் சுறுசுறுப்பாக இயங்கினான் ஏற்கனவே பல போது வாழ்க்கை நிகழ்ச்சிகளில் பெற்ற அனுபவங்கள் இப்போது அவனுக்கு உதவின.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கூட்டப்பட்டு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அதன்படி ரமேஷ் தோட்ட நிர்வாகத்துடனும், பிரதேச கல்வித் திணைக்களத்துடனும் அப்பகுதி போலிஸ் நிலையத்துடனும் தொடர்பு கொண்டான்.

அடுத்த வாரம் சிரம தானத்தின் மூலம் பாடசாலை வெள்ளையடிக்கப்பட்டு சுற்றுப்புறங்களெல்லாம் துப்புரவு செய்யப்பட்டு புதுப்பொழிவுடன் காட்சியளித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று – பாடசாலையின் முகப்பில் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கி முருகப் பெருமானை பற்றிய இனிமையான பக்திப் பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது.

எளிமையான அலங்காரங்களுடன் பாடசாலையின் உட்புறத்தில் ஒரு பகுதியில் சிறிய மேடை மேலே 'சிறுவர் கலைவிழா' என்ற நேர்த்தியான எழுத்துக்களுடன் காட்சியளித்தது. மேடையின் முன்னால் பாடசாலையின் வெள்ளைச் சீருடையில் பெண் பிள்ளைகள் ஒரு புறமும் வெள்ளைச்சட்டை நீலக்காற்சட்டைகளுடன் ஆண்பிள்ளைகள் மறுபுறமும் அமர்ந்திருந்தனர்.

அவர்களுக்குப் பின்னால் போடப்பட்டிருந்த 'இரவல்' நாற்காலிகளில் தோட்டத்துரை வட்டாரக் கல்வியதிகாரி, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தோட்டத்து ஹெட்கணக்கப்பிள்ளை ஆகியோர் மாலைகளுடன் அமர்ந்திருக்க அவர்களுக்குப் பின்னால் இருந்த பாடசாலை பெஞ்சிகளில் பெற்றோரும் மற்றோருமாக பாடசாலை நிரம்பி வழிந்தது.

பாடசாலையில் அரைகுறை படிப்போடு நின்று இன்று தோட்டத்து நல்ல காரியங்களில் ஆர்வத்தோடு ஒத்துழைத்து வரும் பல இளைஞர் யுவதிகளை ரமேஷ் அழைத்து அவர்களுக்கு ஒவ்வொரு வேலையும் பொறுப்பாக்கிவிட்டு தான் சகலவற்றையும் மேற்பார்வை செய்து பம்பரமாகச் சுழன்று கருமமாற்றினான்.

கலைநிகழ்ச்சிகள் ஆரம்பமாகின முதல் நிகழ்ச்சியாக ஆண்களும் பெண்களுமாக ஆறு சிறுவர்கள் மேடையில் அரைவட்ட வடிவில் கையில் களிமண்ணிலான சிறிய 'சிட்டி' எண்ணெய் விளக்குகளுடன் நின்று தமிழ் வாழ்த்துப்பா இசைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து ஒரு சிறுவனின் இனிய குரலில் பாடல் தோட்டத்து அடிமைச் சீவியத்தின் சோக கீதமாக ஒலித்தது. அது பொருள் பொதிந்த அப்பாடல் பலமான கைத்தட்டல் வரவேற்பைப் பெற்றது.

அடுத்ததாக மலையக தோட்டப் புற வாழ்க்கையினை கருவாகக் கொண்டு உருவாக்கப்பட்டு இசைக்கப்பட்ட ஒரு பாடலுக்கு சில சிறுமியர் அதற்கேற்ப உடையலங்காரங்களுடன் நடனமாடினர். அது கண்ணுக்கும், கருத்துக்கம், சிந்தனைக்கும் ஒன்றாக சகலரையும் கவர்ந்தது.

தொடர்ந்து தோட்டப் பாடசாலைகளின் அவலங்களையும் அங்கே குற்றுயிராகியிருக்கும் கல்வியினையும் காட்டும் வண்ணம் எழுதப்பட்ட சிறிய சொற்பொழிவை தனது பிஞ்சுக் குரலில் அதே வேளை கம்பீரமாகப் பார்த்துப் படித்தான் ஒரு மாணவன் அதைத் கேட்டுக் கொண்டிருந்த வட்டாரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியதிகாரியின் முகத்தில் பல்வேறு கோணங்களில் வளைவுகளும் நெளிவுகளும் தோன்றின. ஒருகால் கனைத்துக்கொண்டார்.

அதன்பின்பு ஒரு மாணவி கையில் சிறு கடதாசியுடன் மேடையில் வந்து 'மைக்' முன்னால் வணக்கம் சொல்லி தொடர்ந்தாள். 'கலைவிழாவுல என்னா வேசம் போடப்போறீங்கன்னு கொஞ்சப் பேர் கிட்ட எங்க சேர் கேட்டார். அவுங்க விருப்பத்த சொல்லி அந்த மாதிரி உடுத்திக்கிட்ட மொதல்ல வாறார் இதோ ரவி ராமசாமி.

அந்தப் பெயரைக்கொண்ட சிறுவன் மேடைக்கு வந்தான். போலி ஸ்டெதாஸ்கோப் கழுத்தில் தொங்கியது. 'நான் டாக்டர் வேலைக்கு போறேன்' என்று நடந்து மேடையின் முன்னால் ஒரு பக்கமாக வந்து நின்றான். எல்லாரும் ஒருக்கால் சிரித்துக் கொண்டார்கள்.

எனக்கு டீச்சர் வேலைதான் வேனும் 'புத்தகம், தோல் பை சகிதம் சேலைகட்டி அழகாக ஒயிலாக நடந்து மேடையில் நின்றாள் ஒரு மாணவி. 'சுமதி பழனியாண்டி அவளோட ஆசைய சொல்லிட்டா' என்று இரண்டாவது ஆளை அறிமுகப்படுத்தினாள் மாணவி.

மூன்றாவதாக வரப்போறவர் 'சின்னத்தம்பி மருதமுத்து' சிறிய கருப்புக்கோட்டு வெள்ளை நீளக்காற்சட்டை, சப்பாத்து, மூக்குக் கண்ணாடி என்பவற்றோடு மிடுக்காகவும், துடுக்காகவும் வந்த ஒரு மாணவன் கையில் இருந்த ஒரு 'பைலை' சபையை நோக்கி நீட்டியபடி 'கனம் நீதிபதி அவர்களே தோட்டத்தில கொழப்பம் செய்தான்' என்று போய் சொல்லி டெவன் தோட்டத்து சிவனுவை துவக்கினால் சுட்டவர் இந்த சுப்பிரிண்டன் என்பதை சாட்சிகளோடு நிரூபிக்கிறேன்' என்று மளமளவென்று பொரிந்தான் அந்த மாணவன்.

மண்டபத்திலே ஒரே அமைதியாகிவிட்டது தோட்டத்துரையைத் தவிர பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட அனைவரும் ஒரே வியப்போடு அவனைப் பார்த்தார்கள் தொழிலாளப் பெற்றோருக்கு முகத்தில் பயத்தின் சாயலோடு வியர்த்துக் கொட்டத் தொடங்கிவிட்டது. ஒரே கைதட்டலுடன் அதை பிறகு வரவேற்றார்கள். இருப்பினும் பயம் நீங்கவில்லை.

தோட்டத்துரை மெதுவாக வட்டாரக்கல்வி அதிகாரியிடம் ஆங்கிலத்தில் கேட்டபோது அவர் கூறியதைக் கேட்டதும் துரையின்கண்களில் இரத்தச் சிவப்பாய்கோடுகள் போட்டன முகம்துடித்தது அதற்குத் தூபம்போடுவதுபோல் அடுத்த சிறுவன் வந்தான்.

'இதோ சங்கர் கருப்பையா அவரோட விருப்பம்' என்று சொல்லி முடிக்குமுன்பே அரைக்காற்சட்டை சேட், சப்பாத்து, தொப்பி ஆகியவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்து கொண்டு கையில் ஒரு 'வாக்கிங் ஸ்டிக்'குடன்–

'நான்தான் இந்தத் தோட்டத்து சுப்பிரிண்டன்' என்று அந்தத் தோட்டத்து துரை நடப்பதுபோல் ஒற்றைக்காலை இழுத்து நடந்து வந்தான் இதைப் பார்த்ததும் யாரும் சொல்லாமலே துரைக்குப் புரிந்துவிட்டது. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பது போலிருந்தது. யாரிடமும் கதைக்கவில்லை.

மேடையில் நின்ற நான்கு மாணவர்களும் வரிசையாக நின்று சபையோருக்கு வணக்கம் சொல்ல மண்டபம் நிறைந்த கைதட்டல் எழுந்தது. கடைசியாக ஒரு குட்டி நாடகம்.

அரசாங்க உத்தியோகங்களுக்கும் தோட்ட உத்தியோகங்களுக்கும் விண்ணப்பித்து முயற்சி செய்து அநீதியிழைக்கப்பட்ட தோட்டத்து இளைஞர் கூட்டம் ஒன்று கூடி காரசாரமாக விவாதிக்கிறது. முடிவில் போராட்டத் தீர்மானம்!

எமது உரிமைகளைப் பறிக்காதே! அரசாங்க உத்தியோகம் எமக்கும் வேண்டும்! தோட்டத்து உத்தியோகங்கள் எங்களுக்கே! வெளியாரை வெளியேற்று! தலைவர்களை தலைவணங்கோம்!

இப்படியான வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளை கைகளில் ஏந்தியவண்ணம் இளைஞர் கூட்டம் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்துகிறது.

எதிரே குண்டாந்தடிகள் சகிதம் வந்த பொலிஸார் கலைந்து போகுமாறு கூற அவர்கள் மறுக்க அடிவிழ அவர்கள் மயங்கி கீழே விழ மற்றவர்கள் ஓட்டம் எடுக்கிறார்கள். பொலிஸார் போகிறார்கள். நாடகம் முடிகிறது.

மண்டபத்தில் இருந்த பெற்றோரும் ஆவேசம் கொண்டவர்கள் போல் வெறியோடு கைதட்டுகிறார்கள்.

பொலிஸ் பொறுப்பதிகாரியும், தோட்ட சுப்பிரண்டனும். வட்டாரக் கல்வியதிகாரியும் ஏதோ முணுமுணுத்து கொள்கிறார்கள். ரமேஷின் முகத்தில் ஒரே மகிழ்ச்சி அவனது முகத்தில் ஒரே மகிழ்ச்சி அவனது நன்றி யுரையோடு விழா முடிகிறது.

அடுத்த நாள் பாடசாலைக்கு விடுமுறை மூன்றாம் நாள் பாடசாலையில் மாணவர்கள் ரமேஷை சூழ்ந்துகொண்டு கலைவிழாவைப் பற்றி சந்தோஷமாக கேட்ட வண்ணம் இருக்கிறார்கள். அவர்களுடைய ஆசைகள், ஏக்கங்கள் ரமேஷின் மனதில் புதிய எண்ணங்களை தோற்றுவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எதிர்கால எழுச்சிக்கு இந்த பிஞ்சு மலர்களைத் தயார் செய்வேன்' அவன் மனதில் திடமான உறுதியெடுக்கிறான்.

மத்தியானம் ஆகியது.

தோட்டத்து தபாற்காரன் ஒரு தந்தியைக் கொண்டு வந்து ரமேஷிடம் கொடுக்கிறான்–அதிலிருந்த செய்தி? 'நீர் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறீர்'–கல்விப் பணிப்பாளர்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக சமூகத்தின் உயர்வுக்காகப் போராடிய ஒரு ஆத்மா மௌனித்தது

முத்து சம்பந்தர்
உதவிக் கல்விப் பணிப்பாளர் – கண்டி
(இந்து சமயம்)

---

அமரர் மாரிமுத்துப்பிள்ளை நாமதேவன் அவர்களை சுமார் முப்பத்தைந்து வருடமாக நான் அறிவேன்.

1970 ஆம் ஆண்டளவில் " மலையக ஆசிரியர் சங்கம்" என ஒன்று மலையக ஆசிரியர் சமூக வரலாற்றில் உருவாக்கப்பட்டது.

அதன் தலைவராக அமரர் எம். எஸ். அன்னராஜ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டார். அவரோடு திரு. ஏ. ஜெயசிங், திரு. கே. வெள்ளைச் சாமி, அமரர் எம். நாமதேவன் ஆகியோரும் நானும் ஆரம்பகால உறுப்பினர்களாகக் கடமையாற்றினோம்.

அமரர் எம். நாமதேவன் அவர்கள் முற்போக்கு எண்ணம் கொண்டவர். மலையக சமூகம் கல்வித்துறையில் விரைவாக முன்னேற வேண்டும் எனும் வெறி கொண்டவர். மலையக மாணவர்களுக்கும், மலையகச் சமூகத்தின் வளர்ச்சியும் தடைப்படுத்த முனையும் சக்திகளுக்கும் பெரும் சவாலாக வாழ்ந்தவர் திரு. எம். நாமதேவன் பலவித எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், தடைகளுக்கு மத்தியிலும் தாம் மேற்கொள்ளும் செயற்பாட்டை அயராது நிறைவேற்றியவர்.

போலி உறவுகளும் கூலைக் கும்பிடுகளும், சுயநலப்போக்கும் என்றும் அவரால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. சமூக முற்போக்குக் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள், வில்லுப்பாட்டுகள் எழுதுவதில் வல்லவராகவும், தாம் எழுதிய வில்லுப்பாட்டுக்களை, நாடகங்களை மாணவர்களைக் கொண்டு மேடையேற்றியும் வந்தார்.

1968 ஆம் ஆண்டு முதல் ஆசிரியராக, அதிபராக, அதிகாரியாக கல்வித்துறையில் பல பொறுப்புகளை இவர் வகித்தார். இவரது சேவைக் காலத்தில் எந்தவித குறைபாடுகளும் இன்றி திருப்தியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பெருமை இவரைச் சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கத்தை தம் உயிர் மூச்சாகக் கருதி வாழ்ந்து மறைந்தவர் அமரர் நாமதேவன். அத்தோடு தம் குடும்ப உறுப்பினர்கள் மீது அளவற்ற பற்று வைத்தவர். அதிலும் தன் தாய் மீது மிகுந்த பற்றுவைத்தவர். தாய் சொல்லே மந்திரம் என தன் இறுதி மூச்சுவரை வாழ்ந்தவர். குழந்தைகள் மீது மிகுந்த அன்பு கொண்டவர். அவர் மிகவும் நோயுற்று, இருந்த போது அவரைப் பார்வையிட சென்றிருந்த எம்மிடம் எமது ஒவ்வொருவரது பிள்ளைகளின் பெயர்களைக் கூறி அவர்கள் பற்றிய முழுவிபரங்களையும் கேட்டு மிகவும் மகிழ்ந்து போனார்.

---

கண்டியிலே இருந்து அவர் இறுதியாக சிகிச்சைக்கு கொழும்பு செல்லவிருந்தப் பொழுது, அவரைப் பார்க்க நானும், திரு. பி. பெரியசாமி அவர்களும் போனோம். அப்பொழுது அவர் சொன்னார், ''நீங்கள் கொழும்புக்கு என்னைப் பார்க்க வரவேண்டாம். சிறிய ஆப்பரேசன் ஒன்று மட்டும் தான் உள்ளது. அது முடிந்த உடனேயே வந்துவிடுவேன். வந்து ஒரு ஒன்று கூடல் நடாத்தி ஆடிப்பாடுவோம்'' என்று கூறினார்.

ஆனால் அது நிறைவேறாது போய் விட்டது. மலையக சமூகத்தின் உயர்வுக்காகப் போராடிய ஒரு ஆத்மா மௌனமாகியது. ஆத்மா சாந்தியடைய எமது பிரார்த்தனைகள்.

''போற்றுவார் போற்றட்டும்
புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும்
ஏற்றதொரு கருத்தென்றால்
எடுத்துரைப்பேன்
எவர்வரினும் அஞ்சேன் நில்லேன்''

–பாரதிதாசன்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னவரைப் பற்றிய என் எண்ணங்கள்.....

திருமதி. சரோஜா நாமதேவன்
முன்னாள் உதவிக் கல்விப்
பணிப்பாளர் – கண்டி

என் வாழ்வில் பாடிக்கொண்டிருந்த குயில்கள் அனைத்தும் சட்''டென ஓய்ந்துப் போய் விட்டது போல் உணர்கிறேன். ''மண்ணில் இருந்து சிருஷ்டிக்கப்பட்ட மனிதன், மண்ணுக்கே திரும்புவான்'' என்பது தான் நான் அனுஷ்டிக்கும் கிறிஸ்தவ சமயத்தின் தத்துவம். எல்லாம் தெளிவாக தெரிகிறது. புரிகிறது...... ஆனாலும் – ''விண்'' என்றொரு வலி அப்படியே இருக்கிறது.

எல்லா ஆண்களிலும் அவர்கள் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் கண்டிப்பாக இருப்பாள் என்பார்கள். இங்கே நேர் எதிர். என் வாழ்க்கையில் வெற்றி என்று ஏதும் இருக்குமானால் அவை அத்தனைக்கும் சொந்தக்காரர்; காரணர் என் கணவர் தான்.

என் பெற்றோர்கள் ஆசிரியர்கள்; பத்து உடன் பிறப்புகள் எனக்கு. முப்பத்திரண்டு வருட கல்விப் பணியில், வெறும் மூன்றே தினங்கள் விடுமுறை எடுத்திருந்த என் தகப்பனார் மூலமாக கடமையை செவ்வனே செய்யும் பண்பு எனக்குள் வந்திருந்தது. பிள்ளைகளுக்காக தன் தொழிலை விட்டு, அன்பு, பாசம் என பொழிந்து வளர்த்த எம் தாய் மூலமாக அவையும் எம்முள் நிறைந்திருந்தது. பல்கலைக்கழகத்தில் என் படிப்பை முடித்துக் கொண்டு, மோபிரே கல்லூரியூடாக கல்வித்துறையில் ஈடுபட்ட என்னுள் ஆலயப்பணிகளில் ஆர்வம் அதிகமாக இருந்தது. இயல்பாக ஓடின என் வாழ்வில், 1983 வன்செயல் என்னை தென் இந்தியாவுக்கு போகப்பண்ணிற்று. அங்கும் ஆசிரியையாக பணியாற்றிய நான், 1984ல் மறுபடியும் இலங்கை வந்து என் கணவர் திரு. எம். நாமதேவனை என் வாழ்க்கைத் துணைவராக கரம் பற்றினேன்.

மணமாகி ஒரு மாதம் ஆவதற்குள் பெண்கள் மகாநாடு ஒன்றுக்காக நெதர்லாந்து போகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மனம் சலிக்காமல், குறையேதும் கொள்ளாது பூரண சம்மதத்துடன் சகல ஆயத்தங்களிலும் முழு ஒத்துழைப்பு நல்கி என்னை அனுப்பி வைத்தார். அந்த புரிந்துணர்வும், அன்பும் இருபத்தி நான்கு வருடங்களாக எங்களுள் நீடித்தது. என் கிறிஸ்தவ மார்க்கத்தை கைக்கொள்ள ஒரு போதும் தடையாக அவர் இருந்ததே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. சில விசேட சந்தர்ப்பங்களில் என்னோடு அவரும் ஆலயம் வந்தார்.

பொதுவாக, மலையகப் பெண்கள் முன்னேறாது பின் தங்க அவர்களது கணவன்மாரும் பெரும்பாலும் காரணமாவதுண்டு. தம்மை விட அல்லது தமக்கு சமமாக தானும் தொழிலில், கல்வியில், சமூகத்தில் உயர்வதை சகிக்க, அனுமதிக்க மாட்டார்கள். ஆனால் என் கணவரிடத்தில் இந்த சிக்கல் ஒரு போதும் இருக்கவே இல்லை.

என தொழில் சம்பந்தமான அனைத்திலும் மிகவும், மிகவும் ஊக்கப்படுத்தினார். நான் சோர்ந்திடும் வேளைகளில் உற்சாகப்படுத்தினார். இதை எப்படி நான் செய்யப் போகிறேன்? "என தயங்கி பின் வாங்கப் பார்க்கையில் தைரியமூட்டினார். தொழில் ரீதியான கருத்தரங்குகள், பயிற்சி நெறிகளில் ஈடுபட நேரிடுகையில் நாங்கள் இருவரும் அமர்ந்து பல மணித்தியாலங்கள் கலந்துரையாடி குறிப்புகள் ஆராய்ந்து சேகரிப்போம். அவற்றுக்கு அவசியப்படும் உபகரணங்களை அழகான தன் ஆங்கில, தமிழ் கையெழுத்துகளில் ஆயத்தப்படுத்தி தந்தார் என் துணைவர்.

தூர இடங்களுக்கு மேற்பார்வைக்கு செல்லும் போது விடியற்காலை 4.20 மணிக்குரிய பேருந்தைப் பிடிக்க வேண்டும். "திணைக்கள வாகனமோ, கல்வி உத்தியோகத்தர்களோ உங்களால் காத்து நிற்கக் கூடாது" என வீட்டிலிருந்து பஸ் தரிப்பிட சந்திவரை இருளில், குளிரில் நடந்து என்னோடு வந்து ஏற்றி அனுப்பினார். அதே போன்று மாலை, களைத்து சோர்ந்து வரும் எனக்கு, எனக்கு முன்பாக அவர் வீடு வந்திருப்பின் அல்லது வீட்டில் இருப்பின் தேவ பானமாக ஒரு தேனீரை கொண்டு வந்து நீட்டுவார். அந்த அன்பில், கரிசனையில் புது பலம் பெற்றிடுவேன். இரவு உணவு, மறு நாள் சமையல் ஆயத்தம் என சுழல ஆரம்பித்திடுவேன்.

எங்களுடைய ஒரே அன்பு மகனை குழந்தையாக இருக்கும் போது மட்டுமல்ல; இறுதி வரை கண்ணில் வைத்துக் காத்தார். உணவு, உடை, படிப்பு, தொழில்... என சகலவற்றிலும், எல்லா கட்டங்களிலும் பார்த்து, பார்த்து செய்தார். அவன் கால்களை துடைத்து, துடைத்து காலணிகள் அணிவிப்பார். கொழும்பில், கடற்கரையில் பிள்ளையை இறக்கி விட மறுத்தார். மணல் பாதத்தை பாதித்து விடும் என போத்தி, போத்தி காத்தது இப்போதும் நினைவில் இருக்கிறது. மகன் மனோஜ் இப்போது தோளுக்கு மேல் வளர்ந்து விட்ட பின்னும் கண்களுக்குள் வைத்து காத்தார். அதே கொழும்பில், சுகயீனமடைந்து தங்கியிருந்தப் போது தொழிலுக்கு போகும் மகனுக்கு அவனது பையையும். கையடக்க தொலைபேசியையும் தானே எடுத்துக் கொண்டு வந்து கையில் கொடுப்பார். மகனோடு வாசலுக்குச் சென்று கண் மறையும் வரை கையசைத்து அனுப்பி வைப்பார் நாள்தோறும். அன்பான இவரை கணவனாக, தகப்பனாக பெற்ற பாக்கியசாலிகள் நாங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையிலேயே தந்தையை இழந்த தன் ஏழு சகோதரர்களுக்கு ஆதரவான தமையனாக மட்டுமின்றி தகப்பனாகவும் வாழ்ந்தார். அது போன்றே என் பத்து சகோதர்களுக்கும் வெறுமனே மைத்துனராக மட்டுமின்றி, தன் சகோதர்களுக்கு மாற்றின்றி நேசித்தார்; பாசம் காட்டினார்.

கடமையிலும் கண்ணியம், கட்டுப்பாடு நேரம் தவறாமை, அஞ்சாமை என பல சிறப்புகளுடன் செயற்பட்டார். வீட்டில் ஆகட்டும், பாடசாலையில் ஆகட்டும் சிறு தூசியைக் காணவும் சகிக்க மாட்டார். எளிமையான வாழ்க்கை முறை; உதவுவதற்கு முன் வரும் கரங்கள் என பல சிறந்தவற்றை நான் அடுக்கிக் கொண்டே போக முடியும். பாடசாலை ஆரம்பிக்க முன் நான் கலைமகள் பாடசாலையிலும், கணவர் இந்து சிரேஷ்ட பாடசாலையிலும் காலையில் மேலதிக வகுப்புகளை எடுக்க விடிய தோடர் வண்டியில் உடத்தலவின்னயில் இருந்து வந்தோம் அவரை சவப்பெட்டியில் கிடத்தியிருந்த நேரம் ஒரு மாணவன் வந்து கதறினான்; "இவர் எங்களுக்கு படிப்பு மட்டும் கொடுக்கவில்லை, 'எங்களுக்கு பசிக்குமே' என சொல்லி எங்கள் எல்லாருக்கும் சாப்பாடு வாங்கிக் கொடுத்து விட்டு மாலை வகுப்பை வைப்பார்". கல்வியே காசாக ஆகி விட்ட இந்த நாட்களில், சலிப்பின்றி இலவச வகுப்புகளை எடுத்து மாணவர் நலனையே எல்லாமாக வாழ்ந்தார் என் துணைவர்.

'உரிய மாணவனுக்கு உரிய பரிசு சென்றடைய வேண்டும்' என்பதில் வெகுவாக சிரத்தைக் கொண்டவர். இவ்வருட சமூகக் கல்வி விழாவுக்கு, (2008 ஜூலை மாதம்) சத்திர சிகிச்சைக்காக ஆயத்தப்படும் நிலையிலும், தன் கைப்பட "எழுத்துப் பிழைகள் சான்றிதழில் வரக் கூடாது" என்ற கரிசனையுடன் எனக்கு எழுதித் தந்தார். என் கணவர் கடைசியாக என் தொழிலில் உதவிய தருணம் அது.

நிரம்ப எழுத்து ஆர்வம் கொண்டவர். கவிதை, கதைகள், கட்டுரைகள் என பல தரப்பட்ட ஆக்கங்கள் வீரகேசரி, சிந்தாமணி, கொந்தளிப்பு, குன்றின் குரல், கண்டி இலக்கிய செய்தி மடல் என எழுதியுள்ளார். 1966 முதல். இறுதியாக கொழும்பு மருத்துவ மனையில் வைத்துக் கூட நாற்பத்திரண்டு நீண்ட வருடங்களாக அவர் எழுத்தப் பணி தொடர்ந்தது.

நினைவறிந்த நாள் முதல் நான் என் தேவனை நம்பி நமஸ்கரித்து வந்துள்ளேன். தேவன் எனக்கு நல்ல துணைவரையே தந்தார். அவர் கொடுத்தவரை வேளை வந்த போது அழைத்துக் கொண்டார். ஆண்டவரின் சமூகத்தில் நான் போய் நிற்கும் நாள் வருமனவும் என் துணைவரோடு நான் வாழ்ந்த காலங்களின் நினைவுகளே துணையாக எனக்கு அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை மனப்பான்மையும் அர்ப்பணிப்பும் கொண்ட அமரர் நாமதேவன்

திரு. பி. பெரியசாமி,
கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்,
கண்டி

கண்டி கல்வி வலயத்தில் உதவி கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி சில வருடங்களுக்கு முன் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற திரு. எம். நாமதேவன் 30-08-2008 அன்று காலமானார் என்ற துயரச் செய்தி மலையகக் கல்வித் துறையைச் சார்ந்த அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது.

சாதாரண குடும்பத்தில் பிறந்து, கல்வி கற்று 1968ம் அண்டில் ஆசிரிய நியமனம் பெற்ற திரு நாமதேவன் பெருந்தோட்ட மணாவர்களை அதிகளவில் உள்ளடக்கியிருந்த கெங்கல்ல தமிழ் வித்தியாலயம், கந்தகெட்டிய தமிழ் வித்தியாலயம், இந்து சிரேஷ்ட தமிழ் வித்தியாலயம் ஆகிய கல்வி நிறுவனங்களில் பணியாற்றினார்.

தனது மணவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர்களா இருக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தைக் கொண்டிருந்த திரு. நாமதேவன் அதற்காக கடுமையாக உழைத்தார். சிறந்த முறையில் கல்வி கற்பித்ததோடு, தனது மாணவர்கள் புறக்கிருத்திய நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்க வேண்டுமென்பதற்காக தானே வில்லுப்பாட்டுகள், நாடகங்கள் எழுதி மணவர்களை பழக்குவித்து மேடையேற்ற ஒழுங்குகளை மேற்கொண்டார். இதனால் அவரது மாணவர்கள் சிறந்த வெற்றிகளைப் பெற்றார்கள்.

திரு, நாமதேவன் கண்டி விவேகானந்த தமிழ் வித்தியாலயத்தில் நீண்டகாலம் அதிபராகக் கடமையாற்றினார். இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி தன்னை சிறந்த ஒரு நிர்வாகியாகவும். முகாமையாளராகவும் வெளிப்படுத்தினார். கடமை உணர்வும் திறமையும் வாய்ந்த ஆசிரியர்களைப் பாராட்டி ஊக்குவித்ததோடு, கடமை தவறிய ஆசிரியர்களை கண்டித்துத் திருத்தி நல்வழிப்படுத்தினார்.

அதிபராக இருந்த காலத்திலும் மாணவர்களின் கல்வி உயர்வு கருதி பல சிறந்த செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தினார். ஆசிரியர், அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிகளை வகித்த காலத்தில் ஆசிரியர் சங்கங்களிலும் அதிபர் சங்கங்களிலும் தன்னை இணைத்துக் கொண்டார். குறிப்பாக மலையக தமிழ் ஆசிரியர் சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராக அவர் இருந்தார். ஆசிரியர்களின் உரிமைகளை தட்டிக் கேட்டதோடு நின்றுவிடாது, அவர்களின் தொழில் வண்மை விருத்தியிலும் மிகுந்த கவனம் செலுத்தினார்.

1997ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்று ஹட்டன் கல்வி வலயத்தில் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளராக கடமையினை பொறுப்பேற்ற திரு. நாமதேவன் தன்னை கடமையுணர்வும் அர்ப்பணிப்பும் கொண்ட கல்வி அதிகாரியாக வெளிப்படுத்தினார். கல்வியில் முன்னேற துடிக்கின்ற பெருந்தோட்ட மாணவர்களை அதிகமாகக் கொண்ட ஹட்டன் வலயப்பாடசாலைகளுக்கு சென்று மேற்பார்வைப்பணிகளில் சிறப்பாக ஈடுபட்டார். அதிபர்களுக்கு தேவையான ஆலோசனைகளையும், அறிவுறுத்தல்களையும் வழங்கியதோடு, அவர்களை கடமையுணர்வு கொண்ட நல்ல அதிபர்களாக மாற்றுவதற்கு ஆவன செய்தார். ஆசிரியர்களை மேற்பார்வை செய்தும். பயிற்றுவித்தும் அவர்களுக்கு நல்வழிகாட்டியும் உதவினார்.

2003ம் அண்டு கண்டி கல்வி வலயத்துக்கு இடமாற்றம் பெற்ற திரு. எம். நாமதேவன் தனக்கே உரிய பாணியில் சிறப்புப் பணியாற்றினார். இக்காலக் கட்டத்தில் நோய்வாய்ப்பட்ட அவர் குணமடைந்து 2005ம் ஆண்டு சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

திரு. எம். நாமதேவன் கல்விப்பணி ஆற்றியதோடு நின்றுவிடாது. இலக்கியப் பணிகளிலும் தன்னை இணைத்துக் கொண்டவர். ஆசிரியராக, அதிபராக, அதிகாரியாக இருந்த காலக் கட்டங்களில் சமூக பிரக்ஞை கொண்ட சிறுகதைகளையும். கட்டுரைகளையும் நிறையவே எழுதினார். இலங்கையின் பிரபல பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன், சிந்தாமணி ஆகியவற்றிலும் சிற்றிலக்கிய சஞ்சிகைகளை கொந்தளிப்பு, கண்டி இலக்கியச் செய்திமடல், ஆகியவற்றிலும் அவரது ஆக்கங்கள் வெளியிடப்பட்டன. சமூக அவலங்களையும். துன்ப துயரங்களையும் தனது இலக்கியப்படைப்புகளில் வெளிப்படுத்திய திரு எம். நாமதேவன் சரியான தீர்வுகளையும் முன்வைத்தார். பெருந்தோட்ட சமூக மக்களின் உயர்வே அயரது இலட்சியமாக இருந்தது. அவரது இலக்கியப் படைப்புகளில் அதனை வெளிப்படுத்தினார்.

அமைதியான கலை இலக்கியப்பணி செய்த அவர் மலையக கலை, இலக்கிய உலகில் இனங்காணப்படாத, உரிய முறையில் கௌரவிக்கப்படாத ஒருவராக இருந்திருக்கிறார் என்பது ஒரு கசப்பான உண்மையாகும். அவரது இலக்கியப் படைப்புகள் தொகுக்கப்பட்டு அனைத்து வாசகர்களுக்கும் சென்றடைவதற்கான பணிகளை மேற்கொள்வதே அவருக்கு, அவர் மறைந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகாவது செய்கின்ற பணியாக இருக்க முடியும்.

அமரர் நாமதேவன் சைவசமயப் பணிகளிலும் தன்னை இணைத்துக் கொண்டவர். அறநெறிப் பாடசாலைகளை நிறுவுவதில் அவர் அதிக ஆர்வம் காட்டினார். மாணவர்கள் சமய நெறியில் நின்று ஒழுக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதில் அவர் உறுதியுடன் இருந்தது மட்டுமன்றி அதனை செயலிலும் காட்டினார்.

சிறந்த ஆளுமையும் நற்பண்புகளையும் கொண்டிருந்த திரு. நாமதேவன் சக பணியாளர்களுடன் அன்பாக பழகுபவராக மட்டுமன்றி, தேவையான சந்தர்ப்பங்களில் தன்னாலான உதவிகளையும் செய்தவர். எல்லோராலும் அன்புடன் மதிக்கப்பட்டவர். தன்னை நோய்வாட்டிய போதிலும் கூட அதனை பெரிதுப்படுத்தாது, தனது கடமைகளை செவ்வனே செய்தவர். மற்றவர்களின் சுக துக்கங்களில் கலந்து கொண்ட சிறந்த பணிப்பாளர் அவர்.

சமூகம் அவர் மீது வைத்திருந்த அன்பையும் மதிப்பையும் அவரது இறுதி சடங்கில் கலந்துகொண்ட மக்கள் கூட்டம் வெளிப்படுத்தியது. மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நண்பர்கள், பொதுமக்கள் திரண்டு வந்து அவருக்கு அஞ்சலி செலுத்தியது அனைவரையும் மனம் நெகிழ வைத்தது.

அமரர் நாமதேவனின் துணைவியார் மலையக கல்வி உலகுக்கு நன்கு அறிமுகமானவர். அவரும் அவரது கணவருடன் இணைந்து சிறப்பான கல்விபணியாற்றியவர். சமூகவிஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற அவருக்கு கணவரின் இழப்பு பெருந்துயரத்தைக் கொடுத்துள்ளது. எனினும், அவரும் அவரது ஏக புதல்வரும் அமரர் நாமதேவனின் இலக்கியப்படைப்புகளை தேடி எடுத்து அவற்றை புத்தக வடிவில் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது மிகவும் அவசியமாகும். கட்டுரையாளர் அமரர் நாமதேவனின் நீண்ட கால நண்பராக இருந்தவர் என்ற அடிப்படையில் இப்பணிப்புக்கு நிச்சயமாக உதவுவேன்.

அமரர் நாமதேவனின் வாழ்வும் வாழ்க்கை நெறிகளும் கலை, இலக்கியத்துறையிலும் கல்வித் துறையிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்ற இளைய தலைமுறையினர்க்கு நிச்சயம் முன்மாதிரியாக அமையக் கூடியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாவைப் பற்றிய எனது நினைவலைகள்

திரு. என். கிருஷ்ணகுமார்.
அதிபர்
க/போபிட்டிய த.வி.
தெல்தோட்டை

விதைக்கப்பட்ட விதைகள் யாவும் நல்ல விருட்சங்களாகி விடுவதில்லை. படைக்கப்பட்ட எழுத்துக்கள் யாவும் நல்ல காவியங்களாகி விடுவதில்லை. ஆனால் சில நேரங்களில் சில விதைகள் நல்ல விருட்சமாவதைப் போல, படைக்கப்பட்ட நல்ல காவியமாக இறைவனால் படைக்கப்பட்ட இம் மானுட குலத்திற்கு பண்பு சேர்க்கும் மாமனிதராக இம்மண்ணில் பிறந்த எமது முன்னால் கோட்ட கல்வி பணிப்பாளர் திரு. நாமதேவன் ஐயா அவர்கள் திகழ்ந்துள்ளார் என்றால் அது பொய்யாவதில்லை.

ஏனெனில் அவர்களின் கம்பீர தோற்றம், நேர்த்தியான நடையுடை, உயரிய பண்புகள் அனைத்தும் கல்வித்துறையில் பணியாற்றும் எமக்கு சிறந்த முன்மாதிரிகளாக அமைந்தன. எவ்வாறெனின் என்னுடைய காலப்பகுதியில் அதாவது நான் க:போபிட்டிய த.வி. அதிபராக கடமையேற்று மூன்று மாதங்களில் 2003-11-24 அன்று திரு. நாமதேவன் ஐயா அவர்கள் முதன்முறையாக எமது பாடசாலைக்கு வருகைத் தந்தார். அன்றைய அறிமுகமே அவர்களிடத்தில் ஓர் நெருக்கமான உறவை ஏற்படுத்தியது. அவர் விஜயம் செய்த அன்றைய தினமே அவர்கள் தனது சேவையில் கொண்டுள்ள ஈடுபாட்டை நான் உணர்ந்தேன். எவ்வாறெனின் அவர்கள் சத்திரசிகிச்சை நிறைவடைந்து மருத்துவர்களால் ஓய்வாக இருக்குமாறு ஆலோசனை கூறிய காலப்பகுதியிலே அவர்கள் கஷ்டப் பிரதேச பாடசாலை என்றும் பாராது தொழில் ரீதியாக எமது பாடசாலைக்கு வருகை தந்தார். மேலும் அச்சந்திப்பின் போது அவர்கள் எனக்கு கூறிய கருத்துக்கள் பாடசாலை வளர்ச்சிக்கும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும் பெரிதும் உதவக் கூடியதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அதன் பின்னர் அடிக்கடி பாடசாலைக்கு வந்து மேற்பார்வை செய்வதும், எமக்கு ஆலோசனைகள் கூறுவதும் எம்மை செம்மைப்படுத்துவதற்கு உதவியாக இருந்தது. அவர் என் மீதும், எமது பாடசாலையின் மீதும் ஏதோவொரு வகையில் ஈர்ப்புக் கொண்டவராக காணப்பட்டார். அதன் பயனாக பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் கற்றல் கற்பித்தல் உபகரணங்கள், சீருடை என்பன கொழும்பிலிருந்து தனது சொந்த செலவில் வாகன வசதிகளை ஏற்படுத்தி எமது பாடசாலைக்கு பெற்றுத் தந்தார். அவ்வேளை எல்லா மாணவர்களுக்கும் சென்றடையுமாறு பங்கிட்டு வழங்குமாறு கேட்டுக்கொண்டார். நான் அவர்களாலேயே அப்பொருட்கள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டதற்கிணங்க, ஒருநாளை ஒதுக்கி துணைவியாரோடு வந்து அவர்களின் கரங்களாலேயே மாணவர்களுக்கு வழங்கியதும், அன்றைய தினம் மாணவர்களும், பெற்றோர்களும் அடைந்த மகிழ்ச்சியை ஒரு சாதாரண வார்த்தையால் கூறிவிட முடியாது. எங்களால் முடிந்ததை இந்த மாணவர்களுக்கு செய்து இந்த மாணவர்களை எப்படியாவது உயர்தரம் வரை படிக்க வைத்திட வேண்டும் என்ற பொழுது அவர் மாணவர்கள் மீது கொண்டிருந்த பற்றதனை கண்டு உள்ளம் நெகிழ்ந்தேன்.

அவர் முன்னெடுக்கும் விடயங்களில் அவ்வப்போது நானும் ஒரு சிறு பங்கேற்றுக் கொள்வேன். அதன் போது அவரிடம் நான் கற்ற விடயம் "செய்வன திருந்தச் செய்" என்ற தாரக மந்திரத்தை எந்தவொரு சிறிய விடயமாயினும் அதனை திறம்பட செய்ய வேண்டும் என்ற உயரிய பண்பை அவரிடம் காணக்கூடியதாக இருந்தது.

தமிழ் கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின் போது அவர் காலை முதல் மாலை வரை நின்று ஒவ்வொரு விடயத்தையும் அவரது கண்காணிப்பின் கீழ் நடத்தினார். அதனாலேயே அந்நிகழ்வுகள் வெற்றிகரமாக நிறைவுற்றன என குறிப்பிட்டு கூறலாம்.

அதனை தொடர்ந்து அவர் ஒரு கலைவிழா மற்றும் கிரிக்கட் போட்டி என்பன நடாத்தி விட வேண்டும் என்ற அவா கொண்டிருந்த போதிலும், அதற்கு முன்னர் அவர் ஓய்வு பெறும் நாள் முந்திக் கொண்டது. அவர் ஓய்வு பெறும் தினத்திற்கு முதல் நாள் இப்பிரதேசத்திலுள்ள அனைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளுக்கும் சென்று விடைபெற்றுக் கொண்டார். எமது பாடசாலைக்கும் வருகை தந்தார். அன்று அவர் ஆற்றிய உரை இன்றும் நினைவில் நிற்கின்றது. இவர் கல்வித்துறை மட்டுமன்றி எழுத்துத்துறையில் நாளிதழ்கள், சஞ்சிகைகள் என்பவற்றிலும் தனது கட்டுரைகள், கவிதைகள் மூலம் எல்லோர் மனதிலும் இடம்பிடித்தவர்.

அவர் ஓய்வு பெற்றதன் பின்பும் பல தடவைகள் நாம் சந்தித்தோம். அப்பொழுதும் கூட அவர் கூடுதலாக எமது பிரதேச மாணவர்களைப் பற்றியும், அவர்களின் கல்வி முன்னேற்றம் பற்றியுமே கதைப்பார்.

அவர் சுகயீனமுற்றிருந்த காலத்தில் அவரின் துணைவியாரிடம் அவரின் சுகநலம் பற்றி வினவிக் கொள்வது வழக்கம். சத்திரசிகிச்சை முடிவுற்றதும் அவர் நன்றாக இருக்கிறார் என்று அம்மையார் கூறிய போது மிகவும் சந்தோஷமாக இருந்தது. எனினும் அவரின் திடீர் மறைவை கேள்விப்பட்டவுடன் மிகவும் அதிர்ச்சியும், மனவேதனையும் அடைந்தேன்.

மனிதன் வாழுகின்ற காலத்தில் அவன் சிறப்பு அறியப்படுவது அரிது. எனினும் அவன் இவ்வுலகில் இல்லையே என எண்ணும் போதே அவனின் பயனும், தேவையும் எம் கண் முன் தோன்றி ஓர் ஏக்கத்தை ஏற்படுத்தும். அவ்வாறே எமது ஐயா எம்முடன் இல்லை என்று எண்ணுகின்ற பொழுது அவரின் சேவையும், தேவையும் எம் கண் முன் காட்சி தருகின்றது. திரு. நாமதேவனின் நாமம், மண்ணுலகில் அவர் ஆற்றிய கல்விச் சேவையில் பதியப்பட்டுவிட்டன. நெஞ்சை விட்டு அகலாத அந்த உயரிய கதாபாத்திரம் விண்ணுலகிலும் சிறப்படைய வேண்டி, இறைவனடி சேர்ந்துவிட்ட எங்கள் ஐயாவின் ஆத்மா சாந்தியடைய உளமார பிரார்த்திக்கின்றேன்.

நன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவு....

என்றும் அவரின் நினைவில் வாடும்
திரு. டி.ஜே. பாக்கியநாதன்
முன்னாள் அதிபர்
க/இந்து சிரேஷ்ட பாடசாலை,
கண்டி

1972 இல் யாழ்/கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் பயிலுனர் மாணவனாக அறிமுகமான நண்பர் நாமதேவன். கடந்த 36 வருடங்களாக எனது நெருங்கிய நண்பனாக இருந்தவர். பயிற்சிக் காலம் முடிந்து 1977 வரை ஐந்து வருட இடைவெளி. மீண்டுமாக 1977 இல் க/ இந்து சிரேஷ்ட பாடசாலையில் எமது நட்பு தொடர்ந்தது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றிற்கு உதாரணமாக திகழ்ந்தவர் நண்பர் நாமதேவன். அவரிடத்தில் நான் கண்ட சிறந்த குணம் நேரம் தவறாமை. தனது வகுப்புக் கடமைகளில் அவர் எப்போதும் இதைக் கடைபிடித்தார். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்ட நல் ஆசானாக திகழ்ந்தார். அவரின் முயற்சியின் பயனாக க.பொ.த. (சா.த) பரீட்சையில் அவரது பாடமான சமூகக்கல்வி பாடத்தில் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினை பெற்றார்கள். மாணவர்களின் கல்வியில் மட்டுமல்ல ஒழுக்கத்திலும் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டார்.

கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலையில் நாம் கடமை புரிந்த காலம் ஓர் இனிமையான காலம். திரு. ஜி.டி. பீட்டர் அதிபராக இருந்த காலம் பாடசாலை விடயங்களிலும் தனிப்பட்ட விடயங்களிலும் அவருக்கு மிகுந்த ஒத்தாசையாக இருந்து செயற்பட்டார். சமூக பணிகளிலும் மிகுந்த ஈடுபாடுடன் பாடுபட்டார்.

அவர் கண்டி விவேகானந்தா பாடசாலையில் அதிபராக பதவி உயர்வு பெற்று சென்றபின் அப்பாடசாலையின் வளர்ச்சிக்காக பல் விதத்திலும் செயற்பட்டார். உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று கண்டிப்பும் அன்பும் நிறைந்த அதிகாரியாக திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் வாழ்க்கைத் துணையை தேடிக்கொடுக்கும் பொறுப்பு என்னிடம் கொடுக்கப்பட்டது. அவருக்கேற்ற நல்ல உத்தம துணைவி கிடைத்தார். தன் ஒரே மகனுடன் நல்லவிதமாக இல்லறம் நடத்தினார்.

அவர் நோயுற்று இருந்தபோது அவரின் இல்லத்திற்கு திரு. பீட்டர் தம்பதிகளுடன் சென்றேன். எப்போதும் சிரித்து சிரித்துப் பேசும் அவர் அன்று நோயின் கடுமையால் ஒரு வார்த்தையும் பேசவில்லை. இது எனக்கு தாங்க முடியாத வேதனையைக் கொடுத்தது. அவரின் உடல் நலம் பெற தினமும் இறைவனை பிரார்த்தித்து வந்தேன். என்றாலும் இறைவனின் சித்தம் அவரை தன்னிடம் எடுத்துக்கொள்வது என்பது அவரின் நட்பு எப்போதும் என்னுள்ளத்தில் நீங்காத நினைவுகளாக இருக்கும்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை உணர்வு கொண்ட கல்விப் பணிப்பாளரே!

க. பிரபாகரன்(ஆசிரியர்)
க/மலை மகள் இந்து ம.க.
தெல்தோட்டை

அடிமைப்பட்ட இனம், ஆள நினைக்காவிட்டாலும் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டாவது கற்ற கல்வி அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் சிறப்பான முறையில் செயற்பட்டவர் அமரர் திரு. நாமதேவன் அவர்கள். அவருடன் நீண்ட காலம் பழககிடைக்கா விட்டாலும் குறுகிய காலமாவது பழகுவதற்கும் நட்புக் கொள்ளவும் கிடைத்ததற்கு பெருமிதம் அடைகின்றேன். அவருடன் பழகிய சில காலங்களில் அவரின் மூலம் நான் கற்றுக் கொண்ட விடயங்கள் பல.

நான் உயர்தர, பட்டப்படிப்பு மாணவர்களுக்கு கல்வி புகட்டும் போது சில சந்தர்ப்பங்களில், எமது சமுதாயக் கல்வி பணிப்பாளர்களை நாடியதுண்டு. வடக்கு, வடகிழக்கில் சேவையாற்றுகின்ற கல்விப் பணிப்பாளர்கள் பத்திரிகைகளிலும். நூல்களிலும் பிரயோசனமான ஆக்கங்களை வெளியிட்டு வருகின்றனர். அவை அனைத்தும் சமுதாய தரப்பினருக்கு பிரயோசனமானவையாக அமைகிறது. ஆனால் அப்படிப்பட்ட ஆக்கங்கள் எமது பணிப்பாளர்களினால் ஏன் தோற்றுவிக்கப்படுவதில்லை என ஆதங்கப்படுவதுண்டு. அமரர் நாமதேவன் அவர்களின் பத்திரிகை ஆக்கங்களை பார்த்தவுடன் நான் எண்ணியது. தவறாகிவிட்டது என நினைக்கின்றேன்.

பொதுவான கல்விப் பணிப்பாளர்களும். அதிகாரிகளும் தமது நலன் கருதி அரசியல் தொடர்பான கட்டுரைகளையோ, விமர்சனங்களையோ வெளியிடுவது குறைவு. (இல்லையேன்றே சொல்லலாம்) ஆனால் திரு. நாமதேவன் அவர்கள் தர்க்க ரீதியாக மலையக பிரச்சினைகளை படம் பிடித்து காட்டக்கூடிய வகையில் பல ஆக்கங்களை வெளியிட்டு விதிவிலக்கான ஒரு நபராக எம்மில் திகழ்கின்றார். சிலர் பத்திரிகையில் எழுதுவதோடு மட்டும் தமது பணி நிறைவடைந்து விட்டது என எண்ணி இன்றும் சிலர் எழுதி வருவது மறுப்பதற்கு இல்லை. ஆனால் அதற்கு செயல் வடிவம் கொடுப்பவர்கள் சிலரே எம்மில் காணப்படுகின்றனர்.

ஆசிரியர்கள், அதிபர்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளையும் சுமூகமான முறையில் தீர்த்து வைக்கும் ஆற்றல் கொண்ட திரு.நாமதேவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் ஒருவரின் நற்செயல்களை கௌரவிப்பதிலும் பாராட்டுவதிலும் தனக்கு நிகரற்றவர் தான் பொறுப்பேற்ற விடயத்தினை இரவு, பகல் பாராது உழைத்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். இதற்கு சான்றாக 2006ம் ஆண்டில் தெல்தோட்டை பிரதேச பாடசாலைகளுக்கு இடையில் அவரால் நடத்தி முடிக்கப்பட்ட ''பிரதேச விளையாட்டு'' போட்டியை குறிப்பிடலாம்.

கல்வி அதிகாரியாக காணப்பட்ட போதிலும் சமூக நலன் தொடர்பாகவும், இன நலன் தொடர்பாகவும் அதிக ஈடுபாடும், அக்கறையும் கொண்டவர். தாம் வாழ்ந்த சமூகத்தில் தமது இன மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு பல பணிகளை அவர் தமது வாழ்வின் இறுதிவரை செய்து வந்தார். இத்தகைய பணி வளர்ந்து வரும் எமது சமுதாய மக்கள் யாவராலும் மதிக்கப்பட வேண்டியது.

பாடசாலை மேற்பார்வைக்காக வந்த திரு. நாமவேதன் அவர்கள் ஆசிரியர்களுக்கு ஆலோசனைக் கூறுவது மட்டுமன்றி மாணவர்களுக்கும் பல புத்தி மதிகளைக் கூறி அவர்கள் மத்தியில் விரும்பப்படுகின்ற ஒரு அதிகாரியாகவே இருந்து வந்தார். அவருடன் சில வேலைகளை இணைந்து செய்வதற்குரிய சந்தரப்பத்தை இறைவன் எனக்கு வழங்கினார். அப்போது நான் அவரின் தமிழ் புலமைகண்டு வியந்துள்ளேன். அத்துடன் பல விடயங்களை அவரின் மூலம் அறிந்து கொண்டேன்.

அவரால் பல பணிகளை சிறப்பான முறையில் செய்திருந்தாலும் அவை அனைத்து மக்களுக்கும் தெரியவில்லை. அவரின் மறைவிற்கு பின்னரே, எம்மாலும் அவரின் பல சாதனைகளை அறியக் கூடியதாக இருந்தது. இன்றைய காலத்தில் தேசிய ரீதியாக, மாகாண ரீதியாக, மாவட்ட ரீதியாக, கோட்ட ரீதியாக பல விழாக்களை ஏற்பாடு செய்து விருதுகளை வழங்கி வருகின்றார்கள். ஆனால் அவ்விருதுகள் உண்மையிலேயே சரியானதா? பொருத்தமானதாக இருந்திருந்தால் திரு நாமதேவன் அவர்கள் பல விருதுகளைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு பெற்றதாக நான் அறியேன்.

அவரின் நினைவு மலர் வெளியீட்டில் எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது நான் செய்த பாக்கியம். திரு. நாமதேவன் எழுதிய பல கட்டுரைகள் இன்றைய சமுதாயத்திற்கு மிகவும் ஏற்புடையன. அவைகள் அனைவருக்கும் அறியப்படுத்த வேண்டியது கல்வித்துறை சார்ந்தவர்களின் தலையாய கடமையாகும்.

''அவரின் இலட்சியம் நிறைவேற இறைவனை பிரார்த்திப்போமாக''

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக உதவி கல்விப் பணிப்பாளரே உங்களைப் பற்றிய என் நினைவுகள்.....

இ:து
அல்ஹாஜ். எஸ். எம். ஹம்ஸா லெப்பை
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்விப் பணிமனை
கண்டி

---

28ம் திகதி இறைவனடி சேர்ந்த திரு. எம். நாமதேவன் அவர்களின் நீங்காத நினைவிற்கு ஓரிரு வார்த்தைகளை சமர்ப்பணம் செய்கிறேன்.

பெற்றோருக்கு பேரும் புகழும் பெற்றுக் கொடுத்து இவ்வையகத்தில் வாழ்ந்த காலத்தில், குடும்பத்தில் சிறந்த பிள்ளையாய். பாடசாலையில் நல்மாணவனாய், ஆசிரியர் பணியில் நல் ஆசானாய், அதிபரில் சிறந்த முகாமையாளராய், கல்வித் திணைக்களத்தில் சிறந்த நிர்வாகியாய், தடம் பதித்து இந் நாட்டிற்கும், சமூகத்திற்கும் அளப்பரிய தொண்டாற்றி இன்று மண்ணுள் மறைந்து விட்டார். இவ் உலகத்தில் இன்புற்று வாழ்ந்து தமது இல்லற வாழ்க்கைக்கு சான்றாய் அருந்தவப் புதல்வனை விட்டுச் சென்றுள்ளார்.

இவ் வையகத்தில் பிறந்த அனைவரும் மரணத்தை அடைந்தே தீரவேண்டும். அதனடிப்படையில் இறைவனடி சேர்ந்த திரு. நாமதேவன் அவர்களின் பிரிவால் வாடும் மனைவி, புதல்வன், மற்றும் குடும்பத்தவர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தினை உளத்துயரோடு நவில்கின்றேன்.

நான் அவரோடு இணைந்து அதிபராய் சேவையாற்றிய காலத்தில் நண்பனாய், சகோதரனாய், ஆசானாய் அறிவுரைகள் வழங்கி எனது உள்ளத்தில் இடம்பெற்ற ஒரு ஆத்மா என்ற அடிப்படையில், அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறேன். அமரத்துவம் பெற்ற திரு. நாமதேவன், நீங்கள் மண்ணுள் மறைந்தாலும் உங்கள் நாமம் என்றும் மறையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Loving Son

Manoj

Dear Loving Dad,

Minutes hare ticked and days passed by

Hopes drifted far beyond where we could never fly

Your sweet smiles with shining eyes like stars peep beneath the sky

How could we ever forget those loving days even though we try

Today we hear sweet melodies from the angels,

Seems a celebration held over, up in heaven

hark the angels sing,

Oh: what a day , what a day.

Dear loving Dad we miss you every minute

Thousand kisses we send, you through if you could catch it.

With lots of love and wishes lay deep within our hearts.

To my dad, who now lives in heavenly bliss!

Loving Son
Manoj



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# You Inspire us!

You were the gem in the Rangalla Kandyan hills that bore you. Your life's struggles were as steep on the Hantane Bowalawatta Range that nurtured you. You learnt to over come life's challenges early as your walked the rugged path along the Mahaweli to the little Peradeniya Maha Vidyalayam, where dedicated teachers moulded your life with all its sparks.

Your dream of studying in the newly opened university campus, that lay on either side of the country path that you treaded on daily eluded you as you lost your father while a. school. You then took on the responsibility of fending for your mother and the seven siblings.

In the field of education

You seized the first opportunity to be back in education which you valued so much. Your occupation as a trained teacher and os head of schools helped to improve education of children and this discipline. Your dedication to the vocation carried you further into the area of development of education in schools scattered over the Hatton and Kandyan areas. You did your best in the capacity of a much respected SLEAS officer.

On your visits to schools you were that stern officer who expected even the men teachers shoes to be tidy and polished; for in it the students saw the reflection of their personalities. Tidiness of records, duty consciousness and high achievements were your concern.

Yet you were the much loved person as you voluntarily shared your official table with the new recruit who stood by. You were the ADE who voluntarily moved out of home station to make room for a brother officer in need.

You carried yourself well; but could not hide the eternal smile that reflected your friendliness. You set many standards to yourself and expected the same from others. Every cent in your purse accounted only for the honest wage you earned. You were a true and honest government servant, who served everyone alike and you were clean in thought word and deed.

The Social Thinker



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

This was the extra dimension to your life. As we look through your short stories, articles we see your messages come ringing and challenging the upcountry mass who lacked hope. You were an orator. You were not speaking of the highest heavens and the almighty ruling over it. But you reflected the pains and agony of the less privileged in the hills in whose hearts the biased god of the poor lived. This was your contribution to the liberation of the upcountry community through education.

Though you loved your ethnicity, people and language, your life was broad enough to enjoy friendships with members of all races and religion. They were all there to pay their respects and honour you.

The family umbrella

If I may cage you in the family Circle you were an umbrella to all; perhaps like the large umbrella that you always liked to carry with you. You provided shade to your son Manoj, wife Saroja and to the brothers sisters and in-laws alike, brought together the two large families that came together at your wedding. Your words of wisdom and comfort were a strength to us.

You added that extra bit of light and hope in the hearts of all by your way.

You ran the race well. The thistles and thorns in your life were only a cause for you to move forward, and make you a leader in your own right.

We thank God for people like you. May you be in God's presence for ever more. "Surely goodness and mercy will follow me all the days of my life; and I will dwell in the house of the lord forever" The book of Psalms.

P.S. Shouldn't I have penned this when you were still with us!
Rev Daniel, Koilpillai
(Bro-in-law)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Guy T.Peter J.P.

Former Principal, Hindu Senior School

As I put my pen to the paper to write a message to be published in the souvenir in commemoration of Mr. Namadevan's death, flashes of past memories come to my mind.

My association with Mr. Namadevan began way back in 1976 when both of us were colleagnes on the tutorial staff of Hindu Senior School, Kandy. Later, When I became, Principal of the same institution I made him my vice Principal because of his Capacity for work and his honesty and integrity. He proved his mettle by his unstinted Cooperation.

Subsequently, with his promotion as principal of the then, C.C. School, He had to leave Hindu Senior School but our friendship lasted till he passed away.

Step by step he rose up to the level of Assistant Director of Education before his retirement.

Mr. Namadevan and I were good friends. He had some exemplary qualities which impressed me. He was dependable to the last letter of it. He didn't fear to come out with the truth under any circumstance. He called a spade a spade.

His untimely death has caused all of us unbearable grief but God's plans are my stereo us. May be He did not want him to live any more and undergo physical Suffering because of his sickness.

I conclude with a word of consolation to his wife and son and to all those who are dear and near to him. May his soul attain eternal peace.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tribute

Affectionately remembered

Sadhana

**An Unforgettable Day 30-08-2008**

**My Dear Uncle,**

God called your name on that day and you had been taken away before we knew it.

Suddenly and unexpectedly you have left us, and drowned us into unbearable sorrow.

A month has passed away and we cannot believe that you are not with us. I can never forget the advice and guidance you had given, which has enabled me to gain confidence and strength to meet the challenges of life.

Years may roll by, but your memories will always be profound, precious and lasting.

You were an embodiment of tenderness and generosity and you had sacrificed a considerable time of your life for the betterment of others and such thoughts will always linger in our heart.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNFORGETTABLE BROTHER

With unfailing memories,
Mrs. C.K.M.R. Joyce
Teacher of K/Malaimahal
Hindu Central College, Deltota

You have been a genuine brother
Your memories will never wither
God called you to his feet,
Trust one day in heaven we shall meet,

Your utmost work and dedication,
Were pillars to the education,
Though you were far away from all,
Your qualities are admired by all,

Your encouragement and advice,
Helped us to be wise
You also had the confidence and will
To improve the educational skill.

Your creations were treasures
They were so precious
Through your writings
We learnt great things.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Noble Soul

The noble soul – once I had met
The feeble fate had snatched off yet
The able war of life – you left
Labels well – the memories wet

Selfish dies many a times, but
Generous lives as memories last,
While being a teacher a writer you have been
Imparted you the feast to brain.

Born and dead were million men, but
Called back not a single one
Till eyes can see and mouth can read
Your name will stand upon our mind

With tender memories-N. Arunkaanth

(Director of AFC, Journalist, Script Writer, Announcer Director of Stage Programmes, Singer of AFC Band, Teacher-K/Malaimahal Hindu Central College, Deltota)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mrs. K.P. Nahuman
67/41, Eleihiwatta
Welisara
Ragama

I feel it is my duty to write a few words in appreciation of the service rendered by late Mr. M. Namadevan former principal of K/ Vivekananda Vidyalaya. Kandy.

His vision and unfailing efforts have made Vivekananda Vidyalaya a recognized Tamil School in the city of Kandy. It in his efforts that moulded the present Vivekananda Vidyalaya from once known Christ church Tamil Vidyalaya. His intentions were good. He did not work expecting honor and praise from out side, He liked to see a large number of poor children in and around kandy city educated. His period as a principal at Vivekananda Vidyalaya bronght the school great reputation. He was deeply interested in the welfare of the school and its students. He built a cadre of dedicated teachers to keep pace with the increasing number of students which the school attracted on the strength of his own reputation as a principal. The Tamil community of kandy are grateful to this great principal who did an enormous service to their children, He spared no pains to see that Vivekananda Vidyalaya excelled in studies and sports. The school reached the peak of its achievements in education during his period. The school really flourished during Mr. M. Namadevan's period of office as principal.

He was a person of no mean stature whose wise counsel and guidance were sought by his staff members as well as his colleagues. He held the post of principal of Vivekananda Vidyalaya kandy from 1988 until he was appointed as an assistant Director of education in 1997

The best tribute that I can pay to this great person is that during his period. I was a teacher at Vivekananda Vidyalaya. I learnt more than I taught at his feet. His blessing be bestowed upon the school in abundant measure.

May almighty God bless his good soul


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# මා දුටු නාමදේවන් අයියා

නාම දේවන් නම් ඒ ගුරු ඇදුරා අද අප අතර නැත එහෙත් ඔහු අප වෙත තබා ගිය මතකයන් බොහෝ ඇත සංවරශිලිබව ඔහු ගේ ජිවිතය පුරා රැඳී තිබුණේ ය යම් නිවෙසකට ගොඩ වදින විට ඔහු තුල දක්නට ලැබුනු ආචාරශිලි බව සහ සුහදතාවය කිවා පැවේ නැදෑ හිතවතකුට වඩා මිතුරකු සහ සහෝදරයකුගේ හැසිරීම් වි ලසිනි

ගුරු වෘත්තිය ඔහු විනය ගරුක පුද්ගලයකු බවට පත් කළේ ය ළමුන් කෙරෙහි දැක්වෙන ආදරය කරුණාවසහ රැක බලාගැනිම පාසල් ජිවිතයේ අගය විදහා පෑවේය එම රැකියාව විදුහල්පති පරිඝෂක තනතුරු කරා ඉහළ ගියත් ළමුන් සම්බදව ඔහුගේ ආකල්ප සහ ඉරියව් එලෙසම පැවතිණ කන්ද උඩරට පවුලකට හිමි කම් කියමින් තම ජාතිය කෙරෙහි සැම විට ඇල්මකින් කටයුතු කළ නාම දේවන් සහෝදරයා සංසකෘතික වැඩ සටහන් වලට ඇල්මක් දැක්වූ කෙනෙකි අන් ආගම් වලට ගරු කළ අතර හින්දු භක්තිකයකු ලෙස තම පුද සිරිත් අකුරට ඉටු කළේය. තමන් අයිති පවුලට මෙන්ම තම කුඩා පවුල වන බිරිඳ හා පුතා කෙරෙහිද වගකි මෙන් සහ ආදරයෙන් යුතුව යුතුකම් ඉටු කරනනට සමත් විය ජිවිතයේ සැහැල්ලු බව නිරහංකාර කම මා දුටු ඔහුගේ විශෙෂ ගුණාංග අතර වූයේ ය

ඔහුගෙ අවසන් කාලයේ දි වේදනාව සහ රෝග තතවයන් හට මුහුණ දුන්නේ ඉව සිල් ලෙනි අන්තිමට කථා කළ වචන වල පවා රැඳිතිබුනේ සහ අත් දැත්කිම්වල එකතුවකි අපගේ මෙලේස කෙටි කාලික ජිවිතවලට ලබා ගත හැකි උසස් ගුණයන් දක්වමින් ඔහු අප අපි අතරින් වෙන් වූයේ සඳු මතකයන් අප

මල්ලි
පිරිය ලාල් පෙරේරා


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# මා දුටු නාමදේවන් මහතා

මේ සංසාර කෙතේ
සෞම්‍ය ගිරු කිරණවු
ළයාදර ගුරු අධ්‍යක්ෂ තුමනි
ඔබේ නොනිමි මෙහෙවරට
තුටු පඩුරක් කොට
ලියනනම් බැති පෙමින්
මෙම වදන් පෙළ
**1136** නව නිල්ලඹ ග්‍රාමනිලධාරි
වසම තුල මා සේවය කළ
කාල සීමාව තුලදි ඔබගෙන්
ලද අනුබමේය සේවය
අවවාද අනුශාෂනා මා හට
කිසි දිනක අමතක කළ නොහැක
මාගේ කාර්යාලය සකස් කර ගැනිමේදි
දත්තයන් දමිළ භාෂාවෙන් සකස්කර
දිම සඳහා ඔබ දුන් සහයෝගය මම
ඉතා අගේ කොට සලකමි ළමා සමාජය ඉදිරියට ගෙන යෑම
සඳහා ගුරුහවකු වශයෙන් ඔබගේ ලද සහයෝගය ඉතා
ගෞරවනියව සිහිපත් කරමි
හදිසියේ ඔබ අප අතරෙන් වියෝවිම දරාගත නොහැකි කනගාටුවකි
නැවත නැවතත් ඔබ අප අතරම ඉපිද කෙළවර
අමා මහ නිවන්සුව අත්වේවායි බෞද්ධගමිකයකු වශයෙන් මම පතමි

පී සී කේ විජේනායක
ග්‍රාම නිලධාරි
අංක **1136**
ග්‍රාම නිලධාරි කාර්යාලය


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# මරණය

නිසල දේහය ලග
පුතු සමගින් ඔබ
වැළපෙණු දුටුවෙමි
නැගණිය මම
නොඑන ගමනක් ගිය
ඔහු දෙස බලා
මරණය අබියස
නොසැලෙන්න
නැගණිය
අටලෝදහම
එයයි
ඒ ඇම් පී බණ්ඩාර

ඔබ

# ඔබ

දහසක් දරුවන්ගෙ
දෙනෙත් පෑදූ ඔබ
පවුලෙ සැම වෙත
කරුණාව දයාව පා
ගෙවූ ඒ දිවිය
අමතක නොවේ මට
නාමදේවන්
ගුරු පියාණනි



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நாமதேவனுக்கு ஒரு நமஸ்காரம்

இராகம்: பிலகரி
தாளம்: ஆதி

பல்லவி
நாமதேவன் நல்லமனிதன்
நானிங்கு கண்ட பலரினுள்ளே --அமரர்

அனுபல்லவி
மதிப்பிற்குரிய நல் மாரிமுத்து
ஐயா அவர்கள் கரம்பிடித்த
குணவதியாம் கதிரமலை அம்மையார்.
ரி ஸ நி த ப ம க ரி
இவ்விருவர் இல்லறம் இப்புவியில் நிலைத்திட
அவதரித்தார் –அமரரானார் –அலறுகிறோம்

சரணம்
அன்புடனே அவதரித்து
பண்புடனே பயிற்றுவித்து
கண்மணிபோல் உனைக்காத்து
காசினியிலே தவழவிட்டார்

நாமதேவன்

சோதரர்கள் ஐவருடன்
சோதரிகள் மூவருடன்
ஆதரவாய் ஆனந்தமாய்
அமைந்ததுந்தன் அருட்குடும்பம்

மாசில்லாத மனையவளும்
மணவாழ்வில் அமைந்ததனால்
காசினியில் அவர்பெருமை
தேசுடனே இருந்ததம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாக நீ இருந்தாய்
தாரமாக நீ திகழ்ந்தாய்
வாசுகியாய் இருந்தவளே
வள்ளுவர்க்கு வாய்த்தவளே
தூசில்லாத உன்தன்குணம்
தூய வெள்ளை உன்தன் மனம்
பாசமுடன் பழகுவதில்
பாரிலுண்டோ நின் வடிவம்

---

கள்ளம் கபடமில்லை
கருத்தினிலே ஒளிவுமில்லை
சொல்ல இங்கு வார்த்தையில்லை
தூயவள் நீ சரோஜாவே

ஆசானாக அவரிருந்து
அரும்பணிகள் ஆற்றிவிட்டார்
ஆயிரமாம் மாணவரை
அறுவடையும் செய்துவிட்டார்

சீரிய நற்பணியால்
சிறப்புடை அதிபரானார்
அதிபராய் அரண் இருந்து
ஆட்சி அவர் செலுத்தவில்லை
காட்சிப் பொருளாக இருந்து
கட்டளைகள் இடுவதில்லை
ஆசிரிய சேவையின் அருமையை மிகமதித்து
ஆசிரிய தோழருடன்
ஒருவராய் அவர் இருந்தார்.

கல்விப் பணிப்பாளராக
கருத்துடன் சேவை செய்தார்
பல்கிப் பெருகும் கோவை
பக்குவமாய் அவர் முடிப்பார்
சினமே கொள்வதில்லை
சீறி அவர் விழுவதில்லை
கோட்டக் கல்விப்பணி -மனம்
கோணாமல் முடித்திடுவார்
தேயிலைத் தோட்டத்துத் தென்றலானாய்
தெவிட்டாது மக்களுக்கு நல் அமர்தமானாய
பாயிலே படுத்துறங்கும் குழந்தை கூட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்தால் எழுந்தோடி உன்னை நாடும்
பாடசாலைக்கு ஒரு பாதைகாட்டி
மூடரைக் களைந்தெறிந்த மூத்தோன் நீயே
குன்றிடைப் பொழிந்த மக ரந்தம்போல
கன்றுகள் தேவடிந்த தாய்ப் பசுவும் நீயே

பொய்யாரைக் கண்டு பொங்கி எழுந்திடுவீர்
மெய்யான சேவைக்கு முந்தி இடம் கொடுத்தீர்
ஐயா உம்சேவையை ஆர் இங்கு ஈடுசெய்வார்

கிராமத்து மக்களின்
கல்வி சீர்பெறவே
சிரமமாய் திட்டமிட்ட
சீராளன் நீரன்றோ
காரமாய் நீர் பேசி
நான் என்றும் காணவில்லை
நேரத்தை வீணாக்கும்
வித்தையும் நீர் அறிந்ததில்லை
நோயென்று படுத்ததெப்போ(து)?
நொடிப்பொழுதில் மறைந்ததெப்போ(து)?

மாதவம் செய்து நீங்கள்
மகவு மனோஜினையும்
பூதலத்திற்கு ஈந்து
பெருந்தவம் புரிந்துவிட்டீர்
மதிமிகு மைந்தன் அவன்
புகழுடன் திகழ்ந்திடுவான்
புதியன பலவும் கண்டு
புவிதனுக் கீந்திடுவான்
அதிசயம் பலபுரிந்து அவன்
அவனியில் புகழ்பெறுவான
அதற்கான குணங்குறிகள்
அவனிடை மிளிர்கின்றது

கட்டி வைத்த கோட்டை தன்னைப்
கவனமாய்ப் பராமரிக்க
களத்தினில் இறங்கிவிட்டான்
காத்திருப்போம் நாங்களெல்லாம்

–நாமதேவன் –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பு என்பது துன்பமென்றார்
இறப்பென்பது இன்பமென்றார் – இறப்பவர்க்கு
ஞாலத்திற் தோன்றிய உயர்களெல்லாம
காலம்தான் வந்ததும் ஏகுமென்பார்

கருமத்தின் பலனாய் வந்துதித்தோம்
தருணம் வந்ததும் போயிடுவோம்
அவரவர் செய்ததை அளந்தெடுத்து
ஒருவர்பின் ஒருவராய் ஏகிடுவோம்
பருவத்தே பெய்துதவும் காரைப்போல
பாரினில் நிலையான தோன்றில்லையோ
இன்று அவர் அமரர்
நாளை நாங்களென
எண்ணிக்கொண்டிருப்போம்
நாம் போம் நாளை

## சுப்பையாவும் நளாயினியும்
161, கட்டவல
லிவுல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணனைப் பற்றிய நினைவுத் துளிகள்.....

எங்கள் குடும்பம் அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகள் எல்லாமாக பத்து பேர் கொண்ட பெரிய குடும்பம் என்பதில் மட்டுமல்ல. எங்களை விட்டுப் பிரிந்த மூத்த அண்ணனைத் தலைமையாக கொண்ட குடும்பம் என்பதிலும் பெருமை கொள்கின்றோம்.

அண்ணன் எங்களுக்கு முன்மாதிரி, சமூகத்தின் விழிப்பிற்காக வித்திட்டு வாழ்ந்த ஆசிரிய பணியாளர் என்பதிலும் மகிழ்வடைகின்றோம்.

நாங்கள் சிட்டுகளாக சிறகடிக்க முன்னமே, உலகையே காணாத கால கட்டத்தில் நாங்கள் பள்ளிக்கூட வாழ்வில் இருந்த போதே வேலைக்கு ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்த அப்பா, திடீரென்று மாரடைப்பால் எங்களை விட்டுப் பிரிந்தார். அநாதைகள் நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

குடும்பத்தில் மூத்தவராக, தலைமகனாக பிறந்த அண்ணன் அம்மாவின் அன்பிலும், மாமாமாரின் உதவியோடும் வழிநடத்தலோடும், அயலவர்களின் பரிவோடும் குடும்ப சுமையை தமதாக்கி இழுக்கலானார்.

மூத்தவராக சகோதர பாசத்தில் நின்றதோடு உறவுகள் எப்போதும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தவர். அதற்கென்றே காணி வாங்கி பெரிய வீட்டையும் கட்டி வீட்டுக்கு வரும்படி தொடர்ந்து அழைப்பு விடுத்துக்கொண்டே இருப்பார்.

சகோதர்களோடு நெருக்கமாக உறவைப் பேண அண்ணனும் அண்ணியுமாகவே எங்கள் வீடுகளுக்கு தொடர்ந்து வருவது சகோதர உறவின் ஆழம் என்றே கூறலாம்.

அண்ணன் எப்போதும் சமய வாழ்விலும் நிலையாக தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். காலையும், மாலையும் சமய கடமைகளை நிறைவேற்றியதோடு செவ்வாய், வெள்ளி மற்றும் விஷேட நாட்களில் விஷேட பூசை வழிபாட்டையும் நடத்துவார். புதிதாக தாம் அமைத்த வீட்டிலும் பூசை அறையை அமைத்துக் கொண்டமை அவரின் பக்தி வழிபாடு எனலாம்.

அம்மா உயிருடன் இருக்கும் போது அம்மாவை வணங்குவதிலும் மேன்மையாக கருதியவர், அம்மாவின் மறைவிற்குப், பின்னரும் பூசை அறையிலும் அம்மாவின் படத்தையும் வைத்து தினமும் மலர்களினாலே வழிபாடு செய்வதையும் தனது தலையாய கடமையாக மேற்கொண்டு வரலானார்.

அண்ணனிடத்தில் குடும்ப உறவு, பக்தி வாழ்க்கை, சமூகப்பணி எல்லாமே ஒன்றோடொன்றாக குடி கொண்டிருந்ததை என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறப்பதற்கில்லை. அதுவே எமக்கான முன்னோடி. தமது துறைசார் வாழ்வையே தனது குடும்பத்திலும் வெளிக்காட்டி எல்லாவற்றையும் நுணுக்கமாகவும், நேர்மையாகவும், நேர்த்தியாகவும், சிந்திப்பார், செயல்படுவார்.

பேராதனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயின்றவர். பழைய மாணவர் மன்றத்தில் பல் பதவிகளை வகித்தும், மலையக படித்த வாலிபர் இயக்கத்தை 1960ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் உருவாக்கி செயற்பட்டதானது மலையகம் தொடர்பாக, கல்வி தொடர்பாக அவருக்கிருந்த சமூக விடுதலை உணர்வை வெளிப்படுத்துவதாக அமையும்.

நாங்கள் பிறந்த ஊரான பேராதனை அகஸ்டாதோட்ட பிரதேசத்தில் முதன் முதலாக அரச பணிக்கு சென்றதும், ஆசிரிய பணியை தேர்ந்தெடுத்ததும் அண்ணன் என்று சொல்லிக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி கொள்கின்றோம். இதற்கு அடிப்படைக் காரணம் அவருக்குள் இருந்த குடும்பப் பற்றும், தான்சார் சமூகப் பற்றிய விடுதலை விழிப்புணர்வுமே. இதனாற்தான் வேறு அரச பணி கிடைத்தபோதும் ஆசிரிய பணிக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். இது எங்கள் குடும்பத்திற்கு ஈட்டித்தந்த பெருமையே.

அண்ணன் யாழ்ப்பாண கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் இரண்டு வருடம் பயிற்சி பெற்ற காலத்தை தவிர தம்முடைய வாழ்நாள் முழுவதும் மலையக கல்விக்காகவே தம்மை ஈடுபடுத்திக் கொண்டார் என்பதிலே குடும்பமாக மகிழ்வடைகின்றோம்.

அண்ணன் ஆசிரிய பணியை தொழிலாகவோ, அல்லது அப்பணியின் மூலம் கௌரவத்தையோ, பணத்தையோ தேடுவதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் முயற்சி எடுக்காததை நாம் அறிவோம். மக்கள் பணியை மகேசன் பணியாக பற்றுக்கொண்டு தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் பணிக்கேஎன்றே அர்ப்பணித்து கல்விக்கும், குடும்பத்திற்கும் பெருமை சேர்த்ததோடு இதன் மூலம் குடும்பத்தில் தலைமகனாக, சகோதரர் எமக்கெல்லாம் வழி காட்டினார் என்பதிலே நாம் பெருமிதம் கொள்கின்றோம்.

நாங்கள் சகோதர சகோதரிகளாக, குடும்பமாக அடுத்தடுத்து மூன்று இழப்புக்களை சந்தித்துள்ளோம். அதிலும் இறுதியாக மூத்தவரை குடும்ப வழித்துணையை, சமூக விழிப்புணர்வு கொண்டு, மலையக கல்வி துறைக்கு விளக்காக, எண்ணெயாக வாழ்ந்து குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் வாழ்வுகொடுத்து பெருமை சேர்த்தவரை இழந்து நிற்கின்றபோதும், ''மலையகம் கல்வியின் மூலமே விழிப்புணர்வடையும், ஆசிரியப் பணி மூலமே அதற்கு வித்திடலாம்'' என்பதிலே நம்பிக்கை வைத்து அத்துறைசார் உங்கள் அனைவரையும் அவ்வழி தொடர குடும்பமாக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்புடனும்,
நட்புடனும்,
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மணிச்சுடரே.....

அன்புத் தங்கை
செல்வநிதி - பேரேரா

"என் நன்றி கொன்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ட மகற்கு" என்பது வள்ளுவர் வாக்கு.

எழில்மிகு கண்டி மாநகரில் அமைந்துள்ள இந்து சிரேட்ட பாடசாலைக்கு ஆசிரிய நியமனம் பெற்று முதன்முதலாக காலடி எடுத்து வைத்தபோது நாதனும் தேவனுமாக பாக்கியநாதனும் நாமதேவனும் இருபுறம் நின்று இருகரம் கூப்பி என்னை வரவேற்றார்கள். அன்று முதல் இன்றுவரை என் ஆசிரிய பணிக்கு உறுதுணையாக இருந்தீர்கள். நன்றி நாமதேவனே!

ஆசிரியராக, அதிபராக, அதிகாரியாக மலையக மண்ணில் நீங்கள் ஆற்றிய பணிகள் பல. மலையக மக்களின் பின்தங்கிய நிலையை கவிதைகள், கட்டுரைகள், கதைகள், கடிதங்கள் மூலமாக நாளேடுகளில் எழுத்துருவாக்கி எம் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தினீர்கள். அன்பு தங்கைக்கு அண்ணாவின் கடிதம் எம்மால் என்றும் மறக்கமுடியாதது. எமது கலாச்சாரம் போற்றப்பட்டு வளர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கில் அரும்பாடுபட்டு உழைத்தீர்கள். அதற்காக நம் மத்தியில் பல கலைநிகழ்வுகளை பிரதேச:. தேசிய மட்டத்தில் நடாத்தினீர்கள். நன்றி நாமதேவன்!

மலையக மண்ணில் உதித்த மணிச்சுடர் இன்று மறைந்துவிட்டது. ஆனால் ஏற்றி வைத்த ஒளிச்சுடர்கள் இன்றும் ஒளிவீசுகின்றன. மலையக மக்களுக்காக இறுதி மூச்சு வரை உழைத்த நீங்கள் "புறப்படுவோம் வேந்தரே...." என்ற புதுக்கவிதையை எழுதிவைத்துவிட்டு நாம் கண்காணாத தூரம் புறப்பட்டுச் சென்றுவிட்டீர்கள். காரணம் என்ன நாமதேவனே!

உங்கள் வேதனையிலும் "பிரியாசுகமா?" என் நீங்கள் அன்புடன் தொலைபேசியில் அடிக்கடி கேட்ட குரல் இன்னும் என் காதுகளில் ஒலிக்கின்றன. உங்கள் உடல் மறைந்துவிட்டது. உயிர் பிரிந்துவிட்டது. ஆனால் உங்கள் புகழ் மறையவில்லை. நீங்கள் விட்டுச் சென்ற பணி தொடர்ந்திட பேபி அக்கா எடுத்த முயற்சியின் பிரதிபலனே இந்நினைவுமலராக இன்று எம் கைகளில் மலர்ந்துள்ளது. வாழ்த்துக்கள் பேபி அக்கா! வளர்க உங்கள் பணி!!

மலர்களால் தொடுக்கப்பட்ட மலர்மாலை போன்றது எம் வாழ்க்கை. எம் பிறப்பும் இறப்பும் அதன் இருபக்க நுனிகளைப் போன்றதே. மலர்மாலையில் தொகுக்கப்பட்டுள்ள மலர்களைப் போல் நறுமணம் வீசினீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பண்புள்ளவராக வாழ்ந்தீர்கள். மலையக மண்ணில் மணிச்சுடர் பரப்பினீர்கள். "நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்துக்கொண்டேன்" என்பதற்கேற்ப உங்கள் ஓட்டத்தை முடித்துக் கொண்டீர்கள். நாமதேவனின் நல்வாழ்வுக்காக நன்றி இறைவா!

அன்பு பேபி அக்கா, மகன் மனோஜ் மனம் கலங்காதீர்கள். இறைவனின் இனிய கரம் என்றும் உங்களை வழிநடத்தும்.

நம் நாமதேவன் விட்டுச் சென்ற நற்பணிகள் தொடரட்டும்

புறப்படுவோம் வாருங்கள்.....

## இளம் ஆசிரியர்களே உங்களின் கவனத்திற்கு

01. நேர காலத்துடன் பாடசாலைக்கு செல்லுங்கள்
02. உங்கள் வகுப்பறை செயற்பாடுகளை திட்டமிட்டு செயற்படுங்கள்
03. அதிபருடனும், ஆசிரியர்களுடனும், மாணவர்களுடனும் அயற்சமுதாயத்துடனும் சுமுகமான உறவைப் உறவைப் பேணுங்கள்.
04. முன் அனுமதி பெற்றாலும் தேவையின்றி லீவு எடுப்பதை தவிர்த்துக்கொள்ளுங்கள்.
05. ஆசிரியத்துவத்தின் புனிதத்தினை எல்லா இடங்களிலும் எச்சந்தர்ப்பத்திலும் பேணி பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
06. பாடசாலைகளில் எந்த வேளைகளிலும் புன்சிரிப்புடன் செயற்படுங்கள்.
07. மாணவர்களிடம் தண்டனைகளை தவிர்த்து வெகுமதி மூலம் உங்கள் இலட்சியத்தை நிறைவேற்றுங்கள்.
08. எல்லா மாணவர்களுக்கும் தேர்ச்சியினை அடைவதற்கு உங்களால் முடியுமான எல்லா வழிமுறைகளையும் கைக்கொள்ளுங்கள்.
09. எவனொருவன் கற்றலை எப்போது நிறுத்துகின்றானோ அப்போது அவன் தனது கற்பித்தலையும் நிறுத்த வேண்டும்.
10. உங்களிடம் ஒப்படைக்கப்படும் குழந்தை செல்வங்களை நற்பிரசைகளாக்கி மீண்டும் சமூகத்திற்கு ஒப்படையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்த்தியான கொள்கை

திரு. எஸ். யோகராஜ்
(முன்னாள் அதிபர்)
க/மலைமகள் இந்து மத்திய கல்லூரி
தெல்தோட்டை

வள்ளுவர் காட்டிய வழியில் வாழ்ந்த அமரர் திரு. நாமதேவன் அவர்கள், சகோதர சகோதரிகளுக்கு சிறந்த அண்ணனாகவும், பெற்றோருக்கு சிறந்த மகனாகவும் மனைவிக்கு சிறந்த கணவராகவும், பிள்ளைக்கு சிறந்த தகப்பனாகவும், மாணவர்களுக்கு சிறந்த ஆசானாகவும், ஆசிரியர்களுக்கு சிறந்த அதிகாரியாகவும் திகழ்ந்து வழிகாட்டியவர்.

தன் வாழ்க்கையை கல்வி துறையிலிருந்து ஆரம்பித்த அன்னார் ஆசிரியராக, அதிபராக, கல்வி அதிகாரியாக தனது பணிக்கு ஓர் அர்த்தத்தை உணர்த்தியவர்.

நான் மாணவனாகவும், ஆசிரியராகவும் இருந்த கால கட்டத்தில் கண்டி கல்வி வலய தமிழ்த்தின விழா விளையாட்டுப் போட்டிகளை சிறப்புற நடத்திக் காட்டியவர். அதே போல க/மலைகள் இந்து மத்திய கல்லூரியில் அதிபராக இருந்த போது கல்விப் பணியை விருத்தியுற செய்ய ஆலோசனை வழங்கி ஊக்கம் கொடுத்தவர். பாத ஹேவாஹெட தமிழ்ப் பாடசாலைகளுக்கிடையில் சிறப்பான ஓர் விளையாட்டுப் போட்டியை தனி மனிதனாக நின்று நடத்தி தனது பெயரை பொன்னெழுத்துக்களால் பொறித்தவர்.

எப்படியோ வாழ்ந்து விடலாம் என்பவர் பலர். ஆனால், இப்படித் தான் வாழ வேண்டும் என வரையறை செய்து வாழ்ந்தவர் அமரர் திரு. நாமதேவன் அவர்கள்.

அண்ணாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எனது மனமார்ந்த பிரார்த்தனைகள்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மைத்துனா.....

ஜெயா அக்கா

மலையக மகனாக மண்ணில் உதித்தவரே, 1984ம் ஆண்டு மலையக மகளாகிய சரோஜாவின் கணவனாக எங்கள் குடும்பத்தில் நுழைந்து இல்லற வாழ்க்கையை ஆரம்பித்த மைத்துனா, அன்று தொட்டு இன்று வரை எம் உள்ளங்களில் நீங்காத நினைவாக இடம் பிடித்தீர். உங்கள் சகோதரர்கள்மேல் பொழிந்து ஆற்ற வேண்டிய பணிகளை செய்து முடித்தீர்.

மனோரம்மியமாய் வாழ்வில் பல நினைவுகளை கொண்டு மல்லிகையாய் வாழ்ந்து மணம் வீசி வாழ்வில் பல வாழ்வுகள் மலர்ந்தன. எம் சிறார்கள் சிலருக்கு கல்வித்தீபம் ஏற்றி, தொழில் வாய்ப்பு ஏற்படுத்தி தன்னால் இயன்ற அளவு உதவி புரிந்து, தன்னலம் கருதாது, பிறர் நலம் கண்டீர் ஐயா.

தன் காலத்தை பொன்காலமாக நினைத்து, கவிதை பல இயற்றி மலையக மக்களுக்காக கட்டுரை பல எழுதி மக்களை ஊக்குவித்து, எம்மையும் ஊக்குவித்தீர்.

மனதுருக்கும் சான்றோனாய் பிறனைசான்றோனாக்க பிறருக்கு நிழலாய் நின்று குடும்பத்தில் ஒருவனாக நின்றீரே. நீதிக்கு தலைசாய்த்து பிறரையும் நீதியின் வழியிலே நடத்தினீர். தன் உடல் நிலைகுன்றிய நிலையிலும் அக்கா என்நிலை யாருக்கும் வரக்கூடாது என்று கூறி இறைவனை வேண்டினீரே.

மனரம்மியம், அகமகிழ்வு, புன்சிரிப்பு எம்மால் மறக்கமுடியாது. இருபெருங் குடும்பத்திலும் இயல்பு தலைவனாக செயல்பட்டீர். இறுதி படுக்கையில் இருந்து கொண்டு எனது சகோதரியின் மகளின் நிச்சயதார்த்தத்தை எங்கள் வீட்டில் வையுங்கள் என்று பெருந்தன்மையுடன் கூறினீரே. அந்த வார்த்தை இன்றும் என்காதில் ஒலிக்கிறதே. மகனுக்கு நல்ல தகப்பனாக வழிகாட்டியாய் தங்கைக்கு ஏற்ற கணவனாக வாழ்ந்தீரே. தங்கை பரீட்சை, திணைக்களத்துக்கோ கருத்தரங்குக்கோ சென்ற வேளைகூட மற்ற தங்கையிடம் சொல்லி, சேலை வாங்கி, சட்டை தைத்து, கிறிஸ்மஸ் அன்று காலை வாழ்த்து தெரிவித்து, சேலையைக் கொடுக்கும் பெருந்தன்மையை மறக்க முடியுமா மைத்துனா....

தங்கை கிறிஸ்மஸ்க்கு புதுச்சேலை வாங்க மாட்டார்கள் என்று தெரிந்து அவள் உள்ளத்தை சந்தோஷப்படுத்தினீரே. நீங்களில்லா மனக்குறையை தங்கையின் உள்ளத்தில் ஆண்டவர் தாமே வெறுமையான இடத்தை நிரப்பி தொடர்ந்து அவளை வழிநடத்த இறைவா உன்னை வேண்டிநின்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பார்வையில் அண்ணன்

திருமதி. ரதி தேவசுந்தரம்

இறைவனால் படைக்கப்பட்ட உயிரினங்களுள் மேலான படைப்பாக அமைந்தது மனிதப் படைப்பு இப்படைப்பு உலகில் மாண்புற்று விளங்கிட மனிதனின் வாழ்க்கை முறையும் வாழ்க்கை அமைப்பும் காரணமாய் அமைந்து விடுகின்றன. அவ்வகையில் திரு. மா. நாமதேவன் அவர்களின் வாழ்வு, அவரோடு நான் பழகிய அந்த சொற்ப காலம் என் மனதில் நிழலாக இருப்பதை இவ்விடத்தில் பகிர்ந்து கொள்கின்றேன்.

21.10.1991 அன்று திரு. நாமதேவன் வீட்டு கடைசி மருமகளாய் காலடி எடுத்து வைத்தேன். அன்று நான் சந்தித்த அண்ணன் மிகக் கடினமானவராக இருந்தாலும் என்னுடன் 'தங்கச்சி' என்ற வார்த்தைக்கு மறுவார்த்தையின்றி அன்போடு உரையாடினார். 10.10.1992 அன்று நான் மலையகத்தின் மருமகளாய் கண்டியில் கால் பதித்த போது தங்கள் வீட்டில் இருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அந்த நேரத்தில் நீங்கள் விவேகானந்தா பாடசாலையின் அதிபராக இருந்தீர்கள்.அக்காலகட்டத்தில் உங்கள் செயற்பாடுகளைக் கண்ணுற்றிருக்கின்றேன்.

ஒரு அதிபருக்கே உரித்தான தோற்றம், கண்டிப்பு, கனிவு, கடமையுணர்வு என்னை மெய் சிலிர்க்க வைத்திருக்கின்றது. அதே போல் கல்வியதிகாரியாக பதவியுயர்வு பெற்று ஹட்டன் சென்று மீண்டும் கண்டிக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமாற்றம் பெற்று வந்த போது ஒரு அதிகாரிக்கே உரிய மிடுக்குடன் நீங்கள் இருந்ததை நினைக்கின்றேன்.

கல்வியதிகாரியாக கல்வித்திணைக்களத்திலும் சரி, பாடசாலை மேற்பார்வைக்காக பாடசாலைக்கு வரும் போதிலும் சரி என்னை அழைத்து நலம் விசாரிக்க தாங்கள் தவறியதேயில்லை.

காலமகள் உருண்டோட நான் தங்களிடம் கண்ட பல உயர்ந்த பண்புகளைப் பற்றி என் கணவரிடம் கூறியிருக்கின்றேன். எந்த விடயமாயினும் குடும்பத்திலுள்ள அனைவரும் அறிந்திருக்க வேண்டும் என்று நினைத்து ஆதியோடு அந்தமாக சம்பவங்களைக் கூறுவதும், நீங்கள் இருக்கும் இடத்தை சிறிதளவு கூட தூசு படியாமல் பார்த்துக்கொள்வதும், விடுமுறை காலத்தை எவ்வாறு கழிப்பது என திட்டமிடுவதும் தமாசாக பேசுவதும் விழாக்களை உறவுகளுடன் இணைந்து எங்கே எவ்வாறு கொண்டாட வேண்டும் என்று திட்டமிட்டு செயல்படுவதும் உங்களுக்கேயுரிய தனிப்பண்புகள்.

தங்களுடைய அம்மா மரணப்படுக்கையில் இருந்த பொழுது அவர்களை நீங்கள் பார்த்து பராமரித்த விதம் இன்றும் என்னை நெஞ்சுருகச் செய்கின்ற நிகழ்வாக இருக்கின்றது.

'சுனாமி' அனர்த்தம் ஏற்பட்ட போது எனது தங்கையின் பாடசாலையான மட் ஃ விபுலானந்தா கல்லூரி மாணவர்களுக்கு நிவாரணங்களை சேகரித்து என்னுடன் கூட மட்டக்களப்பிற்கு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பாடசாலை அதிபரைச் சந்தித்து, நிவாரணங்களை ஒப்படைத்து, நலம் விசாரித்து வந்த அந்த நாட்கள் என்றும் என்னால் மறக்க முடியாதவை.

தங்கள் வீட்டில் எல்லாக் காரியங்களிலும் தாங்களும் பங்கெடுத்து செய்யும் அந்த மனப்பாங்கு தங்களுக்கே உரிய சொத்து.

தாங்கள் சுகவீனமுற்ற போ தெல்லாம் யார் வராவிட்டாலும் நான் வந்து பார்க்க வேண்டும் என்று நினைத்ததை என்னிடமே கூறியது இன்றும் என் காதில் ஒலிக்கின்றது. நீங்களாகட்டும், உங்கள் அம்மாவாகட்டும், (எனது மாமி) உங்கள் ஏனைய சகோதரங்களாகட்டும் என்மேல் வைத்துள்ள அன்பையும் பாச உணர்வுவையும் நினைத்து நான் பெருமைப்படுகின்றேன்.

இறுதியாக உங்களை நான் பார்த்போது என் இரத்தமே நீரானது போன்றதோர் உணர்வு எனக்குள் அந்த நேரத்திலும் 'Exam Duty' போகலயா? என்று கேட்டீர்கள். இந்த நேரத்திலும் எல்லாவற்றையும் நினைக்கிறாரே என நான் மனதிற்குள் நினைத்துக்கொண்டேன்.

கொழும்பிற்குப் போகு முன் 'சுகமாகி வந்ததும் புது வீட்டிற்கு வருகின்றேன்' என்று என்னிடம் கூறினீர்கள். ஆனால் இன்று □□..! தங்கள் அம்மாவை எங்கள் வீட்டிற்கு 'கல்' வைக்கும் போது கூட்டி வந்த வேலையில் 'அம்மா வீடு கட்டி முடித்ததும் வந்து பாருங்களேன்' என்று கூறினேன். ஆனால் அம்மாவிற்கும் வர முடியாமல் போய் விட்டது. அம்மாவும் தாங்களும் எங்கள் புதிய வீட்டிற்கு வராமல் எங்களிடமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றாக விடை பெற்றது என் எஞ்சிய வாழ்வில் எனக்கிருக்கும் பெரிய ஒரு குறை என்பதை உணர்கிறேன்.

உங்கள் வீட்டில் ஏற்பட்ட அடுத்தடுத்த இழப்புகளை சந்தித்த வேதனை, அந்தத் துன்பம் என் மனதை விட்டகலும் காலம் காலமகள் கைகளில் ......?

ஒரு மனித உடல் ஒரு பெட்டிக்குள் அடங்கி விடும், ஆனால் அம்மனிதனின் வாழ்வு இந்தப் பக்கங்களில் அடங்கி விடுமா என்ன? நான் சொல்ல நினைத்தவை பல்லாயிரம் ஆனால் சொன்னதோ சொற்பமே.

அண்ணன் உங்கள் வாழ்வு எங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு, உங்கள் ஆன்மா நித்திய இளைப்பாற்றி அடைய இறைவனை வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழியின் துணைவருக்கு

திருமதி பவானி தேவதாஸ்
முன்னாள் தொலைக்கல்வி சிரேஷ்ட
போதனாசிரியர் (வலப்பனை)
முன்னாள் சீடா வள ஆலோசகர்(நுவரெலியா)

திருவாளர் எம். நாமதேவன் அவர்களின் நீதி, நேர்மை, சுத்தம், தனித்துவம், துணிவு, எழுத்தாற்றல், பெருந்தோட்ட மக்களிடைத்தான பற்று, தன் மாணவர்கள் மீதான கரிசனை, பாசம், வேலையை மிக நேர்த்தியாக செய்யும் திறன் பற்றி எல்லாம் பலரும் கூற, புகழ அறிந்திருக்கிறேன். அன்னாரை பற்றி இந்நூலின் நானும் எழுத, எனக்கு இவ்வாய்ப்பினை எனக்கு வழங்கிய திரு. எம். நாமதேவன் அவர்களின் அன்பிற்குரிய வாழ்க்கைத் துணைவியும் எனது தோழியுமாகிய சரோஜாவுக்கு எனது நன்றி.

அரை நூற்றாண்டுக்கு அதிகமாக ஆயுளில் கடந்தாயிற்று. அதில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தோழமை கொண்டிருப்பவர்கள் நானும் திருமதி சரோஜா நாமதேவனும். பாடசாலைப் பருவத்தை விட என் வாழ்வில் சகல முக்கியமான காலங்களிலும் என்னோடு அண்மையில் இருந்தவள் என் தோழி. இந்தளவு இந்த அன்பும், அண்மையும் நீடிக்கக் காரணம் தேவன்; தோழியின் துணைவர்.

எல்லா சராசரி மனிதருக்கும் மேலான தன்மைகள். உயர் பண்புகள் கொண்டவர் திருவாளர் எம். நாமதேவன் என்பதனை நான் கண்ட சில சம்பவங்கள் மூலம் குறிப்பிட விளைகிறேன்.

1985ன் இறுதி–என் திருமணத் தேரிவை தள்ளிப்போட்டும், தவிர்த்துக் கொண்டும் இருந்த எனக்கு. "அது தப்பு; தாமதிக்காதே!" என என் தோழி ஆலோசனை வழங்கினாள். அவள் அறிவுரைக்கு அவள் துணைவரும் உந்து சக்தி என அவள் மூலமாகவே அறிந்த போது ஆச்சரியப்பட்டேன்.

என் திருமணம் நிச்சயமான பின் ஆயத்தங்கள் அனைத்திலும் என்னோடு பல தினங்கள் தோள் கொடுத்து உதவ தன் அன்பு மனைவிக்கு மறுப்பேதுமின்றி அனுமதித்தார். அந்த நேரம் 11/4 வயதே நிறைந்த மகன் மனோஜை தானே கவனித்துக் கொண்டு, என் கல்யாணகாரியங்களைக் கவனிக்க பல தடவைகள் தோழியை அனுப்பிய அந்த நல்ல உள்ளத்தினை யிட்டு ஆச்சரியப்பட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு புக்ககமாக நுவரேலியா அமைந்து விட்டது. கலைமாணி இறுதி தேர்வுக்கான வகுப்புகள் நிமித்தம் பிரதி வாரமும், வார இறுதித் தினங்களின் உடத்தலவினையில் அவர்கள் வீட்டில் ஆஜாராகி விடுவேன் நான். சலிக்காமல் உபசரிப்பாள் தோழி. என் படிப்பிற்கு இடையூறாக அமைந்து விடலாகாதே என, தன் ஒரே மகனை தோளில் போட்டு வெளியே கூட்டிச் சென்று பராக்குக் காட்டி, விளையாடி, அவன் உறங்கியப்பின் கொணர்ந்து சேர்ப்பார். இப்படியும் யார் செய்வார்கள் என வியப்பேன்.

நான் தாய்மையுற்ற போது, "பட்டதாரியாகட்டும் என் அம்மா" என பார்த்திருந்தாளோ பிள்ளை" என்ற பகிடியுடன், கடும் குளிர் பிரதேசமான கந்தப்பளை நகருக்கே கட்டுச்சோறு கட்டிக் கொண்டு வந்த பாசத்தை எண்ணி மகிழ்வேன் இது போன்ற எத்தனையோ சம்பவங்கள்.

தொலைக்கல்வி, அல்லது சீடா அலுவல்கள் பொருட்டு ஏதோ இடையிலொரு நாள் இராகலையிலிருந்து ஹற்றன் போக நேரும் போதே பேருந்தில் களைத்து விட்டிருப்பேன். ஆனால் அதே நேரம் கண்டியிலிருந்து ஹற்றன் கல்விக் காரியாலயத்திற்கு பணியாற்ற பயணிக்கும் சகோதரன் அவர்களை அதே பேருந்தில் தற்செயலாக காணும் படியானால் ஏதோ அந்த பேருந்து தரிப்பிடத்தில் தான் முகம் கழுவி உடையணிந்த மாதிரி களைப்பற்ற கம்பீரமான தோற்றத்தில், மடிப்புக்கலையாத ஆடையுடன் இருப்பார். கடைசி வரை நீடித்த இந்த சாத்தியம் போற்றுதலுக்கு உரியது.

19 வருடங்கள் நுவரேலியாவில் பணியாற்றிய பின் மறுபடியும் கண்டிக்கு இடமாற்றம் கோரி வந்தேன். அதே தினம், மாலையில் என்னையும், மகளையும் அன்னார் கலஹாவில் ஏதேச்சையாக சந்திக்க நேர, உரிமையுடன் கோபித்தார். "நுவரெலியா திணைக்களம் விடுவித்ததை அறிவித்திருக்கக் கூடாதா? இப்படி இந்த பெண்ணையும் அழைத்துக்கொண்டு வந்து நிற்கிறீர்களே! நாங்கள் எல்லாம் இருப்பது மறந்து விட்டதா? எடுங்கள் பைகளை! வீட்டக்கு போவோம்" என்ற அன்பும், அதிகாரமுமான அழைப்புக்காக இன்னமும் நெகிழ்வுறுகிறேன்.

"தேவைப்பட்டவர்களுடன் உன்னிடமிருந்த
சிறந்தவற்றையே பகிர்ந்துக் கொண்டாய்" என்ற அப்துல்கலாமின் "அக்கினிச் சிறகுகள்" கவிதை வரிகள் அருமைச் சகோதரனுக்குச் சாலவும் பொருந்தும்.

"நாம் மீண்டும் சந்திப்போம்
அந்த மாபெரும் நியாயத் தீர்ப்பு நாளில்" என அந்த படகோட்டியின் மகனான விண்வெளி சாதனையாளனின் எதிர்பார்ப்பு வரிகளையே என் தோழியின் துணைவருக்கு சொந்தம் ஆக்குகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நினைவில்

S. துரைராஜ்
கோட்டக் கல்விப்பணிப்பாளர்
கம்பளை வலயம்

மலையகத்தின் கல்வித்துறையில் கண்கள் திறந்த கல்விமான்கள் பலரை நம் சமூகம் கண்டுள்ளது. அவ்வரிசையிலே கண்டி நகரின் பாடசாலை ஆசிரியராக, அதிபராக கோட்டக் கல்விப் பணிப்பாளராக இடையறாது பணியாற்றிய திருவாளர். எம். நாமதேவனும் முக்கிய இடம் பெறுகிறார்.

அன்னாரை 1990ம் ஆண்டு முதல் நான் அறிவேன். அவரின் இனிய பண்புகள், பழகும் சுபாவம், மலையக மக்களின் முன்னேற்றம், கல்வி சார் நடவடிக்கையில் கொண்டிருந்த ஈடுபாடு என்பன என்னை பெரிதும் கவர்ந்தன. கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் இவர் காலத்தில் அவரோடு பணியாற்றிய பல காரியங்கள் என் மனத்தில் நிலைத்து நிற்கின்றன.

சிறந்த தனயனாக, தமையனாக, துணையாளராக, தந்தையாக தன் குடும்பத்தாருக்கு திகழ்ந்தவர் அமரர் எம். நாமதேவன். சுற்றத்தாரோடு பாசமும், நேசமும் கொண்டவர். நண்பர்களையும், நட்பையும் பெரிதும் போற்றிப் பேணுபவர்.

நோய்வாய்ப்பட்டிருந்த போதும் கல்வி வளர்ச்சியில் கரிசனையுடன் இயங்கியவர். இவரின் மறைவு எனக்கும், மலையக சமூகத்திற்கும் பேரிழப்பு, பெரும் துன்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக சமுதாயத்துக்கான அமரர் நாமதேவனின் கனவுகள்

திரு. M.E. சாமுவேல்

பத்தாம் பசலியாக பலகாலம் வாழ்ந்து வந்து
முத்தாக வியர்வை சிந்தி முதுகெலும்பும் கூனாகி
புத்தம் புதுவழியில், பாரதியின் அறிவுரையில்
வித்தகராய் கல்வியிலே விரைந்து வளர்ந்திடுவோம்

அறிவின் கூர்மையால் எம் சமுதாயம் குறை நீக்க
பறிகொடுத்த உரிமைகளை பக்குவமாய் மீண்டும் பெற
அறியாமை எனும் அரக்கனை அழித்தொழித்து
வெறிகொண்டு கல்வியிலே வீறுநடை போட்டிடுவோம்

எள்ளி நகையாடும் எத்தர்களின் வாயடக்கி
பள்ளி என்ற பாசறையில் பல்கலையும் பயின்றிடுவோம்
வெள்ளித்தட்டில் தங்கம் போன்ற கல்வியை நாம்
அள்ளிப்பருகி நம்மவர்க்கு அரிய சேவை செய்திடுவோம்

கல்வியின் சிறப்பை, சிகரத்தைக் கண்டறிய, நமக்கு
நல்வழியைக் காட்டுவதற்கு நல்லறிஞன் சாக்ரடீஸ் போல்
பல்லாயிரம் கல்விமான்கள் நம்மிடையே உருவாக
எல்லோரும் ஒன்றுபட்டு அயராது உழைத்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாளர். மாரிமுத்து நாமதேவன் அவர்கள்.....

சரோஜாவின்
சகோதர சகோதரிகள்

அன்புசால் மைத்துனரே!
தாய்மண்ணியல்பே
தமிழ்மொழியூற்றே
இருபெருங் குடும்பத்து
இயல்புத் தலைவனே
பெற்றால்தான் பிள்ளையா
பேறாமக்கள் பெருமைதான் எத்துணை
உடன்பிறப்பு போல் உறவு நெருக்கம்
ஊரறிந்த, உயர்மகனே

மலையகத்தாய் மகவு நாமம் தேவன்
மல்லிகைதான் உன்மனது
கடிது வழியே கல்வி கற்றாய்
கற்பிக்கும் பணியுமேற்றாய்
பழுதில்லா வாழ்வு வேண்டி
கோயிலான் பெண் கொண்டாய்
குணக்குன்று உயர்மகன் நீ
சரோவும் உயர்மகளே
புத்தாண்டு வருவதற்குள்
யேசு பிறப்பாண்டு வந்துவிடும்
புத்தாடை சீர்தந்து
புகழ்ந்தெம்மை மகிழ்விப்பாய்
அத்தா! அன்பு மைத்துனரே!
எப்போது இனி காண்போம்

காலாண்டு மணவாழ்வில் இன்னும்
ஓராண்டு வந்தமைந்தால்
காலமகள் பொறுத்திருக்க
நாமதேவன் விரைந்ததேனோ
கற்றாய் கற்பித்தாய்
கல்வியை இயக்கினாயினிதே
பணிவோய்வு பெற்றாய்
ஓய்ந்திருக்கும் வேளையதில்
ஓசையின்றி ஏன் சென்றாய்
காட்டமான எம் தந்தும்
வாட்டம் கொண்ட மாமலையகத்தை
ஊட்டம் கொள்ளச் செய்யவெண்ணி
கவியூற்றாய் கட்டுரையாளனாக
கல்விப் பெருமகனாக
வாழ்ந்த உமை வாழ்த்துகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடாமலர்.....

திரு. எம். எஸ். பிரபாகர்(அதிபர்)
க/அம்பலமான தமிழ் வித்தியாலயம்.
கலஹா

---

கல்வி என்னும் மூன்றெழுத்தில்
களைக்காது கண்ணியமாய்
கடமையில் செம்மையாய்
கடந்து வந்த வெற்றிகள்
கண்ணெதிரே தோற்றமாய்
காலத்தால் அழியாத ஓவியமானீரே! ஐயா!
கல்வி மான் "தேவன்" – என்ற
மூன்றெழுத்தில் எம்மனதில்
காலத்தால் அறியாத வடுவாய்
காண்கின்றேன் என் மனத்திரையிலே!

கணீரென்ற குரலாய்
கடமையில் தவறாதவராய்
கண்டி வலய பணிமனையில்
கம்பீர தோற்றமாய்
கனிவான தோழனாய்
காடு, மலைக்குன்றுகள் கடந்தவராய்!
கல்விக் கூடத்திற்கு சென்றவராய்
கல்விக் கூடமதில் அதிகாரியாய்
கள்ளமற்ற தோழனாய்
கடிந்து பேசினாலும்–நல்ல
கடமையின் புருஷராய்
கடமை புரிந்தீரே! – ஐயா!

காலன் உங்களை
கண்ணிமைக்கும் நேரத்தில்
காண முடியாத தூரமாய்
களவாடி சென்று விட்டானே!
கானகத்தில் உங்கள் உடல்
கண்காணாதிருந்தாலும்
காலன் உங்கள் உயிரை
கவர்ந்து சென்றாலும்
தேவருக்குள் தேவராய் சென்றுவிட்ட
அமரர்: எம். நாமதேவரே!
உங்கள் நினைவுகள் என்றும் வாடாமலராய்
பசுமரத்தின் ஆணியாய் எனது மனதில்
உள்ளதே "ஐயா"

சுபம்

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்த என் ஆசானுக்கு

மாணவி
லோசினி
கணகவிஜயன்

பூமியில் இளஞ்செடியாய் வாழும்
மாணவர் பலருக்கு
விண்ணை முட்டி நிற்கும்
மரங்களாய் வளர்ந்துவிட
வழிகாட்டிய ஆசானாய்....

தன் கற்பனையில் தோன்றிய
கருத்துகளால்
மற்றவரை கற்பனை
செய்ய வைத்த
எழுத்தாளராய்....

சமூகத்தை விமர்சித்து
பத்திரிகை பிரியராய்
இருந்து
சட்டங்களுக்கு மதிப்பளித்து
நல்ல குடிமகனாய்....

இவை யாவற்றுக்கும் மேலாக
நல்ல மனிதராய் வாழ்ந்து....
யாரும் எதிர்பாராத வேளையில்
விண்ணகம் அடைந்த
ஆசானுக்கு
எம் கண்ணீர் காணிக்கைகள்
அவர்
மண்ணில் புதைக்கப்பட்டவரல்ல
மனங்களில் விதைக்கப்பட்டவர்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமம் பெற்ற தேவனுக்கு - ஓர் நன்றி மறவா நினைவஞ்சலி

அதிபர், ஆசிரியர்கள்
மலைமகள் இந்து மத்திய கல்லூரி

கல்விக்கண்ணை திறக்கவென
கருணையுடன் கால் பதித்து
கடுமையான உழைப்புடனே – உள்ளம்
கவர்ந்த கோமகனாய்
கண்டி கோட்டம் தந்துவிட்ட
கல்வியதிகாரி தாங்கள் ஐயா

தோட்டுவிட்ட சேவைதனை
திட்டமிட்டு நாளும் பொழுதும்
இட்டமுடன் செய்த தெல்லாம்
ஈடற்ற செய்கையன்றோ
இணையில்லா சேவையினால்–ஆசான்
இதயங்களை கவர்ந்தாய் ஐயா

நேர்கொண்ட பார்வையும்
நிமிர்ந்த நன்னடையும்
தேர்ந்த உரையும்
தெளிவான விளக்கமும்
தேடலுக்கு தூண்டுகின்ற
தெவிட்டாத தேன்மதுரமையா

தோற்றுவிட்ட சமூகமொன்று
தொலைந்தே போய்விடாதிருக்க
பார்த்துப் பார்த்து பரிந்துரைத்த
பரிந்துரைகள் எத்தனையெத்தனை
எடுத்தே நாம் ஈந்திட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்திடுமே எம் சமூகம்
மலையகத்தில் உயர்ந்து நிற்கும்
மலைமகளின் வளாகத்தில்
மனதார வைத்த கால் தடங்கள்
மௌனமாய் எம்முள்ளம் வருடி பார்க்கிறதே
கால் தடங்களல்ல அவை
கல்வித்தடங்கள் என அறிந்தோம் ஐயா

ஒன்று பட்டால் மாத்திரமே
உய்வு காணலாம் என்று
பாத்த ஹேவாஹெட்ட பாட சாலைகளை
பாத்திரங்களாய் கொண்டு நீங்கள்
பாடுபட்டு நடத்திய பல்வேறு போட்டிகளும்
உங்கள் பதிவுகளில் உருவாகியுள்ளதையா

ஓய்வு பெறும் வேளையிலே
ஒவ்வொருவராய் கண்டு நீங்கள்
விடைபெற்ற நாளதனை
விழியிரண்டில் நீர் மல்க நினைத்திடவே
விரைந்துள்ளம் எழுகிறதே
விம்மித் தளர்கிறதே

கருவறையிலிருந்து வந்து
மண்ணறையில் சங்கமிக்கும்
நாமமதில் தேவனையே
நாசுக்காய் கொண்டிருக்கும் நீங்கள்
தேவனின் சந்நிதியில்
தீர்க்கமாய் சங்கமிக்க
பிரார்த்திக்கின்றோம் பிரார்த்திக்கின்றோம்
பிரார்த்திக்கின்றோம் பிரார்த்திக்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றும் என்றும் துயரத்தில் ஆழ்ந்திருக்கும்

எஸ். பிரியங்கா

முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளரான அமரர் திரு. நாமதேவன் ஐயா அவர்களுக்கு நானும் எனது குடும்பத்தினரும் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம். ஏனெனில் இவ்வருட ஐந்தாம் வகுப்பு புலமைப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுள் நானும் ஒருவராக திகழ்வதற்கு ஐயா எனக்குச் செய்தது மாபெரும் உதவியாகும். அவ்வப்போது பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்களையும் கொடுத்துதவி, பல அறிவுரைகளை வழங்கி பரீட்சையில் சித்தி அடைய வழிகாட்டியாக இருந்தார். எனது சகோதரனுக்கும் தேவைப்படும் போது கல்வி சம்பந்தமாக உதவிகளைச் செய்தவர் அமரர் நாமதேவன் ஐயா அவர்களே இன்று எனது பரீட்சைப் பெறுபேறுகளை அறிய ஐயா அவர்கள் எம்மிடையே இல்லாவிட்டாலும் அவரது நினைவுகளும் முன்மாதிரியும் எங்கள் மனதைவிட்டு நீங்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# எம். நாமதேவனின்
# கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தனை செய்திடோம்

மலையகத்தான் என்றிட்டால்
மனங் கூசி நடுநடுங்கித்
தலை கவிழ்ந்து நின்ற எங்கள்
தன்மையெல்லாம் மாறியதால்
நிலை குலையா நெஞ்சோடு
நிமிர்ந்த நடை பயின்று சக்தி
விலை யேறப்பெற்று நாம்
விளங்குகின்ற காலம் இது

மடைமையிலே ஊறி நின்று
மாக்களாய் வாழ்ந்த எம்மை
அடிமைகளாய் நினைக்கின்றார்
அதிகார வெறி பிடித்தோர்
மடையருக்கு மதி புகட்ட
மலையகம் புறப்படட்டும் – இனிமேல்
கொடுமைகள் ஒழியட்டும்! எம்
குறைகளும் அழியட்டும்!

கந்தனைக் கை கூப்பி என்றும்
கதி நீயே யென்றிருந்தோம்
நிந்தனையே உடைமைகளாய்
நேரிய வாழ் வழிந்தோம்
சிந்தனைகள் இளைஞர்களைச்
சீர் வழியில் நடத்துவதால் – யார்க்கும்
வந்தனைகள் இனிச் செய்யோம் நாம்
வாய்புதைத்து வாழ்த்து ரையோம்

சிந்தாமணி 23 – 2 – 1986


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வழியமைக்க புறப்படு

காலை முதல் மாலை வரை கடும் உழைப்பால் பசிய
சோலை யெனத் தேயிலையால் பணம் உழைக்கும் எம்மை
வேலை கொள்வார் நிதம் படுத்தும் பாட்டை நீ எண்ணி
ஓலை யாய் உழைத்திட வா எந்தன் உயிர்த் தோழா!

சிந்தனைக ளோங்கிடா மல் கல்வி மறுத்து
சிந்தனைகள் பல வாறாய் நாளும் எம்மேல் தொடுத்து
வந்தனைகள் செய்திடு என் போரைநீ சாடி
உந்தன் குர லெழுப்பிடுவாய் எந்தன் உயிர்த் தோழா!

நதிகள் பல உருவாகும் மலை நாட்டில் தெய்வம்
கதி யெனவே காலமெலாம் இடருறும் எம் மவர்க்கு
இதமாய் மொழி யீந்து இன் முகமுங் காட்டி
புதியதோர் வழிய மைக்கப் புறப்படுநீ தோழா!

சிந்தாமணி 21-9-1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம(ண)ன
## வேறுபாடு

தோட்டத்து மல்லிகையின்

துயர்போக்க பலருண்டு

மலைத் தோட்டத்து

மக்களுக்கோ

தொல்லைகள் தான்

நிறையவுண்டு

சிந்தாமணி 17–11–1985

## வாத்தியார்

கல்வியளித்துக்

கடவுளென்ற

பேரெடுத்தும்

கடைசியில் கண்டது

கஷ்டமான வாழ்க்கைதானே

சிந்தாமணி 18–8–1985 மணிக்கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்கின்ற துயரங்கள்

வெண்பனி வீழும் அவ்
விடியற் காலைப் பொழுதினிலே
தண்ணீரால் முகம் அலம்பி
தவித்தவாய் (வெந்) நீரின்றி
எண்ணில்லா இன்னலுடன்
இதயத்தில் சுமைகளுடன்
மண் காக்கப் புறப்பட்ட
மக்களுக்கோர் வாழ்வில்லை!

அதிகாரக் கூட்டம் (தேயிலை) மலையில்
ஆர்ப்பாட்டம் செய்து-நிதம்
பதினாயிரம் பல்லவிகள் பாடி
பரிதாபம் சிறிதும் இன்றி-தம்மை
சதி செய்து சாற்ற வொண்ணா
சங்கடத் திலாழ்த்துவதை
விதி யென்றெண்ணுகிறார்-மக்கள்
வேதனையில் வாடுகிறார்!

ஆணுக் கோர் நீதி வீட்டுப்
பெண்ணுக்கோர் நீதி யென்று-நாளும்
வீணுக்காய் சட்டம் வைத்து
வேடிக்கை காட்டுகிறார் (காட்சி)
தூணுக்கோர் நீதி அவர்
தொண்டனுக்கோர் நீதி-இங்கு
காணுகின்ற காட்சியெல்லாம்
கயமை தனங்க ளன்றோ!

பிள்ளைக்கு கல்வி கேட்டால்
பேயருக் கென்ன படிப்பென்று
உள்ளத்தை நலிய செய்யும்
உன்மத்த வார்த்தை கூறி
பள்ளத்தில் வீழ்ந்திடு வாரெம்மை
பமரராய் ஆகிடுவார்
கள்ளத்தனங்கள் செய்தே பெரும்
காசு பணங்கள் சேர்ப்பார்!

கொந்தளிப்பு பெப்ரவரி 1984 இதழ்28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடி வாராய் கண்ணே!

கன்னங் கறுத்தச் சடையுடையாள் – இரு
காவிரிக் கெண்டைக் கயலுடையாள்
விண்ணில் விளைந்திடும் வெண்மதி போலொளி
வீசிடும் வெண்முத்துப்பல் வரிசையினால்
வண்ணவிதழ் வாலைக்குமரியிவள் – மென்
வாழைத்தண்டின் பெருகுடையாள் – அவள்
எண்ணத்தி னின்ப கிலுகிலுப்பால் – என்னை
ஏங்கிடச் செய்தே மறைந்து விட்டாள்
கன்னத்திலோர் கறை கண்டதென்ன – அது
தண்ணிலவில் தோன்றும் வன்தழும்போ!
பொன்னெழில் பூத்திட மின்னிடும் மென்னிடை
தண்ணொளி காட்டிடும் தாரகையோ!
அன்னக்கொடியிவள் சின்னத்தளிர்நடை
என்னில் மயக்கத்தை ஏற்றிடுதே!
கன்னியவன் கரம் பற்றிக் களித்திட – என்
உள்ளம் உவகையில் துள்ளிடுதே!
சிந்தை கலங்கிட நெஞ்சம் உருகிட
வஞ்சியுனைத்தேடி வாடுகிறேன் – சற்று
வந்திங்கு ஓர்கணம் என்னிதய இன்னலை
நீக்கிட நின்னுள்ளம் நாடுகிறேன் – நல்
விந்தை புரிந்துன்னை வேடிக்கை காட்டியே!
மஞ்சத்தில் மகிழ்ந்திட மயங்குகிறேன்
எந்தை குறைபோக்கி இன்பமளித்திட
இன்னமுதே ஓடி வாராய் கண்ணே!

"ராதா" வாரப்பத்திரிகை கொழும்பு 29-9-1966



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீர மைந்தராய் புறப்படு

தேங்காயும் மாசியும் தேயிலைத்தூரிலே
தேடாமல் கிடக்கு தென்றுரைத்தார் – அந்த
ஓங்கிய வார்த்தையால் உள மாறிப்போனவர்
ஓடோடியிங்கே விரைந்தார்

கப்பலில் செப்பிய கனிவான மொழிகளால்
கனவுகள் பலவும் கண்டார் – அதை
எப்போது இன்பமாய் கண்டிட லாமென்றே
ஏங்கியே நாட்களை விட்டார்

எண்ணிய எண்ணங்கள் ஏமாற்றமாகவே
என் செய்வதென்றே துடித்தார் – இனி
கண்ணிய வாழ்வுக்கு கதையிலை என்றவர்
கர்மமே தலைவிதி யென்றார்

நோய்களும் பிணிகளும் நுழைந் தவர் வாழ்க்கை
நொறுங்கிய தோணியாய் போச்சு – பணப்
பேய்களால் வாட்டிய மக்களின் தோட்டமோ
நித்திய தரித்திரமா யாச்சு

வழியினில் மாய்ந்தவர் வருத்தத்தில் போனவர்
உழைப்பினில் உதிர்ந்தவர் என்றும் – வனப்
புலி விஷப் பாம்பு மற்றுயிர்களால்
மாண்டவர் ஆயிரமானார்

தென்னவர் எம்மவர் துயருற்ற போதிலும் அன்று
கோப்பி தேயிலைகள் வளர்த்தார்
அன்னவர் வாழ்த்திட்ட பூமியின் செல்வத்தை
அந்நியர் அள்ளியே சென்றார்

காலங்கள் மாறினும் கடமைகள் வாட்டினும்
கலைகளை செய்தவர் வந்தார் – துன்ப
ஓலங்க ளாயினும் தெய்வத் திருவிழா என்றும்
திறமையாய் வளர்த்தே நின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைகளில் எம் மக்கள் வாழ்ந்தவ ராதலால் நாமின்று
மலையகத்தவ ராகி விட்டோம்–பல
கலைகளும் கற்றிட கருத்துள்ள மக்களாய்
காலத்தால் மாறியே விட்டோம்

அரசியல் ஆசிரியர் அரசுதுறை தொழிற்சங்கவாதி
வழக்குரைநர் வைத்தியர் வர்த்தகராய் ஆகி
சிரசினில் நல் சிந்தையராய் இன்னும்
சீர்மை யாளராய் ஆகி விட்டோம்

புறச் சமுகம் போற்றும் புதல்வர்களாய் இப்
புவிதனில் நாம் வாழ்ந்திடவே
அறம் பல செய்திங்கே அக மகிழ்வோம்
அன்புடன் அவரை அரவணைப்போம்

மலையக மண்ணின் மைந்தர்கள் நாமிங்கு
மாக்களாய் வாழும் நாள் இன்றில்லை–என்ன
விலை கொடுத்தேனும் எம் மானத்தைக் காத்திட
வீர மைந்தர்களாய் விரைந்திடுவோம்

(2008 சத்திர சிகிச்சைக்காக
அனுமதிக்கப்படு முன்னர் கொழும்பு
இல்லத்தில் இறுதியாக எழுதி
வைத்திருந்த கவிதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவரது விருந்தோம்பல் விளக்கத்தக்கது

பல்வேறு விதமானோர் "Uncle" ஐ வர்ணித்திருக்கலாம். எனது சிந்தையில் நிலைத்த "Uncle" ஐ பற்றி சில காரிங்களை பகிர விழைகின்றோம்.

மனிதர்கள் பிறப்பது இறப்பதற்காகவே...
ஆயினும் இறக்கும் மனிதன் கொண்டு செல்வது
ஒன்றும் இல்லை.
அவன் விட்ட செல்வதே அவன் பெயர் சொல்லும்
அவ்வகையில் சடுதியாக எம்மைவிட்டு சென்ற "Uncle"
மூன்று காரியங்கள் எம்மை
சிந்திக்க வைத்தன,

முதற்காரியம்
"சுத்தம் சுகம் தரும்"
Uncle வாழ்ந்த காலத்தில் அவர் எமது வீட்டிற்கு
வந்தாலோ, அன்றி நாம் அவர் வீட்டிற்கு
சென்றாலோ, அவர், கை, கால் கழுவுவதையும் வீட்டைப்
பெருக்கி சுத்தமாக வைப்பதையும் காணாதோர்.
இருக்க மாட்டார்கள்

மனிதரிடம் சுத்தம் அவசியம், நாம் வாழும் சூழல் சுத்தமாக இருக்க வேண்டும். இது மனிதகுலம் வாழ்வதற்கு இன்றியமையாதொன்று. அதனை தனது வாழ்க்கையின் வெற்றிகரமாக கைக்கொண்டவராக "Uncle" விளங்கினார். அதற்கு அவருக்கு நன்றி.

இரண்டாவது காரியம் அவர் கொள்கையும், கடமையுணர்வும். நாம் யாராக இருந்தாலும் நாம் கடைப்பிடிக்கும் கொள்கையை விட்டு வழுவாமல் இருக்கவேண்டும். அவ்வாறாக இவ்வுலகில் வாழ்ந்தவர் "Uncle" அவரது கடமையுணர்வை விவரிக்க நான் தகுதியற்றவன் ஆயினும் அவரது மரணச் சடங்கில் கலந்து கொண்டும். அவருக்கு அஞ்சலி செலுத்திய சகாக்களின் எண்ணிக்கையே, அதற்கு ஒரு சாட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது அவரின் விருந்தோம்பல் இன்றைய விலைவாசி ஏறிய காலகட்டத்திலும் நாங்கள் அவர்வீடு சென்றால் எம்மை உபசரித்து மகிழ்விக்க "Uncle" என்றும் தவறவில்லை. நாம் ஒருவரையொருவர் அனுசரித்து, உபசரித்து வாழவேண்டுமென்ற நல்லதோர் படிப்பினையையும் அவர்விட்டு சென்றார்.

## Uncle - Thanks

மாசிலின் ச. ரட்ணா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

நினைவுமலர் வெளியிடவேண்டும் என்ற உணர்வினை எமக்கு ஏற்படுத்தியதுடன் பொருளாதார உதவியையும் முதன்முதலாக வழங்கிய என்றும் எனது அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய கண்டி வலய மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி. சிவரட்ணம் அம்மையார் அவர்கட்கும், மற்றும் கண்டி வலய அன்புச் சகோதரி, சகோதரிகளான உதவி கல்விப் பணிப்பாளர்கட்கும். ஆசிரிய ஆலோசகர்கட்கும் எமது நன்றிகள்.

அமரர் நாமதேவனின் நினைவலைகளை மீட்டுப் பார்த்து நினைவுமலரில் தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்திய அனைத்து நல்ல இதயங்கட்கும் எமது நன்றிகள்.

இம் மலரினை சிறந்த முறையில் வெளியிடவேண்டும் என்ற ஆதங்கத்தினை வெளிப்படுத்தியும், மலரினை வடிவமைத்துக் கொடுத்துதவிய திரு. இரா.அ. இராமன் அவர்கட்கும், திரு.எஸ். தமிழ்ச்செல்வன் அவர்கட்கும் எமது நன்றிகள்.

மிகக் குறுகிய காலத்தில் இம்மலரினை வெளியிட்டு அச்சேற்றிய, எனது அன்பிற்குரிய மாணவன் திரு. எஸ். சிவராஜா அவர்கட்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

நினைவுகள் வெளியிடவேண்டும், எமது அன்பிற்குரிய Sir இன் ஆக்கங்கள், ஆதங்கங்கள் வெளிக்கொணர வேண்டும் என்ற நல்ல இதயங்களுடன் தொடர்ந்து எமது வீடுவரை வந்து எம்மோடு ஒத்துழைத்த எமது அன்பிற்குரிய அதிபர் திரு. கிருஷ்ணகுமார் (போபிட்டிய தமிழ் வித்தியாலயம்) மலைமகள் மத்திய கல்லூரி ஆசிரியப் பெருமக்களான திரு. எஸ். சபாரட்னம், திரு. பிரபாகரன், திரு. ஜெயக்குமார், திரு. நேரு. திருமதி, உமா ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

எமது குடும்பத்தினரின் இன்பத்திலும். துன்பத்திலும் என்றும் பங்குகொள்கின்றவர்களும். நினைவுமலர் வெளியீட்டில் தமது முழு ஒத்துழைப்பினையும் வழங்கிய எமது உடன்பிறவா அன்புச் சகோதரிகளான திருமதி. பவானி (தலாத்ஓயா தமிழ் வித்தியாலயம்) திருமதி. ரேச்சல் ஜோய்ஸ் செல்வராஜா (மலைமகள் மத்திய கல்லூரி) ஆகியோருக்கு எமது நன்றிகள்

எந்த சந்தர்ப்பத்திலும் எமக்கு உறுதுணையாகயிருந்து ஆலோசனைகளை வழங்கிவருகின்ற மதகுருமார்கள், கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியப் பெருமக்கள், எமது அயலவர்கள் அனைவர்க்கும் எமது நன்றிகள்.

அமரர் நாமதேவனின் இழப்பினால்
ஆறாத் துயரில் மூழ்கியுள்ள
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11-10-2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமண நிகழ்வு
16 – 3 – 1984

ஒரு இலக்கிய
விழாவில்
உரையாற்றுகின்றார்





அமரர் அம்பலவாணர் சிவராசா,
நடராஜா, என். பார்த்திபன்
டி. அய்யாத்துரை,
இரா.அ. இராமன்,
மாத்தளை சசிதரன்
மல்லிகை சி. குமார், ஆகிய
எழுத்தாளர்களோடு
அமரர் எம். நாமதேவன்

முன்னாள் மத்திய மாகாண
கல்வி அமைச்சர்
வி. புத்திரசிகாமணி அவர்களின்
முன்னிலையில்
கோட்டக் கல்விப் பணிப்பாளராக
பதவி ஏற்கும் நிகழ்வு





அமரர் செளமிய மூர்த்தி
தொண்டமான் அவர்களை
பொன்னாடை போர்த்தி
கௌரவித்து மகிழ்கின்றார்
அமரர் எம். நாமதேவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2000ம் ஆண்டு செப்டம்பர் 23ம் திகதி அட்டன் இந்துமகா சபையில் நடைபெற்ற தமிழ் கலாசார விழாவில் சூரியன் FM அறிப்பாளர்களுடன் அமரர் எம். நாமதேவன் அமர்ந்திருகின்றார்.

ஒரு பாடசாலை விழாவில் உரையாற்றுகின்றார்





ஒரு பாடசாலை விழாவின் போது உரையாற்றுகின்றார்.

கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று சென்ற போது விவேகானந்த தமிழ் வித்தியாலயத்தில் பாடசாலை அபிவிருத்தி சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட சேவை நலன் பாராட்டு விழாவின் போது ஸ்ரீலங்கா சிகாமணி நாகலிங்கம் இரத்தின சபாபதி அவர்களால் கௌரவிக்கப்படுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்பு அண்ணனின் நினைவுகளுடன் ஒரு மடல்

அன்புள்ள அண்ணா!

சிறு வயதில் அப்பாவை இழந்தேன் சென்ற வருடம் அம்மாவை இழந்தேன். இந்த வருடம் இரண்டாவது அண்ணாவை இழந்தேன். இவர்களை இழந்து தவித்த நான் இன்று தங்களை இழந்த பேரிடியில் மனம் வெதும்பிக் கொண்டிருக்கின்றேன்.

அப்பா இறந்ததும், அந்த ஸ்தானமும் பொறுப்பும் உங்கள் தலை மேல் ஆனாலும் அதை சுமையாகக் கருதாமல் ஏற்று எம்மை வழி நடத்திய பொறுப்புணர்வை நினைத்துப் பார்க்கின்றேன்.

வவுனியா விவசாயப் பாடசாலையில் படித்த காலத்தில் விடுமுறைக்கு வீட்டிற்கு வரும் பொழுதெல்லாம் அந்த ஊருக்கே உரித்தான சுவையான மாம்பழங்களைக் கொண்டு வந்து எம்மை சுவைக்கச் செய்து அதில் நீங்கள் கண்ட மகிழ்ச்சி அளவிடற்கரியது. இப்பாடசாலையில் இருந்து வெளியேறியதும் மத்துகமையில் ஒரு வைத்தியரிடம் வேலைக்குச் சென்று அதன் மூலம் கிடைத்த வருவாயில் எமது தேவைகளை நிறைவேற்றினீர்கள். அந்த பொறுப்புள்ள அண்ணனை இன்றும் நான் நினைக்கின்றேன்.

Pupil Teacher ஆன உங்களுக்கு வேலை கிடைத்த பொழுது எவ்வளவு பேரானந்தம். நீங்கள் எனக்கு வாங்கிக் கொடுத்த ஷேட்டைப் பார்த்து 'வில்சன்' என்ற ஆங்கில ஆசிரியர் 'யார் வாங்கிக் தந்தது இந்த அழகான ஷேட்டை' என்று கேட்டது இன்றும் பசு மரத்தாணியாய் என்னுள் ஊடுருவுகிறது. இன்று சிறிதளவாவது ஆங்கிலத்தில் உரையாடுகின்றேன் என்றால் அது அண்ணா, நீங்கள் போட்ட அத்திவாரம் தான்.

பேராதனை பாடசாலையில் ஆரம்பப் பிரிவில் கற்கும் போதே விஞ்ஞானம் கற்க வேண்டும் என்ற ஆசையைக் கூறியபோது என் விருப்பத்திற்கு மதிப்பளித்து மடவல மதீனா கல்லூரியிலும் பின் புனித சில்வெஸ்டர் கல்லூரியிலும் அனுமதி பெற்றுத் தந்து என்னை இந்த அளவிற்கு உயர்த்திய பெருமை என் அண்ணனான அல்ல என் அப்பாவான தங்களுக்கு உரியதே.

படிப்பு முடிந்து பல வருடம் வேலையில்லாமல் இருந்த நான் தோட்டப் பாடசாலை ஆசிரிய நியமனம் பெற்றது. முதல் இன்று கித்துள்முல்லை வித்தியாலய அதிபராக பொறுப்பேற்றது வரை என்னுடன் கூடவே இருந்து என்னை வழி நடத்திய உங்கள் அன்பையும் அரவணைப்பையும் அன்புடன் நினைக்கின்றேன்.

1989, 1990 ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சிக்காக மட்டக்களப்பு கலாசாலையை தேர்ந்தெடுத்த போது விருப்பின்றி என்னை வாழ்த்தி அனுப்பினீர்கள். முற்று முழுதாக என் விருப்பத்திற்கு மதிப்பளித்த என் தந்தையாகவே செயற்பட்டதை நினைத்து பெறுமிதம் அடைகின்றேன்.

சுய விருப்பத்தின் பேரில் நான் மணமுடிக்க நினைத்ததை ஆரம்பத்தில் எதிர்த்த போதும் இறுதியில் சம்மதம் தெரிவித்து என் மனைவியான ரதியை மணமுடிக்க உதவியதையும் எம்மை ஆசீர்வதித்து இறக்கும் வரையில் எங்களை வழி நடத்தியதையும் எங்களை ஒரு போதும் கடிந்து கொள்ளாததையும் நினைத்து புளகாங்கிதம் அடைகின்றேன்.

அண்ணா! இன்று சிறப்பாக இயங்கி வரும் விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் பாரிய வளர்ச்சியின் அடிக்கல் தங்கள் கரத்திலேயே தாங்கப்பட்டதாக இன்றைய அதிபர் திரு. கே. சிவகுமார் என்னுடன் உரையாடும் போது கூறுவதைக் கேட்டு அளவில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

என்னுடைய வீட்டிற்கு வருவதென்றாலும் எப்பொழுதோ சொல்லி ஆயத்தப்படுத்துவீர்கள். அடிக்கடி விசாரித்து அன்றைய தினம் வருவதற்கு சகலதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டறிவீர்கள். எந்தப் பயணம் என்றாலும் நீங்கள் அப்படித்தான். நான் எங்கு சென்றாலும் உடனே செல்லும் வழக்கமுடையவன் எப்படியும் செய்யலாம் என்று நினைத்துக் கூறினால் என் மனைவி என்னைப் பார்த்து 'அண்ணனைப் பாருங்கள் எங்கு சென்றாலும் முன்னறிவித்தல் கொடுத்து விட்டு செல்கின்றார் அவர் பழக்கத்தை நீங்கள் கடைப்பிடிக்கக் கூடாதா?' என்று கடிந்து கூறுவதை நினைக்கின்றேன். திட்டமிட்ட வேலையே நல்லது என்பதை எனக்குணர்த்திய திறமையாளர் நீங்கள்.

என்னுடைய பாடசாலைக்கு குழு மேற்பார்வைக்கு தலைமை தாங்கி கல்வி அதிகாரியாக வருகை தந்த போது எம் பாடசாலையி லிருந்த குறைப்பாடுகளை ஒன்று விடாமல் குறித்து வைத்து அவற்றை சரிசெய்து கொள்ளும் முகமாக தகுந்த ஆலோசனை வழங்கி அறிவுரையும் கூறிச்சென்ற தங்கள் கடமை மனப்பான்மையை இன்றும் நினைக்கின்றேன்.

தாயின் இறப்பிலும் தம்பியின் இறப்பிலும் வேதனையடைந்த தாங்கள் சகோதரிகளின் வாழ்க்கையில் எங்களைவிட கூடிய கவனம் செலுத்தியதை தங்கள் இறப்பின் பொழுது அவர்கள் கதறியழுது கூறியதை நினைக்கின்றேன். இவையெல்லாவற்றையும் பார்க்கும் பொழுது குடும்பப் பொறுப்பிலிருந்து அதாவது ஒரு தந்தைக்குரிய பொறுப்பிலிருந்து நீங்கள் ஒரு போதும் விலகியதில்லை என்பதை எனக்கு உணர்த்திற்று.

காலன் விடவில்லை உண்மையான உழைப்பைக் கண்டு அவனுக்கே பொறாமை வந்து விட்டது போலும் கடுமையான நோயை உங்களுக்கு கொடுத்து விட்டான். இறுதியான உங்கள் சிகிட்சையின் பின் நீங்கள் திரும்பி வருவீர்கள் என்று எதிர்பார்த்த எனக்கு ...........? இறுதியாக தங்களை பார்க்க கொழும்பிற்கு வந்த பொழுது வெளியில் யாருக்கும் காட்டிகொள்ளாவிட்டாலும் என் மனம் சிதறிய சிந்தனையுடனும் உடைந்த உள்ளத்துடனும் தான் இருந்தது. நீங்கள் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்த பொழுது அந்நிலை கண்டு இறைவா என் அண்ணனை, என் அப்பாவை கொஞ்ச நாள் இருக்கவிட மாட்டாயா? என்று உள்ளத்தால் கதறி இறைவனை கெஞ்சிய நேரம் அது.

இறுதியாக நேரமாகின்றது கண்டிக்கு செல்ல வேண்டுமே என்று அன்புடன் போய் வரும்படி என்னைக் கூறிய பொழுது என் அப்பாவிற்கு இறுதியாக செய்யகிடைத்த அந்த சிறு பணியை எனது பாக்கியமாக கருதி அதை செய்து விட்டு விடைபெற்ற போது என்னை முத்தமிட்டு வழியனுப்பி வைத்தார். அது தான் இறுதியாக விடைபெறும் முத்தமென்று நான் நினைத்திருக்கவில்லை. அண்ணன் இறந்த செய்தி கேட்டு நான் ஆச்சரியப்படவில்லை. உள்ளுணர்வில் எமக்கிடையேயான உறவை உள்ளத்தால் உணர்ந்தேன்.

அண்ணா உங்கள் இறுதிக்கிரியைகளை தங்கள் விருப்பப்படி செய்யக் கிடைத்தது என் பாக்கியம் எனக் கருதி என்னால் முடிந்த அனைத்தையும் செய்து முடித்தேன். இனி என்ன செய்ய முடியும்? உங்கள் சேவை முடிந்தது ஆனால் ஒன்றை மட்டும் உணர்ந்தேன் எனக்கு அண்ணனாக, அப்பாவாக, ஆசானாக எல்லா வகையிலும் உணர்வுகளை ஊட்டியதை நினைத்து அவ்வழியில் நான் எந்நாளும் என் சேவையை தொடர்ந்திட என் அம்மாவுடன் இணைந்து ஆசீர்வாதத்தை நீங்கள் எனக்கு அள்ளித்தர வேண்டும் என்ற இறுதியாசையோடு விடைபெறுகின்றேன்.

அன்புள்ள
உங்கள் தம்பி
தேவசுந்தரம் (சின்னஉங்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகம் புறப்படட்டும்

மலையகத்தான் என்றிட்டால்
மனங் கூசி நடுநடுங்கித்
தலை கவிழ்ந்து நின்ற எங்கள்
தன்மையெல்லாம் மாறியதால்
நிலை குலையா நெஞ்சோடு
நிமிர்ந்த நடை பயின்று சக்தி
விலை யேறப்பெற்று நாம்
விளங்குகின்ற காலம் இது

மடைமையிலே ஊறி நின்று
மாக்களாய் வாழ்ந்த எம்மை
அடிமைகளாய் நினைக்கின்றார்
அதிகார வெறி பிடித்தோர்
மடையருக்கு மதி புகட்ட
மலையகம் புறப்படட்டும்-இனிமேல்
கொடுமைகள் ஒழியட்டும்! எம்
குறைகளும் அழியட்டும்!

கந்தனைக் கை கூப்பி என்றும்
கதி நீயே யென்றிருந்தோம்
நிந்தனையே உடைமைகளாய்
நேரிய வாழ் வழிந்தோம்
சிந்தனைகள் இளைஞர்களைச்
சீர் வழியில் நடத்துவதால்-யார்க்கும்
வந்தனைகள் இனிச் செய்வோம் நாம்
வாய்புதைத்து வாழ்த்து ரையோம்

அமரர் எம். நாமதேவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org